# உரிமைத் தமிழ்த் தேசம்

தமிழ்த் தேசிய விடுதலை இயக்கத் திங்களேடு

உரிமை: 4தேசம்: 1 திருவள்ளுவர்ஆண்டு 2051 மார்கழி / டிசம்பர் 2020 ஆசிரியர்: **தியாகு** பொறுப்பாசிரியர்: சமந்தா

தோழர் தியாகுவின் அறிவுக் குரல் கேட்க https://www.youtube.com/watch?v=NaMbPqrXqPo&feature=youtu.be


## தேசத்தின் குரல்:

# ஜூலியன் அசாஞ்சை விடுதலை செய்!



இராக்கில் அமெரிக்க இராணுவம் மேற்கொண்ட கமுக்க நடவடிக்கைகளை உலகறியச் செய்தது அமெரிக்காவின் பகை நாடுகளோ இராக்கிய அரசியல் ஆற்றல்களோ அல்ல. அந்தக் கமுக்க நடவடிக்கைகளின் காணொலியையே வெளியிட்டவர் விக்கிலீக்ஸ் அமைப்பை நிறுவிய ஜூலியன் அசாஞ்ச். பிற நாட்டுத் தலைவர்கள் பற்றிய அமெரிக்க அரசின் கமுக்க மதிப்பீடுகளை அமெரிக்க அரசுக்கும் அதன் தூதகங்களுக்கும்

## உள்ளே...


1. தேசத்தின் குரல் -1
2. அரசியல் வகுப்பும் சூழலியல் வகுப்பும்- 4
3. கீழ்வெண்மணி – குடைசாய்ந்த நீதி! - கே. சந்துரு- 5
4. சூதாட்டரங்கமான பாஜக அரசு- 20
5. செங்காட்டான் குறிப்புகள் 28
6. “வெண்மணி வெறும் கூலிக்கான போராட்டம் அல்ல!” -31
7. கியூபாவின் புரட்சிப்பெண்கள் (9)-38
8. அரசியல் வகுப்பு: பாடக் குறிப்புகள் -48
9. நக்வெய்ன் மார்க்சியப் பள்ளியில் (13)-52
10. டாலருக்கு வந்த வாழ்வு (8)- 55
11. சூழலியல் வகுப்பு(1)-69



பதிவு எண் :R.Dis. No. 1964/2014

இடையிலான மின்னஞ்சலைப் பிரித்துத் திறந்து உலகறியச் செய்தவர் அசாஞ்ச்.

தூதரகங்கள் அனுப்பிய ஆயிரக்கணக்கான கமுக்கச் செய்திகளை அவர் அம்பலமாக்கினார். அவர் அம்பலமாக்கிய செய்திகளில் ஒன்று இலங்கைத் தீவின் சிங்கள அரசுக்கு ஆதரவாக இந்திய அரசின் கமுக்கச் செயல்பாடுகள் பற்றியதாகும்.

அமெரிக்காவுக்கு மட்டுமின்றி மேலை நாடுகள் பலவற்றுக்கும் விக்கிலீக்ஸ் சிம்மசொப்பனம் ஆயிற்று. அரசு இரகசியங்கள் எல்லாம் இப்படி அம்பலத்துக்கு வந்தால் என்னாவது? என்று துடித்துப் போயின. மறுபுறம் விக்கிலீக்ஸ் செய்த பணியால் மக்களுக்குப் பல உண்மைகள் தெரிய வந்தன. உண்மையான குடியாட்சிய ஆற்றல்கள் இந்தப் பணியை மதித்துப் போற்றின.

விக்கிலீக்சும் ஜூலியன் அசாஞ்சும் பல்வேறு அரசுகளின் கடுங்கோபத்துக்கு ஆளாயினர். குடிமக்களுக்குத் தனிமையுரிமை உண்டென்பதையே மறுதலிக்கும் இந்த அரசுகள் தமக்கு மட்டும் கமுக்கங்களைக் காத்துக் கொள்ளும் தனிசிறப்புரிமை இருப்பதாகக் கருதிக் கொள்கின்றன. குடியாட்சியத்தின் இன்றியமையாக் கூறாகிய வெளிப்படைத் தன்மையை இவை கடைப்பிடிப்பத்தில்லை. தலைமையமைச்சர் ஆனாலும் குடியரசுத் தலைவர் ஆனாலும் அமைச்சர் ஆனாலும் நீதியர் ஆனாலும் படைத் தலைவர் ஆனாலும் அரசமைப்புச் சட்டம் காப்போம் என்று மட்டும் ஆணையிட்டு உறுதியேற்பதில்லை. அவர்கள் அரசு இரகசியங்களைக் காப்பதாகவும் ஆணையிட்டு உறுதியேற்கின்றார்கள். இதற்காகவே அதிகாரவழி இரகசியங்கள் சட்டம் (Official Secrets Act) போன்ற சட்ட ஏற்பாடுகளும் உள்ளன. யாரிடமிருந்து இரகசியங்களைக் காக்க வேண்டுமாம்! அவர்கள் யார் பெயரால் அதிகாரம் செலுத்துகின்றார்களோ அந்த மக்களிடமிருந்துதான்! இதற்குப் பெயர் குடியாட்சியம்!

மக்களின் வரிப் பணத்தைக் கோடி கோடியாய் செலவிட்டு அரசுகள் போர்க் கருவிகள் வாங்கிக் குவிக்கின்றன. இவ்வகையில் செய்யப்படும் பேரங்கள் இராணுவ இரகசியங்கள் என்று மக்களிடமிருந்து மறைக்கப்படுகின்றன. இப்படித்தான் ரபேல் போர் வானூர்திகள் தொடர்பான பேரத்தை வெளிப்படுத்த முடியாது என இந்திய அரசு உச்ச நீதிமன்றத்திலேயே நிலையெடுத்தது.

அரசியல் கட்சிகளுக்குப் பணம் கிடைக்கும் வழியை வாக்காளர்களுக்குச் சொல்லத் தேவையில்லை என்று இந்திய அரசின் தலைமைச் சட்டத்தரணியே உச்ச நீதிமன்றத்தில்

வாதிட்டார்.

இந்தியாவில் மட்டுமல்ல, குடியாட்சியம் உயர்ந்தோங்கி விளங்குவதாகப் பீற்றிக் கொள்ளும் மேலை நாடுகளிலும் இதே நிலைதான்!

இந்தப் பொய்மையைத் தோலுரித்த வீரர் ஜூலியன் அசாஞ்சை எல்லா அரசுகளும் சேர்ந்து விரட்டி விரட்டி வேட்டையாடத் தொடங்கின, சுவீடன் அரசு அவர் மீது பாலியல் வல்லுறவு வழக்கு தொடர்ந்தது. அமெரிக்க அரசு அவருக்கு வாழ்நாள் முழுக்கச் சிறைதான் என்னும் படியான வழக்குகளைத் தொடுத்துள்ளது.

2012ஆம் ஆண்டு இலண்டனில் ஈக்வேடார் நாட்டுத் தூதரகத்தில் அவர் தஞ்சமடைந்தார். சென்ற ஆண்டு வரை அங்கேயே தங்கியிருந்தார். ஆனால் அமெரிக்க வல்லரசின் வற்புறுத்தலால் ஈக்வேடார் அரசு அவருக்கான அடைக்கலப் பாதுகாப்பைச் சட்டப்புறம்பாக விலக்கிக் கொண்டு விட்டது. தூதரக அதிகாரிகள் பிரித்தானிய அதிகாரிகளை அழைத்து அசாஞ்சை அவர்களிடம் ஒப்படைத்து விட்டனர். பிரித்தானிய அதிகாரிகள் அவரைக் கைவிலங்கிட்டுக் கூட்டிச் சென்றனர். ஊடக விடுமையின் மீதான இந்தக் கொடுந்தாக்கு மாந்த உரிமைகள், மாந்த கண்ணியத்தின் மீது நம்பிக்கை கொண்டவர்களை அதிர வைத்தது. 2018ஆம் ஆண்டு துருக்கியில் சவூதித் தூதரகத்துக்குள் ஊடகர் ஜமால் கசோகியை வரவழைத்து வெட்டிக் கொன்றது போன்ற கொடுஞ்செயல் இது. ஆனால் பிரித்தானியத் தலைமையமைச்சரும் நாடாளுமன்றமும் அசாஞ்சைத் தளைப்படுத்திய செயலை வெளிப்படையாக மகிழ்ந்து கொண்டாடியதிலிருந்து அவர்களின் கொடுநெஞ்சை அறிய முடிந்தது.

சுவீடன் அரசு அசாஞ்ச் மீதான தன் பொய் வழக்கை விலக்கிக் கொண்டு விட்டது. நமக்காக இருட்டுலகில் ஒளிபாய்ச்சிய அசாஞ்ச் இருட்சிறையில் அடைபட்டுக் கிடக்கிறார். அவரை அமெரிக்காவுக்குக் கொண்டுசெல்லும் முயற்சி தீவிரமடைந்துள்ளது. அவர் உளவியல் சித்திரவதைக்கு ஆளாக்கப்ப்ட்டு வருவதாகச் செய்திகள் வருகின்றன.

அவரை விடுதலை செய்வதற்கான உலகளாவிய இயக்கத்தில் இந்தியாவிற்கும் தமிழ்நாட்டிற்கும் பெரிய பங்கில்லை என்பது பெருங்குறை. இந்தக் குறையை மாற்றுவோம்!
ஜூலியன் அசாஞ்சை விடுதலை செய்யக் கோரும் இயக்கத்தை வீச்சுடன் முன்னெடுப்போம்,

## அரசியல் வகுப்பும் சூழலியல் வகுப்பும்:

## தோழர் தியாகுவின் தொடர் அரசியல் வகுப்பு "தமிழ்நாடு இனி"

தமிழ்த் தேசிய விடுதலை இயக்கத்தின் பொதுச் செயலாளரும் உரிமைத் தமிழ்த்தேசம் ஆசிரியரும் ஆபேல் சிறப்பாசிரியருமாகிய தோழர் தியாகு புதன் கிழமைதோறும் இந்திய நேரம் இரவு 7 தொடக்கம் "தமிழ்நாடு இனி" என்ற தலைப்பில் தொடர் அரசியல் வகுப்பு நடத்தி வருகிறார். சூம் (Zoom) செயலியின் ஊடாக இவ்வகுப்பு நடைபெறுகிறது. அரசியல் வகுப்பு என்ற முகநூல் பக்கத்தில் நேரலையாகவும் காணலாம். விருப்பமுள்ள எவரும் இணையலாம். இது வரை ஆறு வகுப்புகள் நடந்துள்ளன. ஏழாம் வகுப்பு வரும் 2020 திசம்பர் 23ஆம் நாள் புதன் இரவு 7 மணிக்குத் தொடங்கும். இந்தத் தொடர் வகுப்பில் சூம் அரங்கில் இணைவதற்கான குறியீடு எப்போதும் ஒன்றே, கடவும் அவ்வாறே. தொடர் சூம் குறியீடு: **864 136 8094.** கடவு: **12345**.

[பழைய வகுப்புகளின் காணொலிப் பதிவுகள் வேண்டுவோர் உரிமைத் தமிழ்த் தேசம் மின்னஞ்சல் முகவரிக்கு எழுதுங்கள்:**urimaithamizhthesam@gmail.com**]

## தோழர் சமந்தாவின் தொடர் சூழலியல் வகுப்பு

தமிழ்த் தேசிய விடுதலை இயக்கத்தின் திங்களேடாகிய ***உரிமைத் தமிழ்த்தேசம்*** **பொறுப்பாசிரியரும்,** ***சூழல் அரண்*** **முன்னெடுப்பாளரும்** ***ஆபேல்*** **வடிவமைப்பாளருமாகிய தோழர் சமந்தா வெள்ளிக் கிழமைதோறும் இந்திய நேரம் இரவு 7 தொடக்கம் தொடர் சூழலியல் வகுப்பு நடத்தி வருகிறார்.** சூம் (Zoom) செயலியின் ஊடாக இவ்வகுப்பு நடைபெறுகிறது. அரசியல் வகுப்பு என்ற முகநூல் பக்கத்தில் நேரலையாகவும் காணலாம். விருப்பமுள்ள எவரும் இணையலாம். இது வரை ஆறு வகுப்புகள் நடந்துள்ளன. ஏழாம் வகுப்பு வரும் 2020 திசம்பர் 23ஆம் நாள் புதன் இரவு 7 மணிக்குத் தொடங்கும். இந்தத் தொடர் வகுப்பில் சூம் அரங்கில் இணைவதற்கான குறியீடு எப்போதும் ஒன்றே, கடவும் அவ்வாறே. தொடர் சூம் குறியீடு: **838 5733 8543.** கடவு: **12345.**.

[பழைய வகுப்புகளின் காணொலிப் பதிவுகள் வேண்டுவோர் உரிமைத் தமிழ்த் தேசம் மின்னஞ்சல் முகவரிக்கு எழுதுங்கள்:**urimaithamizhthesam@gmail.com**]

# கீழ்வெண்மணி -- குடைசாய்ந்த நீதி!

**கே. சந்துரு**

**மேனாள் நீதிபதி, சென்னை உயர்நீதிமன்றம்**

## 52 ஆண்டுகளுக்கு முன் கீழ்வெண்மணியில் நடந்ததென்ன?

**"நேத்து வரை கொடுத்ததை வாங்கிகிட்டு போன பயலுவ, இன்னிக்கு குதிக்கிறானுவோ!"**

"சாணிப்பால் கொடுக்காதே, சவுக்கால் அடிக்காதே" என்று சங்கம் அமைத்துக் கொடுமைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்த செங்கொடிச் சங்கத்திற்கு முடிவு கட்டித் தங்களது ஆதிக்கத்தை நிரந்தரமாக்க முயன்ற பண்ணையார்களின் புலம்பல்தான் இவ்வரிகள்.



கீழ்வெண்மணிப் படுகொலைகள் பற்றி உலகம் முழுவதுமுள்ள சமூகவியலாளர்கள் கட்டுரைகள் பல எழுதி விட்டனர். கவிஞர்களின் குமுறல்கள் கவிதைகளாக வெளிப்பட்டன. சில நாவல்களும் வெளிவந்துள்ளன. உயர் நீதிமன்றமும், உச்ச நீதிமன்றமும் குற்றவாளிகளைத் தண்டிக்காமல் விடுவித்து விட்டன என்று பலரும் குற்றம் சாட்டியுள்ளனர். உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு எவ்வாறு பெறப்பட்டது? அதிலிருந்த முரண்பாடுகள் என்ன? உச்ச நீதிமன்ற மேல்முறையீட்டில் நடந்த நிகழ்வுகள் என்ன? என்பது பற்றி இதுவரை பதியப்படவில்லை.

**<u>அதற்கு முன்னால் சிறிய பின்னோட்டம் --</u>**

15 ஆண்டுகள் தமிழகத்தை ஆண்ட காங்கிரஸ் கட்சியின் இறுதி முடிவு 1967 தேர்தல்களில் எழுதப்படுகிறது. அறிஞர் அண்ணாவின் தலைமையில் தி.மு.க கூட்டணி மகத்தான வெற்றி பெற்று 6.3.1967ல் அண்ணா முதலமைச்சராகப் பதவியேற்கிறார். புதிய சட்டமன்றத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்கு 11 இடங்கள். மார்க்சிஸ்ட் கட்சியின் சட்டமன்றத் தலைவராக சங்கரய்யா அமர்த்தப்படுகிறார். கிழக்குத் தஞ்சையிலிருந்து கே.ஆர். ஞானசம்பந்தமும், பி.ஆர். தனுஷ்கோடியும் மார்க்சிஸ்ட் சட்டமன்ற உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.




கிழக்குத் தஞ்சையில் விவசாயத் தொழிலாளர்கள் சங்கம் கூலி உயர்வு கேட்டு இயக்கம் தொடங்குகிறது. அது வரை கலம் நெல் அறுவடைக்கு நாலரை படி கூலி கேட்ட தொழிலாளர்கள், கூலியை உயர்த்தித் தரும்படியும், பல்வேறு பிடித்தங்களை நிறுத்தும்படியும் கோரிக்கை வைக்கிறார்கள்.

அக்டோபர் 1967இல் தோழர்கள் சங்கரய்யாவும், ஏ.பாலசுப்பிரமணியமும் விவசாயத் தொழிலாளர்கள் சார்பாக முதலமைச்சர் அண்ணாவைச் சந்தித்து முறையிடுகிறார்கள். குறுவை அறுவடை நேரத்தில் கிழக்குத் தஞ்சை கொதிக்கிறது. மாநில அரசு தலையிட்டுப் பேச்சுவார்த்தை மூலம் கூலிப் பிரச்சினையைத் தீர்த்து வைக்கும்படி கோரிக்கை வைக்கப்படுகிறது.

மிராசுதார்கள் போராட்டங்களை முறியடிப்பதற்கு புதிய உத்திகளைக் கையாளுகிறார்கள். நில உரிமையாளர் சங்கம் என்ற பெயரை மாற்றி விட்டு, நெல் உற்பத்தியாளர் சங்கம் என்ற புதிய அமைப்பை உருவாக்கி அதன் தலைவராக இரிஞ்சூர் கோபாலகிருஷ்ண நாயுடு நியமிக்கப்படுகிறார்.

பதிவு எண் :R.Dis. No. 1964/2014



தஞ்சை மாவட்டத்திற்குச் சிறப்புக் காவல்படை அனுப்பப்படுகிறது. பூந்தாழங்குடி கிராமத்தில் ஏற்றிய சிகப்புக் கொடியை அகற்றுவதைத் தடுக்க முயன்றவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதில் ஒரு விவசாயத் தொழிலாளியின் உயிர் பறிக்கப்படுகிறது.
இன்னும் அதிகமான உணர்ச்சிக் கொந்தளிப்பினால் தஞ்சை மாவட்ட ஆட்சியர் ரங்கபாஷ்யம் முத்தரப்பு மாநாடு கூட்டுகிறார். இடைக்கால ஏற்பாடாக அரை லிட்டர் கூலிஉயர்வும், ஆறு லிட்டர் கொடுக்கப்படும் இடங்களில் அதைத் தொடரவும், மாநில அரசு ஆணையத்தை உருவாக்கி, எதிர்வரும் காலங்களில் கூலிஉயர்வை முடிவு செய்யவும் ஒத்துக்கொள்ளப்படுகிறது.

மிராசுகளும், அரசு அதிகாரிகளும் இந்த ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதில் ஒத்துழைப்பு தர மறுக்கிறார்கள். சில இடங்களில் கூலி உயர்வு தர மறுத்த நிலச்சுவான்தார்களின் நிலத்தில் விவசாயத் தொழிலாளர்கள் கட்டாய அறுவடை செய்து தங்களுக்கு உரிய கூலியை எடுத்துக் கொண்டு அறுவடைக்கான தானியங்களை களத்துமேட்டில் விட்டுச் சென்ற சம்பவங்களும் நடைபெற்றன. அச்சமயத்தில் விவசாயத் தொழிலாளர் கிளைச் சங்கத் தலைவர் சின்னப் பிள்ளையைக் கடத்திச்சென்று கொலை செய்து விடுகின்றனர். விவசாயத் தொழிலாளர் கூலிப் பிரச்சனைக்கான மாநாட்டை அரசு கூட்ட மறுக்கிறது.

பேச்சுவார்த்தைகள் மூலம் கூலிப் பிரச்சினையைத் தீர்க்காமல், காவல்படையை அனுப்பும் முயற்சியை அரசு மேற்கொள்கிறது. எதிர்ப்புப் போராட்டங்களில் நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் கைது செய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப்படுகிறார்கள். கீவளூர் காவல் நிலையத்திற்கு உட்பட்ட கிராமம்தான் கீழ்வெண்மணி. அங்கு மட்டும் 12 லாரிகளில் காவல்படை இறக்கப்படுகிறது. தொழிலாளிகளுக்குப் பாதுகாப்பற்ற தன்மையைக் கண்டித்து மார்க்சிஸ்ட் தலைவர் பி.ராமமூர்த்தி அறிக்கை விடுகிறார். "எங்கள் ஊழியர்களுக்கு அரசு பாதுகாப்பு அளிக்க மறுத்தால் நாங்களே தொண்டர் படையை உருவாக்கிப் பாதுகாப்பு அளிப்போம்" என்று

எச்சரிக்கிறார். 15.11.1968 தேதியன்று சிக்கல் கிராமத்தைச் சேர்ந்த தோழர் பக்கிரியின் கொலையைக் கண்டித்து தேவூர், திருவாரூர், இலுப்பூர், கருவேலி, ஆவூரணி, சிக்கல், புதுச்சேரி, மஞ்சக்கொல்லை இங்கெல்லாம் கண்டனக் கூட்டங்கள் நடத்தப்பட்டன.

நெல் உற்பத்தியாளர் சங்கமும் அதன் தலைவர் கோபாலகிருஷ்ண நாயுடுவும் போராடும் விவசாயத் தொழிலாளர்களைத் தாக்குவதற்குக் குறிவைத்து டிசம்பர் 25, 1968 தினத்தைத் தேர்ந்தெடுத்ததற்குக் காரணமும் உண்டு. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் 8ஆவது அகில இந்திய மாநாடு கொச்சியில் (கேரளா) 23 முதல் 29ஆம் தேதி வரை நடைபெற்றது. கீழத் தஞ்சையில் தேர்ந்தெடுக்கப்பட்ட இரண்டு எம்.எல்.ஏக்கள் உட்பட அனைத்து விவசாய மற்றும் விவசாயத் தொழிலாளர் சங்கத் தலைவர்கள் மாநாட்டுப் பிரதிநிதிகளாகக் கொச்சிக்குச் சென்று விடவே, மிராசுதார்களின் சூழ்ச்சி தடையின்றி செயல்படுத்தப்பட்டது.

25ஆம் தேதி இரவு 10 மணிக்குக் கீழ்வெண்மணியிலுள்ள 30 குடிசைகளுக்கு சட்டவிரோதக் கும்பலால் தீ வைக்கப்பட்டது. ராமய்யாவின் குடிசையில் வன்முறைப் பயத்தினால் ஒளிந்திருந்த 44 பேர் (பெண்கள், முதியவர்கள் உட்பட) குடிசைக்குள் கருகி உயிரிழந்தனர். எதிர்பட்ட ஆண் தொழிலாளர்கள் துப்பாக்கியால் சுடப்பட்டனர். சிலருக்கு அரிவாள் வெட்டும், சுளுக்கி மற்றும் தடியினால் பலத்தக் காயங்களும் ஏற்பட்டன. குண்டடி பட்ட முனியன் (முதல் சாட்சி) தனது புகாரில் தாக்கவந்த கூட்டத்தில் நெல் உற்பத்தியாளர் சங்கத் தலைவர் கோபாலகிருஷ்ண நாயுடுவும் இருந்ததைக் குறிப்பிட்டுக் கூறியிருக்கிறார். இந்தக் கலவரத்தில் வெளியூரிலிருந்து அறுவடைக்காகக் கூட்டிவரப்பட்ட கூலித்தொழிலாளர் பக்கிரிசாமியும் கொல்லப்பட்டார்.

அதிர்ச்சித் தகவலைக் கேள்விப்பட்ட முதலமைச்சர், ஐ.ஜி., டி.ஐ.ஜி, மற்றும் மாவட்டக் கண்காணிப்பாளர் அனைவரையும் கீழ்வெண்மணிக்கு அடுத்த நாளே அனுப்பி வைத்தார்.

மார்க்சிஸ்ட் கட்சி மாநாட்டில் கலந்து கொள்ளச் சென்றிருந்த தஞ்சை விவசாயத் தொழிலாளர் தலைவர்கள் உடனடியாகத் திரும்பிவர இயலவில்லை. விரைவில் திரும்பி வந்த மார்க்சிஸ்ட் தலைவர் பி.ராமமூர்த்தி கீழ்வெண்மணியைப் பார்வையிட்டு, பலத்த கண்டன அறிக்கையை வெளியிட்டார். உள்ளூர்க் காவல்துறை மீது அதிருப்தி தெரிவித்ததனால் வழக்கு விசாரணை (முதல் தகவல் அறிக்கை எண்.327 / 1968) மத்தியக் குற்றக் காவல் பிரிவிற்கு 1.1.69இல் மாற்றப்பட்டது.

முதல் குற்றவாளியாக நெல் உற்பத்தியாளர் சங்கத் தலைவர் இரிஞ்சூர் கோபாலகிருஷ்ண நாயுடு மீதும் மற்றும் 22 பேர்கள் மீதும் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு கீழத்தஞ்சை செஷன்ஸ் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. அவ்வழக்கில் கோபாலகிருஷ்ண நாயுடுவின் மீதும், அவரது நெருங்கிய உறவினர்கள் மீதும் கொலை செய்ததற்காக இ.பி.கோ 302இன் கீழும், ஆயுதச் சட்டத்தின் கீழும் வழக்கு பதியப்பட்டது.

அதேசமயத்தில் கலவரத்தில் இறந்துபோன பக்கிரிசாமி மரணத்தைக் கொலை வழக்காக கீவளூர் காவல் நிலையம் முதல் தகவல் அறிக்கை 328/1968ஆகப் பதிவு செய்தது.

## தஞ்சை விசாரணை நீதிமன்றத் தீர்ப்பு:

செஷன்ஸ் நீதிபதி சி.எம்.குப்பண்ணன் முன்னால் இரண்டு வழக்குகளும் விசாரணைக்கு வருகின்றன. முதல் வழக்கு பக்கிரிசாமி கொலை சம்பந்தமாக கோபால் (A1) மற்றும் 22 பேர் மீது போடப்பட்ட வழக்கு. கோபால் (A1) மீது கொலைக் குற்றம் சுமத்தப்படுகிறது. இவ்வழக்கில் கோபாலுக்கு ஆயுள் தண்டனையும், இரண்டாவது குற்றவாளி ராமய்யனுக்கு 5 வருடமும் மற்ற 4 பேர்களுக்கு 2 வருடமும் கடுங்காவல் சிறைத் தண்டனை வழங்கப்படுகிறது. 8 பேர் விடுதலை செய்யப்பட்டார்கள். இவ்வழக்கில் மொத்தம் 79 சாட்சிகள் விசாரிக்கப்பட்டனர்.

இவ்வழக்கில் தீர்ப்பளித்த அன்றே (30.11.1970) கீழ்வெண்மணியில் 44 பேரைக் குடிசையில் வைத்து எரித்த வழக்குக்கும் தீர்ப்பளிக்கப்படுகிறது. அந்த வழக்கிலும் 23 குற்றவாளிகள் நீதிமன்றத்தின் முன்னால் நிறுத்தப்படுகிறார்கள்.

கீழ்வெண்மணி வழக்கில் கோபாலகிருஷ்ண நாயுடுவுக்கும் மற்றும் 8 பேர்களுக்கும் 10 ஆண்டுகள் கடுங்காவல் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. சட்டவிரோதமாகக் கூடி சட்டத்துக்குப் புறம்பான காரியங்களைச் செய்ததாகவும், தீயிட்டு அழித்ததற்காகவும் அந்தத் தண்டனை அளிக்கப்பட்டது. கொலை முயற்சியில் ஈடுபட்டதற்காக அதில் 5 பேருக்கு 7 ஆண்டுக் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டதேயொழிய கொலைக் குற்றத்திலிருந்து அனைவரும் விடுவிக்கப்பட்டனர்.

இவ்விரு செஷன்ஸ் வழக்குகளிலும் ஒரே மாவட்ட நீதிபதி முன்னால் விசாரணை

நடைபெற்றாலும் இவை தனித்தனி வழக்காக விசாரிக்கப்பட்டன. முதல் வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட சிலர் இரண்டாம் வழக்கில் சாட்சிகளாகவும், இரண்டாம் வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட சிலர் முதல் வழக்கில் சாட்சிகளாகவும் இருந்தனர். குறிப்பாக கீழ்வெண்மணி வழக்கில் முதல் குற்றவாளியான கோபாலகிருஷ்ண நாயுடு பக்கிரிசாமி கொலைவழக்கில் முதல் சாட்சியாக இருந்தார்.

**கோபால் செய்த மேல்முறையீடுகளை உயர் நீதிமன்றமும், உச்ச நீதிமன்றமும் நிராகரிப்பு:**

சென்னை உயர் நீதிமன்றத்தில் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட கோபாலும் 5 வருடக் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்ட ராமய்யனும் மேல்முறையீடு செய்தனர் (Crl.A.No.23/1971). கீழ்வெண்மணி கொலை வழக்கில் குற்றவாளிகள் செய்த மேல்முறையீடு (Crl.A.No.1208/ 1970) கோபால் வழக்கிற்கு முன்னாலேயே தாக்கல் செய்யப்பட்டது. மேலும் அவ்வழக்கில் செஷன்ஸ் நீதிமன்றத்தில் விடுதலை செய்யப்பட்டவர்களுக்கு எதிராக தண்டனை தரும்படி அரசுத்தரப்பில் போடப்பட்ட மேல்முறையீடும் கோபால் வழக்கிற்கு முந்தையதே. ஆனால் என்ன காரணமோ முன்னர் தாக்கல் செய்த மேல்முறையீடுகள் பட்டியலிடப்படவில்லை. மாறாக, கோபாலின் மேல்முறையீடு பட்டியலிடப்படுகிறது. அதை விசாரித்த இரு நீதிபதிகள் அமர்வில் மூத்த நீதிபதி திரு.கே.என்.முதலியார் கண்டிப்புக்குப் பெயர் போனவர். ஒருவேளை அக்காரணத்தினால்தான் கீழ்வெண்மணி மேல்முறையீடுகள் பட்டியலில் ஏற்றப்படவில்லையோ, யாருக்குத் தெரியும்?

நீதிபதிகள் செஷன்ஸ் கோர்ட் தீர்ப்பை உறுதி செய்து கோபாலுக்கு ஆயுள் தண்டனையையும், ராமய்யனுக்கு 5 வருட கடுங்காவல் தண்டனையையும் உறுதி செய்கிறார்கள் (4.8.1972).

அவர்கள் சார்பில் உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்படுகிறது. இடதுசாரி வழக்கறிஞரான ஆர்.கே.கர்க் ஆஜராகிறார். அம்மேல்முறையீடு 13 ஆண்டுகளுக்குப் பிறகு எடுத்துக்கொள்ளப்பட்டு 30.1.1986இல் தள்ளுபடி செய்யப்படுகிறது. வழக்கை விசாரித்த நீதிபதிகள் இவ்வழக்கையும் இதர கிரிமினல் குற்றச்சாட்டுகள் போல் விசாரித்து விசாரணையிலுள்ள ஓட்டைகளுக்கெல்லாம் சமாதானம் சொல்லி உயர் நீதிமன்றத்தின் முடிவில் தலையிட விருப்பமில்லை என்று தெரிவிக்கிறார்கள். ஏற்கேனவே தண்டனை அனுபவித்து வந்த கோபாலையும், ராமய்யனையும் முன்கூட்டியே விடுதலை செய்யவும் மறுக்கிறார்கள்.

**கீழ்வெண்மணி வழக்கில் உயர்நீதிமன்றத்தில் நடந்த விசித்திரங்கள்:**

கீழ்வெண்மணி கொலை வழக்கை உயர் நீதிமன்றம் அணுகிய விதம் உணர்ச்சியுள்ள எவரையும் கொதிக்க வைக்கும். வழக்கு சென்னை மத்தியக் குற்றவியல் காவல்துறையினால் விசாரிக்கப்பட்ட போதும் நீதிபதிகள் காவல்துறையின் துப்புத்துலக்கைக் குறை கூறியதுடன், மாவட்ட செஷன்ஸ் நீதிபதியின் தீர்ப்பையும் குறை கூறினர்.



கீழ்வெண்மணி மேல்முறையீடுகள் வேறு இரு நீதிபதிகள் அமர்வில் விசாரணைக்குப் பின்னர் எடுத்துக்கொள்ளப்பட்டதைப் பார்த்த அரசுத்தரப்பு ப்ராசிக்யூடர் நீதிபதிகளிடம் ஒரு வேண்டுகோள் வைத்தார். பக்கிரிசாமி கொலைவழக்கும், கீழ்வெண்மணியில் 44 பேர் கொல்லப்பட்ட வழக்கும் ஒரே செஷன்ஸ் நீதிமன்றத்தால் விசாரிக்கப்பட்டு தண்டனை வழங்கப்பட்டது. சாட்சிகளும் குற்றவாளிகள் பலரும் இவ்விரு வழக்குகளிலும் சம்பந்தப்பட்டவர்கள். எனவே கீழ்வெண்மணி கொலை மேல்முறையீட்டு வழக்கு, பக்கிரிசாமி வழக்கை விசாரித்த அதே நீதிபதிகள் அமர்வு விசாரிப்பது உசிதமாக இருக்கும் என்று வேண்டுகோள் விடுத்தார். அந்த வேண்டுகோளுக்கு நீதிபதிகள் செவிசாய்க்காமல் விசித்திரமான காரணத்தைத் தங்களது தீர்ப்பில் பதிவுசெய்தனர்:

”தொடர்புடைய வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட கிசான்களில் பெரும்பாலோர், மிராசுதார்களுக்கான இந்த வழக்குகளில் அரசுத் தரப்பு சாட்சியங்களாக இடம்பெற்றுள்ளனர். ஒரே அமர்வு நீதிபதி இந்த இரண்டு வகையான வழக்குகளையும் தனித்தனியாக விசாரித்து இரு வழக்குகளிலும் ஒரே நாளில் தீர்ப்பளித்தது அவருக்கு அனுகூலமாக இருந்தது. இந்த இருவகை வழக்குகளின் தீர்ப்புகளுக்கும் எதிரான குற்றவியல் மேல்முறையீடுகளை ஒரே ‘பெஞ்ச்’ விசாரித்திருந்தால் நன்றாக இருந்திருக்கும். இத்தகைய தொடர்ச்சியால், பல்வேறு சம்பவங்களைக் கொண்ட பல்வேறு

நிகழ்வுகளுக்கான முழுத்தன்மையை நீதிமன்றம் எளிதாக அறிந்திருக்க முடியும். இருப்பினும் மிகப் பெரும் சிரத்தை எடுத்து இந்த நீதிமன்றத்திற்கு சம்பவங்கள் நடந்தது பற்றியும் இவை நடந்த காலம் பற்றியும் மிகச்சரியாக முழு விவரத்தையும் அளித்த மதிப்புக்குரிய அரசு வழக்கறிஞருக்கும் எதிர்த்தரப்பு வழக்கறிஞருக்கும் நாங்கள் மிகுந்த நன்றியுடையவர்களாவோம்."

முதல் குற்றவாளியான கோபாலகிருஷ்ண நாயுடு நெல் உற்பத்தியாளர் சங்கம் சார்பாக 11.4.1968ம் தேதி மாநில முதலமைச்சருக்கு அனுப்பிய கடிதம் முழுவதையும் தங்கள் தீர்ப்பில் மேற்கோள் காட்டினர். 95 பக்கம் தட்டச்சு செய்த அத்தீர்ப்பில் இக்கடிதம் மட்டும் மூன்று பக்கங்களை ஆக்கரமித்துக் கொண்டது. அதைப் பற்றி தீர்ப்பில் இவ்வாறு குறிப்பிட்டார்.

"இதுவே "மாவோயிஸத்தின் விளை நிலைமாகும்" என்பது முதல் எதிரியின் கருத்தாகும். சென்னை மாகாண முதலமைச்சருக்கு 11.4.1968 அன்று முதல் குற்றவாளியால் அனுப்பப்பட்ட மனுவில் (தட்டச்சு செய்யப்பட்ட தொகுப்பு பக்கம் 64 பார்க்க) இது முதல் எதிரி கூறியுள்ள புகார்"

கடிதத்தை முழுவதுமாக பதிவு செய்த நீதிபதிகள், அது குறித்த தங்களது கருத்தையும் இவ்வாறு பதிவு செய்தனர்:

"மனுதாரர் தனது பாதுகாப்பு மற்றும் தனது குடும்ப உறுப்பினர்களின் பாதுகாப்பு குறித்து ஐயுற்று அச்சம் கொண்டிருக்கிறார். அவர் இப்போதெல்லாம் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு இருந்துள்ளார். மனுதாரருக்கு எதிரான, திட்டமிடப்பட்டுள்ள, அலைவீசும் வன்முறையை சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்கும் படையினர் எதிர்கொண்டு தடுத்து நிறுத்தா விட்டால் மனுதாரர் ஒரு நடைபிணமாகத்தான் இருப்பார்."

நெல் உற்பத்தியாளர் சங்கம் முதலமைச்சருக்கு எழுதியதாக சொல்லப்பட்ட இக்கடிதம் விசாரணை நீதிமன்றத்தில் அரசுத் தரப்பு ஆவணமாகவோ அல்லது எதிர் தரப்பு ஆவணமாகவோ பதிவு செய்யப்படாத ஒன்று. குற்றவியல் மேல்முறையீட்டில் கீழமை விசாரணை நீதிமன்றத்தில் நடைபெற்ற விசாரணையின் போது பதிவு செய்யப்படாத ஆவணங்களை மேற்கோள் கூட காட்ட முடியாது.

இந்த ஆவணத்தை நீதிபதிகள் தீர்ப்பில் ஒன்றுக்கும் மேற்பட்ட இடத்தில் குறிப்பிட்டதோடு, அவர்

மீது பொய்க்குற்றம் சாட்டுவதற்கு இடது கம்யூனிஸ்டு விவசாய சங்கத்திற்குத் தேவை இருந்தது என்று தீர்ப்பின் ஒரு பகுதியில் கூறியுள்ளனர்:

"முதல் குற்றவாளியான நாகப்பட்டினம் தாலுகா நெல் உற்பத்தியாளர் சங்கத் தலைவருக்கும் இடது கம்யூனிஸ்ட் கிசான்களுக்கும் இடையே கசப்புணர்வு இருந்ததை நாம் ஏற்கனவே குறிப்பிட்டுள்ளோம். தனது உயிருக்கு ஆபத்து இருப்பதான சந்தேகத்தையுமு் இடதுகம்யூனிஸ்டுகள் தம்மை குற்றவழக்குகளில் வேண்டுமென்றே சிக்க வைக்க முயற்சி செய்வதையும் குறிப்பிட்டு இந்த சம்பவம் நடப்பதற்கு சில நாட்களுக்கு முன்னால் முதல் குற்றவாளி சென்னை மாகாண முதலமைச்சருக்கு மனு அனுப்பியிருந்ததையும் கூட நாம் ஏற்கெனவே குறிப்பிட்டோம். இவ்வாறு பரஸ்பரம் சந்தேகமும் பகைமையும் கொண்ட மனநிலையில் இந்த வழக்கில் முதல் குற்றவாளியைச் சிக்கவைக்கும் எண்ணத்திற்குத் தடைபோடுவதும் ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என 42 அப்பாவிகளின் சோகமான கொலைப் பழியையும், அதேபோல் துப்பாக்கிக் குண்டுகள், அரிவாள்கள், சுளுக்கிகள், தடிக்கம்புகள் ஆகியவற்றால் மற்றப் பலர் காயப்படுத்தப்பட்ட குற்றத்தையும் அவர் மீது சுமத்தாமல் இருப்பதும் கிசான்களுக்கு சிரமமாகவே இருந்திருக்க வேண்டும். கம்யூனிஸ்ட் ஒருவரின் மரணம் தொடர்பாக பல முக்கியமான கம்யூனிஸ்ட் தலைவர்கள் பக்கத்து கிராமத்திற்கு வந்துள்ளனர். கீழ்வெண்மணியில் நிகழ்ந்த சோக சம்பவம் பற்றி மிகுதியாக அவர்கள் விவாதித்திருக்க வேண்டும்."

முதல் எதிரியான கோபாலகிருஷ்ண நாயுடு மீதும், அவர் சார்ந்தவர்கள் மீதும் விவசாய சங்கத்திற்கு பகை இருந்தது என்று கூறிய நீதிபதிகள், அவர்கள் கலவரத்தில் நேரில் ஈடுபட்டு, குடிசைகளுக்குத் தீ வைத்துத் துப்பாக்கியால் சுட்டதை நேரில் பார்த்த சாட்சிகள் இருந்தபோதும் அதிர்ச்சி அடையும் வகையில் இவ்வாறு குறிப்பிட்டனர்:-

"மேலும் இந்த வழக்கில் சிக்க வைக்கப்பட்டுள்ள அனைத்து 23 குற்றவாளிகளும் மிராசுதார்களாக இருப்பதும் திகைக்க வைக்கும் விஷயமாக உள்ளது. இவர்களில் பெரும்பாலோர் பெருமளவு நிலத்தைச் சொந்தமாகக் கொண்டுள்ள பணக்காரர்கள். முதலாவது குற்றவாளி கார் ஒன்றை சொந்தமாக வைத்திருக்கிறார் என்பது தெளிவு. இத்தகைய மிராசுதாரர்களா இடது கம்யூனிஸ்ட் விவசாயிகளைப் பழிவாங்கும் அளவுக்கு பலவீனமான எண்ணம் கொண்டிருப்பார்கள்? இவர்கள் தாங்களே சம்பவ இடத்திற்கு நடந்து வந்து பணியாளர்கள் உதவி ஏதும் இல்லாமல் வீடுகளுக்குத்

தீவைத்திருப்பார்கள் என்பதை நம்புவதற்கு சிரமமாக உள்ளது. தங்களுக்கென்று ஏராளமான நிலங்களைக் கொண்டுள்ள மிராசுதாரர்கள். மூர்க்கமான மற்றும் பட்டினி கிடக்கிற தொழிலாளர்களை விட அதிகம் பாதுகாப்புடனே இருப்பார்கள். மிராசுதாரர்கள் பின்னால் இருந்து கொண்டு கூலிக்கு அமர்த்திய தங்களின் கையாட்களைக் கொண்டே பல குற்றங்களைச் செய்வார்கள் என்றே எவரும் எதிர்பார்ப்பார்கள்."

சென்னை உயர் நீதிமன்ற நீதிபதிகள் முதல் எதிரியான கோபாலகிருஷ்ண நாயுடு குடிசைகளுக்குத் தீ வைக்கவும் இல்லை, துப்பாக்கியால் சுடவுமில்லை என்ற முடிவுக்கு வந்ததுடன், அவர் சம்பவம் நடந்த இடத்திலேயே இல்லை என்பதற்கான 'அலிபி'யையும் ஏற்றுக் கொண்டுள்ளனர். விவசாய சங்கத் தோழர்களின் சாட்சிகள் இடது கம்யூனிஸ்ட் தலைவர்களின் தூண்டுதலின் பேரில் தயார் செய்யப்பட்டதாகத் தீர்ப்பளித்துள்ளனர்.

உண்மையில் டிசம்பர் கடைசி வாரத்தில் கொச்சியில் நடைபெற்ற கட்சி மாநாட்டிற்கு அனைத்து உள்ளூர் தலைவர்களும் பிரதிநிதிகளாக சென்றிருந்தது அனைவரும் அறிந்ததே. ஆனால் விசாரணை நடத்தி 46 சாட்சியங்களின் வாக்குமூலங்களையும், குறுக்கு விசாரணையையும் பதிவு செய்த மாவட்ட நீதிபதி, கோபாலகிருஷ்ணனின் 'அலிபி'யை நிராகரித்ததுடன் (பத்தி: 177) , அவர் ஒவ்வொரு சம்பவத்திலும் இருந்ததை, சாட்சியங்களுடன் இருந்ததைக் கூறியதுடன், அவருக்கும், இதர பண்ணையார்களுக்கும் 10 ஆண்டுகள் கடுங்காவல் தண்டனை விதித்தற்கு இவ்வாறு காரணம் கூறியிருக்கிறார்:

"இந்தக் குற்றவாளிகள் சட்டத்தைத் தங்கள் கையில் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். வீடுகளுக்கு திட்டமிட்டே தீ வைத்திருக்கிறார்கள்; தீயிடல் மூலம் மூன்று தெருக்களை முற்றிலுமாக அழித்திருக்கிறார்கள். துப்பாக்கியால் சுட்டு இடது கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த விவசாயிகளைக் கொல்ல முயன்றிருக்கிறார்கள்; மேலும் கொடுங்காயமும் ஏற்படுத்தியிருக்கிறார்கள் என்பதில் சந்தேகமே இருக்க முடியாது. இந்தக் குற்றவாளிகள் தீ வைத்தது தொடர்பான சம்பவத்தில் 42 அப்பாவி மக்கள் உயிருடன் எரித்துக் கொல்லப்பட்டுள்ளனர். இந்தச் சூழ்நிலையில் அச்சம் தரும் தண்டனை தேவை என்பது என் கருத்தாக உள்ளது."

44 விவசாயக் கூலித் தொழிலாளர்கள் குடிசையில் வைத்து கொளுத்தப்பட்டது தவிர, சில முன்னணி ஊழியர்களுக்கு துப்பாக்கி குண்டு காயங்கள் பட்டிருந்ததை யாரும் மறுக்கவில்லை.

சம்பவம் நடந்ததற்கு ஒரு மாதம் முன்னராகவே அக்கிராமங்களைச் சுற்றி சிறப்புக் காவல்படை நிறுத்தப்பட்டிருந்தது. சம்பவம் நடந்த தினத்திற்கு இரு நாட்களுக்கு முன்னரே விவசாய சங்கத் தலைவர்கள் 500 கி.மீ தொலைவிலுள்ள கொச்சி நகரில் நடைபெற்ற மாநாட்டிற்கு சென்று விட்டனர். சம்பவம் நடந்த பிறகு அடுத்த நாளே காவல்துறைத் தலைவர் (ஐ.ஜி.மற்றும் டி.ஐ.ஜி, எஸ்.பி.) இவர்களெல்லாம் அங்கு முகாமிட்டுள்ளனர். கிராமத்திற்குள் எவரையும் அனுமதிக்கவில்லை.
இச்சூழ்நிலையில் முக்கியமான சாட்சிகளை விவசாய சங்கத் தலைவர்கள் தூண்டிப் பொய் வாக்குமூலம் கொடுத்திருப்பார்கள் என்றும், கோபாலகிருஷ்ண நாயுடுவை வேண்டுமென்றே வழக்கில் மாட்டவைப்பதற்காகக் காவல்துறை வழக்கில் வாக்குமூலங்கள் பதிவு செய்து காலதாமதமாகச் செயல்பட்டதாகவும் கூறப்பட்டுள்ள தீர்ப்பு ஆதாரமின்றியே வழங்கப்பட்டுள்ளது.

வழக்கை விசாரித்துக் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்த காவல்துறை ஆய்வாளர் உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு நடக்கும்போது வழக்கு ஆவணங்களுடன் உயர்நீதிமன்ற பப்ளிக் ப்ராசிகியூட்டருக்கு உதவும் வண்ணம் நேரில் ஆஜராகி இருந்தார். அவரையும் உயர்நீதிமன்ற நீதிபதிகள் விட்டுவைக்கவில்லை. வழக்கு விசாரணையின் போதே அவரைக் கூப்பிட்டு கேள்விகளைத் தொடுத்துள்ளனர். அவர் கொடுத்த பதில்கள் நம்பக்கூடியதாக இல்லையென்றும் தங்கள் தீர்ப்பில் இவ்வாறு பதிவு செய்தனர் :

"விசாரணை நீதிமன்றத்தில் இந்தத் தாமதம் பற்றிக் குறிப்பாக விசாரணை செய்த ஆய்வாளரின் கவனத்திற்குக் கொண்டு வரப்படவில்லை என்பது உண்மைதான். விசாரணை செய்த ஆய்வாளர் மேல் முறையீடு தொடர்பான விவாதம் முழுமைக்கும் இந்த நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்தார். மிக அதிகமான தாமதம் ஏற்படுவதற்கான காரணத்தைக் கேட்டுச் சொல்லுமாறு மதிப்பிற்குரிய அரசு வழக்கறிஞரிடம் கேட்டுக் கொள்ளப்பட்டது....அ.சா.ஆ.1ஐ உடனடியாக சப்-மாஜிஸ்திரேட்டுக்கு அனுப்புவதற்கு அந்த கிராமத்தின் சட்டம் ஒழுங்கு நிலைமை தடையாக இருந்தது என்பது விசாரணை அதிகாரி அளித்துள்ள இரண்டாவது விளக்கமாகும்.... அ.சா.ஆ.1 பெறப்பட்டதாகக் கூறப்படும் இரவு 11 மணிக்குப் பிறகு ஒரு சிறப்புத் தகவலாளர் மூலம் உடனடியாக அனுப்பியிருந்தால் அவர் பேருந்து மூலம் அல்லது நடந்தே நாகப்பட்டினத்திற்குச் சென்று 26.12.198 அன்று அதிகாலையில் அந்த அறிக்கையை உதவிக் குற்றவியல் நடுவரிடம் அளித்திருக்க முடியும். காவல்துறையின் மூத்த அதிகாரிகள் 26.12.1968 அன்று காலை 9.30 மணிக்கு அந்த கிராமத்திற்கு வந்து விட்டார்கள் என்பது வெளிப்படையானது. கிராமத்திற்கு வந்துவிட்டார்கள் என்பது

வெளிப்படையானது. எனவே, இதன் பிறகாவது அந்த கிராமத்தின் சட்டம் ஒழுங்கு சிக்கலிலிருந்து விடுபட்டதாக விசாரணை அதிகாரி கருதி, விரைவு அறிக்கையை குற்றவியல் நடுவருக்கு அனுப்பியிருக்க வேண்டும்."

இது போன்ற மேல்முறையீட்டு வழக்கு விசாரணையின் போது விசாரணை அதிகாரியை முக்கியமான சம்பவம் பற்றி விளக்கம் கேட்டு அதை நிராகரிப்பதும், விசாரணையின் போது பதிவு செய்யப்படாத ஆவணத்தைக் கணக்கில் எடுத்துக்கொள்வதும் உரிய நடைமுறைகள் அல்ல. எந்தக் காவல் துறையின் விசாரணையை நீதிபதிகள் குறை கூறினார்களோ, அதே காவல் அதிகாரிகளின் விசாரணை நடைமுறையை சந்தேகிக்கும் வகையில் கோபால் வழக்கில் வாதாடப்பட்டது. சாட்சியங்களின் வாக்குமூலங்களை காவல்நிலைய டைரியில் பதிவு செய்யாமல் தனித்தனி தாள்களில் எழுதி வாங்கியுள்ளதைக் காட்டி வாக்குமூலங்கள் காவல்துறையால் மாற்றப்பட்டுள்ளன என்ற வாதத்தை உச்சநீதிமன்றம் கோபால் மேல்முறையீட்டில் ஏற்றுக்கொள்ளவில்லை.

கீழ்வெண்மணி கொலைவழக்கு மேல்முறையீட்டை 1973ல் விசாரித்த நீதிபதிகள் (வெங்கட்ராமன் ஐ.சி.எஸ் மற்றும் மகராஜன்) கோபாலகிருஷ்ண நாயுடுவும் மற்ற குற்றவாளிகளும் போட்ட மேல்முறையீட்டை ஏற்றுக்கொண்டு அவர்களது தண்டனையை ரத்து செய்தனர் (6.4.1973). அதேசமயத்தில் அரசுத்தரப்பில் விடுதலையான குற்றவாளிகளுக்கு எதிராகப் போடப்பட்ட மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டது.

## கீழ்வெண்மணி வழக்கில் மூன்று வருடம் கழித்து அரசு அப்பீல்:

நாட்டையே உலுக்கிய 44 பட்டியலின மக்களின் கொலைவழக்கு இந்த கதியில் முடிவுற்றும் அன்றைய அரசு அதுபற்றி எந்தக் கவலையும் இல்லாமல் இருந்தது. தொடர்ந்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும், விவசாய சங்கங்களும் கொடுத்த நிர்ப்பந்தத்தினால் தி.மு.க அரசின் கடைசிக்காலத்தில் மூன்று வருடங்கள் கழித்து உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டது.

## கோபாலகிருஷ்ண நாயுடு கொலை:

கோபாலகிருஷ்ண நாயுடு, அவரது கூட்டாளிகள் போட்ட வழக்கில் மட்டுமே மேல்முறையீடு செய்யப்பட்டது. அம்மேல்முறையீடு நிலுவையில் இருக்கும் போது 14.12.1980 தேதி

கோபாலகிருஷ்ண நாயுடு இரிஞ்சூர் கிராமத்தில் கொலை செய்யப்பட்டார்.

**உச்ச நீதிமன்றத்தில் நடந்தது என்ன?**

மேல்முறையீடு செய்து 14 வருடங்கள் கழித்து வழக்கு 31.10.1990 அன்று இறுதி விசாரணைக்குப் பட்டியலிடப்பட்டது. அவ்வழக்கை விசாரித்த இரு நீதிபதிகள் அமர்வில் மூத்த நீதிபதி எஸ்.ரங்கநாதன் தன்னுடைய பெரும்பான்மையான சர்வீசை வருமானவரித் தீர்ப்பாயத்தில் கழித்தவர். டெல்லி உயர்நீதிமன்றத்தில் அவர் நியமனம் செய்யப்பட்ட போது கூட அவர் குற்றவியல் வழக்குகளை விசாரித்துத் தீர்ப்பளித்த வழக்குகள் வெகு சொற்பமே. அதே அமர்விலிருந்த நீதிபதி கே. ராமசாமி தனது சமூகநீதித் தீர்ப்புகளுக்காகப் பெயர்பெற்றவராகவிருப்பினும் உச்ச நீதிமன்றத்தில் பதவி உயர்வு பெற்று ஒரு வருடமே ஆனதனால் அமர்வில் அவர் இளையராக இருந்தார்.



தமிழக அரசு சார்பில் நியமிக்கப்பட்ட சிறப்பு வழக்கறிஞர் லலித் அன்று ஆஜராகவில்லை. பதிலாக தமிழக அரசின் வழக்கறிஞர் அன்று மாலை 45 நிமிடம் வாதிட்டதாக உச்சநீதிமன்றப் பதிவேடு கூறுகிறது. மறுநாள் மீண்டும் அவ்வழக்கு பிற்பகல் 12 மணிக்கு வந்தபோது மூத்த வக்கீல் 15 நிமிடம் பேசியதாகவும், குற்றவாளிகளின் வக்கீல் முற்பகலில் 45 நிமிடமும், மதிய உணவு இடைவேளைக்குப் பின் 15 நிமிடமும் வாதிட்டதாகவும் பதிவேடுகள் காட்டுகின்றன. ஆக தமிழகத்தையே உலுக்கிய ஒரு வழக்கை உச்சநீதிமன்றம் மொத்தத்தில் இரண்டு மணி நேரம் இருதரப்பையும் கேட்டு நீதிமன்றத்திலேயே தங்களுடைய மூன்று பக்க தீர்ப்பைக் கூறி மனுவைத் தள்ளுபடி செய்தனர்.

அவ்வழக்கின் தீர்ப்பில் அரசு மேல்முறையீட்டு வக்கீலின் வாதம் 10 வரிகளில் சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளது. அதில் வாதாடிய வக்கீல் தான் என்ன வழக்குக்காக வாதாடினோம் என்பது கூட தெரியாமல் வாதாடி இருக்கிறார். அதேபோல் குற்றவாளிகள் தரப்பில் எதிர்வாதம் 14 வரிகளில் சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளது. விசாரணை நீதிமன்றமும், உயர் நீதிமன்றமும் ஒருமித்த கருத்து கூறியிருப்பதால், உச்ச நீதிமன்றத்தின் சிறப்பு மேல்முறையீட்டு அதிகாரத்தின் கீழ் இவ்வழக்கில்

தலையிட விரும்பவில்லை என்று நீதிபதிகள் கூறினர்.

உண்மை என்னவென்றால், விசாரணை நீதிமன்றத்தின் முடிவுகளை உயர் நீதிமன்றம் ரத்துச் செய்து புதிய காரணங்களைக் கூறிக் குற்றவாளிகளை விடுதலை செய்தது என்பதுதான். அது எப்படி இரு நீதிமன்றங்களின் ஒத்த கருத்தொற்றுமையாகும்? இப்படியாக 1968ஆம் வருடக் கடைசியில் தமிழகத்தில் நடந்த மிகப் பெரும் படுகொலைகள் 22 ஆண்டுகள் கழித்து 1990ஆம் வருடக் கடைசியில், குற்றவாளிகளைத் தண்டனையின்றி தப்ப விட்ட சோகமான நிகழ்வு நடந்தேறியது.



**தீர்ப்பு கண்டனத்துக்குள்ளாகியது**:

தோழர் ஜி.வீரய்யன் "நின்று கெடுத்த நீதி" என்ற நூலுக்குக் கொடுத்த அணிந்துரையில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்:-

"இந்தத் தீர்ப்பின் மூலம் நமது நாட்டில் ஏழைகளுக்கு ஒரு நீதியும் பணக்காரர்களுக்கு ஒரு நீதியும் என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்டவன் ஏழையாக இருந்து பாதிப்பை உண்டாக்கியவன் பணக்காரனாக இருந்தால் நீதி அந்தப் பக்கம்தான் சாயும் என்பது உறுதியாகியுள்ளது. முன்பே குறிப்பிட்டது போல் 44 பேரை உயிருடன் எரித்துக் கொன்றவர்கள் 23 வீடுகளைத் தீக்கிரையாக்கியவர்கள், துப்பாக்கியால் சுட்டு 33 குண்டுகளுடன் 14 பேரை மருத்துவமனைக்கு அனுப்பியவர்கள் யார்? இவ்வளவு பாதிப்புக்கும் ஆளானவர்கள் ஏழைகள், தாழ்த்தப்பட்டவர்கள் என்பதால், இந்தக் கொடுங்குற்றத்தைச் செய்தவர்கள் யார் என்று நமது நாட்டுச் சட்டங்களால் நீதிமன்றத்தில் நிறுத்தினாலும் இவர்கள் இதைச் செய்தார்கள் என்று நீதிமன்றங்கள் ஏற்காது"

இதைத்தான் **"மனுசங்கடா"** என்ற தனது கவிதையில் இன்குலாப்

*"சதையும் எலும்பும் நீங்க வெச்ச தீயில் வேகுது*
*ஒங்க சர்க்காரும் கோர்ட்டும் அதில எண்ணெய ஊத்துது"*

என்று எழுதினார்.

**வரலாற்றுப் பிழைகளுக்கு வருத்தம் தெரிவிப்பதே முறை:**

வரலாற்றில் பிழைகள் பல நடந்ததுண்டு. அவற்றில் சிலவற்றிற்காவது தவறு செய்த நாடுகள் / அரசுகள் மன்னிப்புக் கேட்டுக் கொண்டுள்ளன. ஜாலியன்வாலாபாக் படுகொலைக்கு பிரிட்டிஷ் அரசு



பல வருடங்கள் கழித்து வருத்தம் தெரிவித்தது.

நீதிமன்றங்கள் மனித உரிமைகளைப் பறிக்கும் படியான தங்களது தீர்ப்புகளுக்கு வருத்தம் தெரிவித்ததில்லை. நெருக்கடி நிலையின் போது மனித உரிமைகள் மீறப்பட்டாலும் நீதிமன்றங்களை அணுக முடியாது, அடிப்படை உரிமைகள் தாற்காலிகமாக ரத்து செய்யபப்பட்டுள்ளன என்று உச்ச நீதிமன்றம் அளித்த **ஏ.டி.எம். ஜபல்பூர்** என்ற வழக்குத் தீர்ப்பு சட்டநிபுணர்களால் கடுமையாக விமர்சிக்கப்பட்டு ஒரு முறை உச்சநீதிமன்ற நீதிபதி கங்குலி அதற்காக பகிரங்க மன்னிப்பு கூடக் கேட்டார். ஆனால் 40 ஆண்டுகளுக்குப் பின்னர் ஆதார் அட்டையின் சட்டப்பூர்வத் தன்மையை விசாரித்த உச்ச நீதிமன்றம், ஏ.டி.எம். ஜபல்பூர் தீர்ப்பு தவறு என்று அறிவித்தது (**புட்டசாமி**, 2018).

சமீபத்தில் நெருக்கடிநிலைப் பிரகடனம் செய்ததே தவறென்றும், அப்பட்டமான மனித உரிமை மீறல் என்றும் அறிவிக்கக் கோரி 44 ஆண்டுகளுக்குப் பின் போடப்பட்ட வழக்கை உச்சநீதிமன்றம் விசாரணைக்கு எடுத்துக் கொண்டுள்ளது.

சமூகக் கொடுமைகளின் வரலாற்றில் உலகம் முழுவதும் பதிவாகி விட்ட கீழ்வெண்மணிப் படுகொலை வழக்கின் அநீதியை நீதிமன்றங்கள் இன்று வரை களையவில்லை. அடித்தள மக்களுக்கு நீதிமன்றங்களின் மீது நம்பிக்கை ஏற்பட வேண்டுமென்றால் கீழ்வெண்மணி வழக்கில் அளித்த தீர்ப்பு தவறு என்பதை உச்ச நீதிமன்றமும், உயர் நீதிமன்றமும் அறிவிப்பதே அம்மக்களுக்குச் செலுத்தும் உண்மையான அஞ்சலியாகும். செய்வார்களா?

# சூதாட்டரங்கமான பாஜக அரசு

சமந்தா

2020-21ஆம் நிதியாண்டின் முதல் காலாண்டில் 23.9 சதவீதம் குறுக்கமடைந்த இந்தியப் பொருளாதாரம், இரண்டாம் காலாண்டில் 7.5 சதவீதம் குறுக்கமடைந்துள்ளது. தொடர்ந்து இரண்டு காலாண்டுகளாக பொருளாதார வளர்ச்சி எதிர்மறையாக இருப்பதால் இந்தியாவின் பொருளாதார மந்த நிலை அலுவல் ரீதியாக உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்தியாவின் பொருளாதார மீட்சியின் வேகம் "இனிமையான ஆச்சரியம்" அளிப்பதாக நிதி ஆயோக் துணைத் தலைவர் ராஜீவ் குமார் கூறுகிறார். **ஆனால்** உலகளவில் இந்தியாவின் பொருளாதார மீட்சி மற்ற நாடுகளுடன் ஒப்பிடும் போது மிகக் குறைந்த வேகத்திலேயே காணப்படுகிறது.

பெருநிறுவனங்கள் வேலையாட்களையும் ஊதியங்களையும், நிர்வாகச் செலவுகளையும் பெருமளவு குறைத்து லாபத்தை மீட்டுள்ளன. வங்கிகளும் லாபத்தை மீட்கவுள்ளன. **இந்தியப் பங்குச் சந்தை தொடர்ந்து புதிய உயர்வை அடைந்துள்ளது. முதல் காலாண்டில் 74.7 சதவீதம் குறைந்த பட்டியலிடப்பட்ட நிறுவனங்களின் நிகர லாபம், இரண்டாம் காலாண்டில் 263 சதவீதமாகப் பல மடங்கு அதிகரித்துள்ளது. மும்பை பங்குச் சந்தையில் பட்டியலிடப்பட்ட நிறுவனங்களின் சந்தை மதிப்பு 6 லட்சம் கோடி அதிகரித்துள்ளது. நிஃப்டி-50 நிறுவனங்களின் நிகர லாபம் 1,04,200 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது.** அதானி குழுமத்தின் இலாபம் 32 சதவீதம் அதிகரித்துள்ளது. அதானி குழுமம் ஆறு விமான நிலையங்களைக் கைப்பற்றியதுடன் உலகளவிலும் முன்னிலை பெற்றுள்ளது. பொருளாதார மந்தநிலையில், இந்தியா பொருளாதாரத்திலும், ஆற்றல் துறையிலும் வல்லரசாகும் இரட்டை இலக்குகளைத் தொடர வேண்டும் என்கிறார் முகேஷ் அம்பானி.

சிறுகுறு தொழில் நிறுவனங்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. பெரும் எண்ணிக்கையிலான மக்களின் வருவாய் குறைந்துள்ளதால், தங்களது வயிற்றைக் கட்டி, வாயைக் கட்டி நுகர்வைக் குறைத்து வருகின்றனர். அதிகரிக்கும் வேலையின்மையும், விலைவாசி உயர்வும் மக்களின் வேதனையை மேலும் அதிகப்படுத்தியுள்ளது. இது போதாது என்று பெட்ரோல், டீசல் விலையும் தொடர்ந்து அதிகரித்து வருகிறது. தபால் வங்கிகள் கூட மக்களிடம் இரக்கம் காட்டவில்லை. டிசம்பர் 11க்குள் சேமிப்புக் கணக்குகளில் குறைந்தபட்ச

இருப்புத் தொகையாக ரூ.500 வைத்திருக்க வேண்டியதைக் கட்டாயமாக்கியுள்ளன.

நிதியமைச்சர் மூன்றாவது நிதித் தொகுப்பு (ஆத்மநிர்பர் பாரத் 3.0) அளித்துள்ளதாக அறிவித்தார், அதில் **உலகளாவிய உற்பத்தியாளர்களை ஈர்க்க ரூ. 1.46 லட்சம் கோடி ஊக்கத் தொகையும்,** ரியல் எஸ்டேட் நிறுவனங்களுக்கு வரிச் சலுகையுடன் கூடிய ஊக்கத் தொகையும், ஏற்றுமதித் துறைக்கு ஊக்கத் தொகையும் ஒதுக்கியுள்ளார். மக்களுக்கு எதுவும் இல்லை. பத்திற்கும் மேற்பட்ட தொழிற்சங்கங்களின் தலைமையில் நாடு தழுவிய தொழிலாளர் போராட்டத்தையும், எழுச்சியுடன் தொடரும் விவசாயிகளின் போராட்டத்தையும் அரசு சட்டை செய்யவில்லை. அதன் அக்கறையெல்லாம் பெருமுதலாளிகளின் மீது மட்டும்தான். வரவிருக்கும் குளிர்கால அமர்வில் பெருநிறுவனங்களின் செயல்பாட்டை எளிமைப்படுத்த வரையறுக்கப்பட்ட பொறுப்புக் கூட்டாண்மை (எல்.எல்.பி) சட்டத்தில் உள்ள நெறி மீறலுக்கான குற்ற பகுதிகளை நீக்கத் திட்டமிட்டுள்ளது மத்திய அரசு. நிதி ஆயோக் உறுப்பினர் ரமேஷ் சந்த், புதிய வேளாண் சட்டங்களுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் விவசாயிகள் முழுமையாகவோ அல்லது சரியாகவோ புரிந்து கொள்ளவில்லை என்று கூறியுள்ளார். இந்த மேட்டுக்குடியினர் இன்னும் எவ்வளவு காலத்திற்குத்தான் விவசாயிகளை அறிவிலிகளாகச் சித்தரிப்பர்!. மன்கிபாத்தில் உரையாட நேரமிருக்கும் பிரதமருக்கு டெல்லியில் தொடர் போராட்டத்தில் ஈடுபட்ட விவசாயிகளையோ, தொழிலாளிகளையோ சந்திக்கத் துணிவு இல்லை. **முதலீட்டாளர்கள் நம்பகத்தன்மையுடன் வருமானத்தை விரும்பினால், இருக்க வேண்டிய இடம் இந்தியா என்று அவர் மக்களின் வருவாய் குறைந்துள்ளதைக் கண்டுகொள்ளவேயில்லை. முதலாளிகளின் நம்பிக்கைக்குரிய பாஜக அரசின் மக்கள் விரோத அரசை மக்கள் போராட்டங்களால் தான் முறியடிக்க வேண்டும்.**

அரசு என்னவோ பொருளாதாரத்தை ஊக்குவிக்க நிதித் தொகுப்புகளை தாராளமாக அள்ளித் தெளித்தது போல், முன்னாள் தலைமை வங்கி ஆளுநர் பிமல் ஜலான் நிதித் தொகுப்பு போதும், இதற்கு மேல் கொடுத்தால் நிதிப் பற்றாக்குறை அதிகரித்து விடும் என்று தெரிவித்துள்ளார். இத்தகைய ஆலோசனைகளைச் செயல்படுத்தினால் இந்தியப் பொருளாதாரம் மீட்சியடையாமல் மேலும் குறுக்கமடையவே செய்யும்.

அதிக வேலைவாய்ப்புகளை அளித்துவரும் கட்டுமானத் துறையானது சிமெண்ட்

விலையுயர்வால் பாதிக்கப்பட்டுள்ளது. சிமெண்ட் உற்பத்தியாளர்கள் சிமெண்ட் விலையை அதிகரிக்கச் செய்யவே சிமெண்ட் உற்பத்தியைக் குறைந்த அளவில் செய்கிறார்கள். சிமெண்ட் விலையை அரசின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர சிமென்ட் ஒழுங்குமுறை ஆணையம் அமைக்குமாறு இந்தியக் கட்டுமானச் சங்கத் தலைவர் பிரதமர் நரேந்திர மோடிக்குக் கடிதம் எழுதியுள்ளார். மோடி அவர்களுக்குக் கடிதம் எழுதுவதும் குப்பைத் தொட்டிக்குக் கடிதம் எழுதுவதும் ஒன்றுதான்.

**இந்தியாவின் முக்கியமற்ற சொத்துக்களை பணமாக்குவது தொடர்பாக ஆலோசனை சேவைகளை பெற உலக வங்கியுடன் மத்திய அரசின் முதலீடு மற்றும் பொதுச் சொத்து மேலாண்மை துறை (டிபாம்) இன்று ஒப்பந்தம் செய்துள்ளது.** சாலைகள், நிலம், கட்டிடங்கள் துறைமுகங்கள், ரயில்வே, ரயில் நிலையங்கள், குழாய்வழிகள், தொலைத்தொடர்பு நிறுவனங்களுக்குச் சொந்தமான கோபுரங்கள் போன்ற தொலைத் தொடர்புச் சொத்துக்கள், துறைமுகச் சொத்துக்கள் என அனைத்துமே விற்பதற்காக அடையாளமிடப்பட்டுள்ளன. ஒரு குண்டூசியையும் விட மாட்டார்கள் போலிருக்கிறது.

பொதுத்துறை நிறுவனங்களின் சந்தை-மதிப்பை அதிகரித்து விற்று விட வேண்டும் என்பதே பொதுச் சொத்து மேலாண்மைத் துறைச் செயலாளர் துஹின் காந்தா பாண்டேயின் கவலை. **மத்திய அரசு பொதுத்துறை நிறுவனங்களை அதிக ஈவுத் தொகையைச் செலுத்துமாறு கொடுமைப்படுத்தி வருகிறது. அரசுப் பங்குகளை ஏல நடவடிக்கையின் மூலம் விற்பது குறித்த அறிவிப்புகளையும் மத்திய அரசு வெளியிட்டு வருகிறது.** அரசுப் பங்குகளின் விற்பனை துரிதப்படுத்தப்படும் என்றும் சீர்திருத்தங்களும், விறுவிறுப்பான வேகத்தில் தொடரப்படும் எனவும் நிதியமைச்சர் தெரிவித்துள்ளார்.

சுதேசி சுதேசி எனக் கூவும் பாஜக அரசின் வங்கித் தலைமை லட்சுமி விலாஸ் வங்கியை சிங்கப்பூரைச் சேர்ந்த தனியார் வங்கியுடன் இணைக்கவுள்ளது.

தலைமை வங்கியின் செயற்குழு நிதித்துறையையும், நிதி அதிகாரங்களையும் முற்றிலுமாகப் பெருமுதலாளிகளிடம் தாரை வார்ப்பது போல், தனியார் பெருநிறுவனங்களையும், வணிக நிறுவனங்களையும், வங்கிகளைத் தொடங்க அனுமதிக்குமாறு ஆபத்தான ஆலோசனை வழங்கியுள்ளது. ரகுராம் ராஜன் மற்றும் விரல் ஆச்சார்யா ஆகியோர்

இந்த நடவடிக்கையை "பேரழிவு" என்று எச்சரித்துள்ளனர்.
வங்கிகள் ஒழுங்குமுறைச் சட்டத்தைத் திருத்தி, வங்கிசாரா நிதி நிறுவனங்கள் வங்கிச் சேவை தொடங்கவும், 3 ஆண்டு அனுபவமுடைய கட்டண வங்கிகளை வங்கிகளாகச் செயல்பட அனுமதி அளிக்குமாறும் இதே செயற்குழு பரிந்துரைத்துள்ளது. மேலும் வங்கிக் கட்டுப்பாட்டாளர்களின் உரிமப் பங்குகளை 15 சதவீதமாகக் குறைக்க வேண்டும் என்று ரிசர்வ் வங்கி வலியுறுத்துகையில் அதை 26% ஆக உயர்த்த வேண்டும் என்றும் பரிந்துரைத்துள்ளது.

நிதித் துறையில் அடுத்த கட்ட தாராளமய நடவடிக்கைகளாக நான்கு முக்கியச் சீர்திருத்தங்களை ஏற்படுத்தியுள்ளதாக தலைமை வங்கி ஆளுநர் சக்திகாந்த் தாஸ் தெரிவித்துள்ளார். அவையாவன 1. நிதிச் சந்தைகளை தாராளமயமாக்கம் செய்தல் மற்றும் சந்தை ஒழுங்குமுறைகளை எளிதாக்குதல் 2. நிதிச் சந்தைகளை சர்வதேச மயமாக்குதல், 3. “வாங்கும் பக்கத்தில்” பயனர் பாதுகாத்தல் 4) மீட்சியையும், பாதுகாப்பையும் உறுதி செய்தல்.

**இந்தியப் பத்திரங்கள் மற்றும் பரிவர்த்தனை வாரியம் (செபி) ஒரு நிதி நிறுவனத்துக்கான வெளிநாட்டு முதலீட்டு வரம்புகளை தற்போதுள்ள 300 மில்லியன் டாலர்களிலிருந்து 600 மில்லியன் டாலர்களாக உயர்த்தியுள்ளது.** பொருளாதார மந்த நிலையையும் பொருட்படுத்தாது பாஜக அரசு அனைத்துத் துறைகளிலும் தாராளமயச் சீர்திருத்தங்களைத் துரிதப்படுத்தியுள்ளது.

**<u>பணவீக்கம்:</u>**

நுகர்வோர் குறியீட்டின் அடிப்படையிலான சில்லறைப் பண வீக்கம் அக்டோபர் மாதத்தில் 7.61% உயர்ந்தும் சென்ற மாதத்தை விட 1.28% அதிகரித்தும் உள்ளது. உணவுப் பொருள்களின் விலைவாசி உயர்வு 11.07%. இது சென்ற மாதத்தை விட 2.48% அதிகரித்துள்ளது. காய்கறிகளின் விலைவாசி 22.51% அதிகரித்துள்ளது. பருப்பு விலை 18.34% அதிகரித்துள்ளது. முட்டை விலை 15.17% அதிகரித்துள்ளது. எண்ணெய், கொழுப்பு விலை 15.17% அதிகரித்துள்ளது. மீன், மாமிசம் ஆகியவற்றின் விலை 18.70% அதிகரித்துள்ளது. தமிழ்நாட்டின் பணவீக்கம் 8.04% ஆக உள்ளது. தொழில்துறைத் தொழிலாளர்களுக்கான சில்லறைப் பணவீக்கம் அக்டோபரில் 5.91% ஆக உயர்ந்துள்ளது.

**<u>இரண்டாம் காலாண்டில் (2020-21) இந்தியப் பொருளாதாரம்:</u>**

2020-21 நிதியாண்டின் (இரண்டாம் காலாண்டில் (ஜூலை-செப்டம்பர்) மொத்த உள்நாட்டு உற்பத்தி 7.5 சதவீதம் வீழ்ச்சியடைந்துள்ளது. மொத்த மதிப்புக் கூட்டலின் அளவு 7 சதவீதம் வீழ்ந்துள்ளது. வேளாண்மை சார்ந்த துறைகள் 3.4 சதவீதமும், செய்பொருளாக்கத் துறை 0.6 சதவீதமும், மின்சாரத் துறை 4.4 சதவீதமும் வளர்ச்சியடைந்துள்ளன. சுரங்கத் துறை 9.1 சதவீதமும், கட்டுமானத் துறை 8.6 சதவீதமும், வர்த்தகம், ஹோட்டல், போக்குவரத்து, தகவல் தொடர்பானது 15.6 சதவீதமும் வீழ்ச்சியடைந்துள்ளன. நிதி, வீட்டு மனை, சேவைத் துறை 8.1 சதவீதமும், பொது மேலாண்மைப் பாதுகாப்பு 12.2 சதவீதமும் சரிவடைந்துள்ளன.

சென்ற நிதியாண்டின் இரண்டாம் காலாண்டுடன் ஒப்பிடும் போது, இந்த நிதியாண்டின் இரண்டாம் காலாண்டில் தனியார் நுகர்வு செலவினம் 4.1 சதவீதம் குறைந்துள்ளது. அரசு நுகர்வுச் செலவினம் 17.6 சதவீதம் குறைந்துள்ளது. மொத்த மூலதன உருவாக்கம் 0.34 சதவீதம் மட்டுமே அதிகரித்துள்ளது.

**<u>2011-12 ஏப்ரல்-செப்டம்பர் அரையாண்டில்:</u>**

2020-21ல் (ஏப்ரல்-செப்டம்பர்) வரையிலான அரையாண்டுக் காலத்தில் மொத்த உள்நாட்டு உற்பத்தி 15.7 சதவீதம் குறுக்கமடைந்துள்ளது. வேளாண்மை சார்ந்த துறைகள் 3.4 சதவீதம் வளர்ச்சி கண்டுள்ளன. மற்ற அனைத்துத் துறைகளும் வீழ்ச்சியடைந்துள்ளன. சுரங்கத் துறை 17.2 சதவீதமும், செய்பொருளாக்கத் துறை 19.4 சதவீதமும், மின்சாரத் துறை 1.4 சதவீதமும் சரிவடைந்துள்ளன. கட்டுமானத் துறை 30.2 சதவீதமும், வர்த்தகம், ஓட்டல், போக்குவரத்து, தகவல் தொடர்பு 31.5 சதவீதமும் வீழ்ச்சியடைந்துள்ளன. நிதி, வீட்டு மனை, சேவை 6.8 சதவீதமும், பொது மேலாண்மை, பாதுகாப்பு 11.3 சதவீதமும் வீழ்ச்சியடைந்துள்ளன.

சென்ற நிதியாண்டின் முதல் அரையாண்டுடன் ஒப்பிடும் போது இந்த நிதியாண்டின் முதல் அரையாண்டில், தனியார் நுகர்வுச் செலவினம் 3.7 சதவீதம் குறைந்துள்ளது. அரசு நுகர்வுச் செலவினம் 13.7 சதவீதம் மட்டுமே அதிகரித்துள்ளது. மொத்த மூலதன உருவாக்கம் 15 சதவீதம் குறைந்துள்ளது.

<u>செப்டம்பரில் உற்பத்தி நிலை:</u>

புள்ளியியல் அமைச்சகத்தால் வெளியிடப்பட்ட தொழில்துறை உற்பத்திக் குறியீட்டு அறிக்கையின் படி முதன்மைத் துறைகளின் உற்பத்தி 0.2 சதவீதம் சரிந்துள்ளது.

சுரங்கத் துறை 1.4 சதவீதமும், மின்சாரத் துறை 4.9 சதவீதமும் வளர்ச்சி அடைந்துள்ளன. செய்பொருளாக்கத் துறை 0.6 சதவீதம் வீழ்ச்சி கண்டுள்ளது. பயன்பாட்டு அடிப்படையிலான வகைப்பாட்டில் உடனடி நுகர்வுப் பொருட்களின் உற்பத்தி 4.1 சதவீதமும், கட்டுமானப் பொருட்களின் உற்பத்தி 0.7 சதவீதமும், நீடித்த நுகர்வுப் பொருட்களின் உற்பத்தி 2.8 சதவீதமும் அதிகரித்துள்ளன. மூலதனப் பொருட்களின் உற்பத்தி 3.3 சதவீதமும், முதன்மைப் பொருட்களின் உற்பத்தி 1.5 சதவீதமும், இடைநிலைப் பொருட்களின் உற்பத்தி 1.4 சதவீதமும் வீழ்ச்சி அடைந்துள்ளன.

**அக்டோபரில் தொழில்துறை வளர்ச்சி:**

தொழில்துறை மற்றும் உள்நாட்டு வர்த்தக மேம்பாட்டுத் துறை வெளியிட்ட எட்டு முக்கியத் தொழில்களின் ஒருங்கிணைந்த உற்பத்திக் குறியீடு (அடிப்படை: 2011-12 = 100) அக்டோபரில் 2.5 சதவீதம் சரிந்துள்ளது. நிலக்கரி உற்பத்தி 11.6 சதவீதமும், உரங்களின் உற்பத்தி 6.3 சதவீதமும் அதிகரித்துள்ளன. மின்சார உற்பத்தி 10.5 சதவீதமும், சிமெண்ட் உற்பத்தி 2.8 சதவீதமும் அதிகரித்துள்ளன. கச்சா எண்ணெய் உற்பத்தி 6.2 சதவீதமும், இயற்கை எரிவாயு உற்பத்தி 8.6 சதவீதமும் குறைந்துள்ளன. பெட்ரோலிய சுத்திகரிப்பு உற்பத்தி 17.0 சதவீதமும், எஃகு உற்பத்தி 2.7 சதவீதமும் குறைந்துள்ளன.

அமெரிக்க மத்திய வங்கியின் அள்ளித் தெளிக்கும் பணக் கொள்கையால் அதிகரித்துள்ள டாலர் பணப் புழக்கத்தின் பருக்கைகள், இந்தியப் பங்கு சந்தைகளில் 60,000 கோடிக்கும் மேலாக அந்நிய முதலீடுகளாகச் சிந்தப்பட்டும் தலைமை வங்கியின் வெளிச்சந்தை நடவடிக்கைகளால் அமெரிக்க டாலருக்கு எதிராக ரூபாயின் மதிப்பு ஏற்றம் பெறுவது தடுக்கப்பட்டுள்ளது. அந்நிய முதலீட்டாளர்களைச் சார்ந்து மன்றாடி ஊசலாடுகிறது ரூபாயின் மதிப்பு. இந்தியாவில் அந்நிய முதலீடுகள் பெரும்பாலும் சேவைத் துறையிலேயே செய்யப்படுவதால் இவற்றின் மூலம் இந்தியாவின் உள்நாட்டு உற்பத்தித் திறன் மேம்படுவதற்கான வாய்ப்புகள் இல்லை. அந்நிய நிதி முதலீடுகளால் இந்திய மக்களுக்கு இழப்பே ஏற்படுகிறது. பாஜக அரசின் மேக் இன் இந்தியா திட்டத்தால் உள்நாட்டு உற்பத்தி வீழ்ச்சியே கண்டுள்ளது.

தற்போதைய நிதி மற்றும் பெருநிறுவன விவகாரங்களுக்கான அமைச்சர் அனுராக் தாக்கூர் அவக்கேடான ஒரு கருத்தைத் தெரிவித்துள்ளார். இவர் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத்தின் தலைவர் பதவியிலிருந்து உச்ச நீதிமன்றத்தால் பதவி நீக்கம் செய்யப்பட்டவர். கிரிக்கெட் வாரியத்தின் நிர்வாகத்தைச் சீர்திருத்துவதற்கான நீதிபதி லோதாவின் பரிந்துரைகளை நிறைவேற்றாமல் தடையாக இருந்ததால் 2017ல் கிரிக்கெட் வாரியத்திலிருந்து பதவிநீக்கம் செய்யப்பட்டார். ஆனால் மக்களவைத் தேர்தலில் போட்டியிடத் தடைவிதிக்கப்படவில்லை என்பதோடு அவர்தான் தற்போதைய நிதி மற்றும் பெரு நிறுவன விவகாரங்களுக்கான அமைச்சராக இருக்கிறார் என்றால், நிதியமைச்சகம் யாருக்காக எப்படிச் செயல்படும் என்று எண்ணிப் பாருங்கள்.

இந்தியாவில் விளையாட்டுகளுக்குப் பந்தயம் கட்டுவதை சட்டப்பூர்வமாக்க வேண்டும் என இவர் தெரிவித்துள்ளார். இந்தியர்களிடையே பந்தயம், சூதாட்டத்தில் ஈடுபடுவதற்கு ‘இயல்பான உள்ளுணர்வு’ இருப்பதாகவும் உலகின் பல நாடுகளில் இருப்பது போல் இந்தியாவிலும் விளையாட்டுக்குப் பந்தயம் கட்டுவது சட்டபூர்வமாக்கப்பட வேண்டும் என்றும் அதன் மூலம் வருவாய் திரட்டலாம் என்றும் பிரதமருக்கான பொருளாதார ஆலோசனைக் குழுவின் பகுதி நேர உறுப்பினரான நிலேஷ் ஷா கூறியுள்ளார். இந்தியர்களிடையே கள்ளப் பணம் அச்சடிக்க இயல்பான உள்ளுணர்வு இருப்பதாகக் கூறி கள்ளப் பணத்தைச் சட்டப்பூர்வமாக்க முடியுமா? சமூகக் குற்றங்களைச் சட்டமாக்கி விட்டால் நியாயமாகி விடுமா? அரசு வருவாயை அதிகரிக்க வேண்டுமானால் வளர்ந்த முதலாளித்துவ நாடுகளில் காணப்படுவது போல் சொத்து வரியையும், வாரிசுரிமை வரியையும் கொண்டுவர வேண்டும். பெருநிறுவனங்கள் மீதான வரியை அதிகப்படுத்த வேண்டும். பன்னாட்டு நிறுவனங்களின் வரி முறைகேடு காரணமாக இந்தியா ஆண்டுக்கு 75,000 கோடி வரி வருவாயை இழப்பதாகச் சமீபத்திய ஆய்வறிக்கை தெரிவிக்கிறது. இதையெல்லாம் விட்டுவிட்டுப் பந்தயச் சூதாட்டத்தின் மூலம் வருவாயை அதிகரிக்கலாம் என ஆலோசனை அளிக்கிறார்கள். எப்பேர்பட்ட நிதியமைச்சரையும், பொருளாதார ஆலோசனைக் குழுவையும் இந்தியா பெற்றுள்ளது!

மொத்தத்தில் பாஜக அரசு நாட்டின் அனைத்து வளங்களையும் இந்தியப் பெருமுதலாளிகளிடமும், அந்நியப் பெருமுதலாளிகளிடமும் சூதாட விடும் இடைத்தரகராகத்தான் செயல்பட்டு வருகிறது. நாடாளுமன்றமும், நிதியமைச்சகமும் தலைமை

வங்கியும், செபியும், பங்குச் சந்தைகளும் சூதாட்டரங்கங்களாகத்தான் செயல்படுகின்றன என்பதையே இவையெல்லாம் சந்தேகமில்லாமல் உறுதிப்படுத்துகின்றன.

பங்குச் சந்தை என்பது சில நெறியற்ற நெறிகளைக் கொண்ட சூதாட்டம்தான் அது சட்டப்பூர்வமாக இயங்கும் போது ஏன் பந்தயச் சூதாட்டத்தை மட்டும் தடுக்க வேண்டும் எனக் கேட்டால் அதிலும் ஒரு தர்க்கம் இருக்கத்தான் செய்கிறது. ஒரு நியாயமான சமூகத்தில் பங்குச் சந்தையையும் சட்ட விரோதமாக அறிவிக்க வேண்டும். கியூபா போன்ற நாடுகளில் பங்குச் சந்தைகள் இல்லை. தனியார் முதலாளிகள் மூலதனம் திரட்டுவதற்கான ஒரு சட்டபூர்வமான அமைப்பாகத்தான் பங்குச் சந்தை செயல்படுகிறது. இதில் முதலீடு செய்பவர்கள் யாரும் பொருளாதாரத்தை வளர்க்க வேண்டும் என்று முதலீடு செய்வதில்லை. சந்தை ஏற்ற, இறக்கங்களுக்கிடைப்பட்ட வேறுபாட்டில் லாபம் ஈட்டலாம் (arbitrage) என்றே முதலீடு செய்கிறார்கள். 'தேசப்பற்று' என்று கருதுவதற்கு இதில் ஒன்றுமில்லை. எல்லாத் தரப்பு முதலீட்டாளர்களும் உண்மையில் அமெரிக்க மத்திய வங்கியின் மீதுதான் 'தேசப்பற்று' கொண்டுள்ளனர். பட்டியிலிடப்பட்ட நிறுவனங்கள் சில்லறை முதலீட்டாளர்களுக்குக் குறிப்பிட்ட காலத்திற்கு ஒரு முறை ஈவுத் தொகை வழங்க வேண்டும் என்று ஒழுங்குமுறைப்படுத்தும் சட்டங்கள் எதுவும் இல்லை. அதனால்தான் நிறுவனங்களால் அதிக லாபம் ஈட்ட முடிகிறது. **பங்குச் சந்தைகளில் புரளும் மொத்த மூலதனத்தில் பெருமுதலாளிகளின் சொந்தப் பணம் என்பது மிகக் குறைவான பகுதியே. அவர்கள் ஊரார் பணத்தைத் திரட்டியும், தொழிலாளர்களின் ஊதியமற்ற உழைப்பைச் சுரண்டியும் பெருலாபம் பெறுகிறார்கள். கூகுள், ஃபேஸ் புக் போன்ற முற்றுரிமை பெற்ற பெருநிறுவனங்கள் சில்லறை முதலீட்டாளர்களுக்குத் தர வேண்டிய ஈவுத் தொகையைப் பணமாக அளிக்காமல் பங்குகளாக்கும் உத்தியைக் கடைபிடிப்பதாலேயே தங்கள் நிறுவனங்களை இந்த அளவுக்கு உலகெங்கும் விரிவாக்கம் செய்ய முடிந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது**. ஒரு மக்கள்நல அரசு பங்குச் சந்தைகளைத் தடை செய்ய வேண்டும், அரசு நிறுவனங்களுக்கான மூலதனத் திரட்டலானது அரசின் கட்டுப்பாட்டில் கூட்டுறவு அமைப்பு முறையில் செயல்படுத்தப்பட வேண்டும். அதுவே தனிநபர்களிடம் செல்வம் குவிவதையும், சமூகத்தின் பொருளாதாரச் சமமின்மையையும் தடுக்கும்.

# செங்காட்டான் குறிப்புகள்

**பழைய தமிழ்த் தேசம் இதழ்த் தொகுப்பைப் புரட்டிப் பார்த்துக் கொண்டிருந்தேன். சுவையான நினைவுகளைக் கிளறி விடும் பல குறிப்புகள். அவற்றுள் இரண்டு இதோ:**

## ”இந்தியர்கள் யாருமில்லை!”

தில்லியில் சென்ற (2008) ஏப்ரல் 2ஆம் நாள் இரவு சவகர்லால் நேரு பல்கலைக்கழக மாணவர் விடுதியில் சனநாயக மாணவர் சங்கம் (டிஎஸ்யு) சார்பில் ’அரசியல் கைதிகள் பேசுகிறார்கள்’ என்ற தலைப்பில் ஒரு கருத்தரங்கம் நடைபெற்றது. பேராசிரியர் எஸ்.ஏ.ஆர். கீலானி, தோழர் கோவிந்தன் குட்டி, ததேவிஇ பொதுச்செயலாளர் தோழர் தியாகு ஆகியோர் உரையாற்றுவார்கள் என்று அறிவிக்கப்பட்டது. இந்துத்துவ அமைப்பான அகில பாரதிய வித்யார்த்தி பரிசத் (ஏபிவிபி) கீலானி வருவதற்குக் கடும் எதிர்ப்புத் தெரிவித்தது. பல்கலைக்கழக நிர்வாகமும் கூட கூட்டத்துக்கு அனுமதி மறுத்து விட்ட நிலையில் டிஎஸ்யுவைச் சேர்ந்த நம் மாணவர்கள் பல்கலைக்கழக மாணவர் சங்கத்தையும் இடதுசாரி மாணவர் அமைப்புகளையும் அணுகி அனைவரின் ஒத்துழைப்பையும் பெற்றுக் கூட்டத்தை வெற்றிகரமாக நடத்தினர். மாணவத் தோழர் கலையரசன் தலைமையில் கீலானி, கோவிந்தன் குட்டி, தியாகு மூவரும் உரையாற்றினர். இந்தியா தேசிய இனங்களின் சிறைக் கூடமாகவும் இந்திய அரசமைப்பு தேசிய இனங்களின் அடிமை முறியாகவும் இருப்பதை விளக்கிய தோழர் தியாகு தமிழீழ விடுதலைப் போராட்டத்தை ஆதரிக்க வேண்டிய தேவையையும் எடுத்துரைத்தார். உரை முடிவில் ஒரு மாணவர், “நீங்கள் இந்தியர் இலையா?” என்று கேட்டதற்குத் தோழர் தியாகு அளித்த விடை: ”நான் இந்தியன் இல்லை, நீங்களும் இந்தியர் இல்லை. இந்தியாவில் இந்தியர் யாருமில்லை. இந்தியர் என்பது ஒரு தேசிய இன அடையாளமன்று. இந்தியக் குடிமகனாக இருப்பதாலேயே நாம் இந்தியர்கள் ஆவோம் என்றால், பிரித்தானிய இந்தியக் குடிகளாய் இருந்த போது நாம் பிரித்தானிய இந்தியர்களாய் இருந்தோமா? தேசிய அடையாளம் என்பது ஆளும் அரசைப் பொறுத்ததன்று.”

## சின்னக் காஞ்சிபுரம் கிருஷ்ணசாமி சர்மா

**[சமூகநீதித் தமிழ்த் தேசம், 2008 மே இதழில் தமிழ்நாட்டின் முதல் மே நாள் குறித்து பேராசிரியர் முத்து குணசேகரன் எழுதியுள்ள கட்டுரையிலிருந்து:]**

தூத்துக்குடி கோரல் மில் சதி வழக்கில் வ.உ.சி. சேர்க்கப்பட்டது போலவே, கரூர் சதி வழக்கில் ஆங்கிலேய அரசால் சேர்க்கப்பட்டுச் சிறைத்தண்டனைக்கு ஆளானவர்தான் கிருஷ்ணசாமி சர்மா. அவர் வாழ்வின் நீண்டதொரு பகுதியைச் சிறையிலே கழித்தார். சிறைக்குச் செல்லாத காலங்களில் இந்துநேசன், சுதேசமித்திரன் போன்ற ஏடுகளில் தொடர்ந்து எழுதி வந்தார். அவர் 21க்கு மேற்பட்ட நூல்கள் எழுதியதாகத் தெரிகிறது என்றாலும் ஒன்று கூட இப்போது கிடைக்கவில்லை.

ஜாலியன்வாலாபாக் கண்டனக் கூட்டத்தில் கிருஷ்ணசாமி சர்மா பேசினார். அரசுக்கு எதிரான எல்லாப் போராட்டங்களிலும் கலந்து கொண்டார்.

1887இல் ஒரு பார்ப்பனக் குடும்பத்தில் குடவாயில் சடகோபன், பெருந்தேவி ஆகிய பெற்றோர்க்கு மகனாகப் பிறந்த சர்மா இளம் வயதிலேயே சுதந்திர உணர்வு பெற்றவராக மட்டுமின்றி, சாதி மத எதிர்ப்பாளராகவும் வளர்ந்தார். கிலாஃபத் இயக்கம் உட்பட அனைத்து இயக்கங்களிம் பங்கேற்றார். இம்மியளவும் பார்ப்பனச் சாதிப் பற்று இல்லாதவராகத் திகழ்ந்தார். சேரன்மாதேவி குருகுலச் சிக்கல், ருக்மணி அருண்டேல் திருமணச் சிக்கல் போன்றவற்றில் அவர் எடுத்த நிலைப்பாடே இதற்குச் சான்று. ஒவ்வொரு நிலையிலும் சாதிமத ஒழிப்பையும் மனித நேயத்தையும் அவர் வலியுறுத்தி வந்தார்.

கொள்கை அடிப்படையில் எவர் தவறு செய்தாலும் கண்டிக்கும் துணிவு சர்மாவுக்கு இருந்தது. சவுரி சவுரா நிகழ்ச்சிக்குப் பின் காந்தியார் தமது ஒத்துழையாமை இயக்கத்தை நிறுத்திக் கொண்ட போது, இது காந்தியின் இமாலயத் தவறு என்று சர்மா கண்டித்தார். பகத் சிங்கின்

தியாகத்தை காந்தியார் வெறித்தனம் என்ற போது, இல்லை, இதுதான் தேசப் பற்று என்றவர் சர்மா.

1923இல் சிங்காரவேலர் கொண்டாடிய அந்த முதல் மேநாளில் திருவல்லிக்கேணி கடற்கரைக் கூட்டத்தில் சர்மா கலந்து கொண்டார். சிங்காரவேலர் சர்மாவைப் பாராட்டி வரவேற்றார். “சர்மா போன்ற தியாகிகள் வந்ததற்கு நாங்கள் கொடுத்து வைத்தவர்கள்” என்றார்.

மேநாள் கூட்டத்தில் உரையாற்றிய கிருஷ்ணசாமி சர்மா மேநாளைத் தொழிலாளர்களின் புனித நாள் எனப் போற்றினார். “மேநாள் கூட்டத்தில் கலந்து கொள்ளும் தோழர்கள் நான் சொன்னேன் என்பதற்காக்க் கையெழுத்துப் போட்டு விட்டு காவலர்கள் நெருக்கும் போது பின்வாங்கக் கூடாது” என்றார்.

காலமெல்லாம் சாதிமத எதிர்ப்பாளராக வாழ்ந்த சின்னக் காஞ்சிபுரம் கிருஷ்ணசாமி சர்மா பார்ப்பனர்களால் கடுமையாக வெறுக்கப்பட்டார். காஞ்சிபுரத்துப் பார்ப்பனர்கள் அவரை ’ஜாதிப் பிரஷ்டம்’ செய்தனர்; அதாவது சாதியிலிருந்து விலக்கி வைத்தனர். பொன்னேரியில் ஆசிரமம் அமைக்க முயன்று அதிலும் சர்மா தோற்றுப் போனார்.

காலமெல்லாம் சிறையில் கல்லுடைத்து நோய்வாய்ப்பட்டு நொறுங்கிப் போயிருந்த கிருஷ்ணசாமி சர்மா காஞ்சிபுரத்தில் திடீரென மறைந்த போது, யாரும் சவ அடக்கத்துக்கு செல்லக் கூடாது என்று பார்ப்பனர்கள் தடுத்து விட்டனர். பிணத்தைத் தூக்குவதற்குக் கூட யாருமில்லை. மூன்று நாள் கழித்து சர்மாவின் தொண்டர் ஒருவர் தன் ஒற்றை மாட்டு வண்டியில் உடலை ஏற்றி சுடுகாட்டுக்கு எடுத்துச் சென்றார். சர்மாவின் உடலுக்கு அவர் மனைவிதான் கொள்ளி வைத்தார். அதனை வேடிக்கை பார்க்கக் கூட ஒரு பார்ப்பன் அங்கு வந்தானில்லை.

# “வெண்மணி வெறும் கூலிக்கான போராட்டம் அல்ல!”

[தமிழ்த் தேசிய விடுதலை இயக்கத்தின் பொதுச் செயலாளரும் ‘உரிமைத் தமிழ்த் தேசம்’ ஆசிரியருமாகிய **தோழர் தியாகு** இந்து தமிழ் நாளிதழுக்கு அளித்த பேட்டியில் வெண்மணி நினைவுகளைப் பகிர்ந்துகொள்கிறார்.]

## கீழத் தஞ்சையில் விவசாயக் கூலித் தொழிலாளர்களின் போராட்டம் எப்போது தொடங்கியது?

அப்போது காவிரித் தீரம் என்பது முப்போகம் விளையக் கூடிய பகுதி. விவசாயத் தொழிலாளர்களில் கணிசமானவர்கள் தலித் மக்கள். வர்க்கச் சுரண்டலும் சாதிய ஒடுக்குமுறையும் கடுமையாக இருந்தன. சாணிப்பால், சவுக்கடி என்று மிகக் கொடூரமான ஒடுக்குமுறைகள் இருந்தன. இவற்றுக்கு எதிரான போராட்டங்களை ‘30-கள் தொடங்கிப் பொதுவுடைமை இயக்கத்தினர் நடத்தியிருக்கிறார்கள்.

வெண்மணி படுகொலைச் சம்பவம் பற்றிய ஆய்வின் போது இந்தப் பகுதியில் பொதுவுடைமை இயக்கம் எப்போது வந்தது என்று விசாரித்தேன். “எங்கள் ஊர்களில் ‘60-களில்தான் கட்சியைக் கொண்டுவந்தோம். ஆனால், வெண்மணியைச் சுற்றியுள்ள பகுதியில் மட்டும் எங்களுக்கு முன்பே கட்சி இருந்தது. எனக்கே அது முழுமையாகத் தெரியவில்லை” என்று என்னிடம் சொன்னார் ஏ.ஜி.கஸ்தூரிரங்கன். அந்தப் பகுதியில் ஒரு முக்கியமான தலைவராக இருந்த அவர், அதற்கு முன்பு திராவிட இயக்கத்தில் இருந்தவர்.

வெண்மணி வழக்கில் தண்டனைக் கைதியாக இருந்த ராமையா என்ற பெரியவரிடமும் இதே கேள்வியைக் கேட்டேன். இந்தப் பகுதியில் மணலூர் மணியம்மை ஊர் ஊராகச் சென்று இயக்கப் பணிகளைத் தொடங்கினார் என்று அவர் சொன்னார். காங்கிரஸ் சோஷலிஸ்ட் கட்சியில் இருந்த மணியம்மை, நிலச்சுவான்தார்களுக்குத் தெரியாமல் இரவோடு இரவாகச் சென்றுதான் அந்த வேலைகளைச் செய்திருக்கிறார். சின்னக்குத்தூசியின் நண்பர் அவர். அப்போது சின்னக்குத்தூசி திராவிட இயக்கத்தில் இருந்தார். மணியம்மை பொதுவுடைமை இயக்கத்தில் பணியாற்றிச் செங்கொடிச் சங்கங்களை அமைத்தார். இரண்டு இயக்கமும் ஒரே காலகட்டத்தில் இந்தப்

பகுதிகளில் வளர்ந்தன.

## திராவிட இயக்கத்தின் பங்கைப் பற்றிச் சொல்லுங்கள்…

ஒரு பகுதி தலித் மக்கள் ‘திராவிட விவசாயத் தொழிலாளர் சங்கம்’ என்ற பெயரில் இயங்கினார்கள். ஏ.ஜி.கே., பாச்சா போன்ற தலைவர்கள் அந்தச் சங்கத்திலிருந்து உருவானவர்கள்தான்.

1967க்குப் பிறகு இந்தப் போராட்டங்கள் மிகவும் தீவிரமடைந்த காலகட்டத்தில், கூலி உயர்வால் பலனில்லை; தேவையில்லாத வன்முறைகள் நடக்கின்றன என்று சொல்லி இந்தப் போராட்டங்களைப் பெரியார் தவிர்த்தார். அப்போது பலர் அவரை விட்டு விலகிப் பொதுவுடைமை இயக்கத்துக்கு வந்து விட்டார்கள். இப்போதும் கூட, அந்தப் பகுதியில் ‘திராவிட விவசாயத் தொழிலாளர் சங்கம்’ இயங்கிவருகிறது. ஏ.ஜி.கே. பிற்காலத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து விலகி மீண்டும் அந்த அமைப்பில் இணைந்து மாநிலப் பொறுப்பாளரானார்.

முக்கியமாக, தலித் மக்களை அடிப்படையாகக் கொண்ட இயக்கமாக இருந்ததால், பொருளாதாரரீதியாக கூலி உயர்வுக்குப் போராடுவது மட்டுமே போதவில்லை. ஒன்றாகச் சேர்ந்தால் வலிமையாக இருக்கலாம் என்ற எண்ணத்தை அவர்களிடம் ஏற்படுத்தக் கடுமையாக உழைக்க வேண்டியிருந்தது. அதன் காரணமாக அந்தப் பகுதியில் சாதியக் கொடுமைகள் தணிந்தன.

## வெண்மணி பிரச்சினை எப்படித் தீவிரமானது?

1967 பொதுத் தேர்தல் முடிவுகள் மக்கள் மத்தியில் ஒரு பெரும் மாறுதலை ஏற்படுத்தின. மார்க்சிஸ்ட் கட்சி திமுகவுடன் கூட்டணியில் இருந்ததால், ஒரு எதிர்பார்ப்பு இருந்தது. ஆனால், ஒன்றும் நடக்கவில்லை. வெண்மணி சம்பவத்துக்கு முன்பாகவே விவசாயத் தொழிலாளர்களின் போராட்டங்களை ஒடுக்குவதற்கு என்றே ‘கிஸான் போலீஸ்’ என்று ஒரு பிரிவைத் தொடங்கினார்கள். நாகப்பட்டினம் தாலுகாவின் பல கிராமங்களில், அந்த போலீஸார் முகாமிட்டிருந்தார்கள். நிலச்சுவான்தாரர்களின் இடங்களில்தான் அந்த முகாம்கள் அமைக்கப்பட்டன.

கிராமங்களில் புகுந்து ஆடு, கோழிகளைத் திருடுவது, மக்களைத் தெருவில் மண்டிபோடச்

சொல்வது, 'பி.ராமமூர்த்தி ஒழிக' என்று கோஷம் போடச் சொல்வது என்று அந்த போலீஸார் பல அக்கிரமங்களைச் செய்தனர். மறு பக்கம் நிலச்சுவான்தாரர்கள் 'நெல் உற்பத்தியாளர்கள் சங்க'த்தை ஏற்படுத்தி, எந்த ஊரிலும் செங்கொடி ஏற்றக் கூடாது என்ற கட்டுப்பாட்டைக் கொண்டுவந்தார்கள். அவர்களது சங்கத்தின் வெள்ளைக் கொடியைத்தான் ஏற்ற வேண்டும், இல்லையென்றால், அபராதம் கட்ட வேண்டியிருக்கும் என்று நெருக்கடி தந்தார்கள்.

கோபாலகிருஷ்ண நாயுடு நெல் உற்பத்தியாளர் சங்கத்தின் தலைவராக இருந்தார். அவருடைய மாமா பக்கிரிசாமி நாயுடுதான் அவரை ஆட்டிப் படைத்தவர் என்று சொல்வார்கள்.

போலீஸ் துப்பாக்கிச் சூட்டில் பூந்தழங்குடி பக்கிரி சுட்டுக் கொல்லப்பட்டார். ஒரு நாள் இரவு ஏ.ஜி.கே.வை கொலைசெய்யக் காத்திருந்தவர்கள் அவருக்கு முன்பாக வந்த சிக்கல் பக்கிரியைக் கொன்றுவிட்டார்கள். நாகை வட்டம் முழுக்கப் பதற்றமாக இருந்தது. வெண்மணி உள்ளடங்கிய தேவூர் பகுதியில் நிலக்கிழார்களின் அடியாட்கள் குடிசைகளைக் கொளுத்தும் ஆபத்து இருப்பதாக மார்க்சிஸ்ட் கட்சி சார்பில் அரசுக்கு எச்சரிக்கை தரப்பட்டது. ஆனால், அரசு எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

1968 டிசம்பர் 25 முன்னிரவில் மிராசுதாரர்களின் அடியாட்களுக்கும் தொழிலாளர்களுக்கும் ஏற்பட்ட மோதலில் இருகூர் பக்கிரி கொல்லப்பட்டார். அடுத்து என்ன நடக்கப் போகிறதோ என எல்லோரும் பயந்துகிடந்தார்கள். பக்கத்து ஊருக்குச் சென்று உதவி கேட்பதற்காக இளைஞர்கள் எல்லாம் ஊரை விட்டுச் சென்றிருந்தார்கள். அதனால்தான் இரவு அந்தச் சம்பவம் நடந்தபோது ஊரில் பெரும்பாலும் பெண்கள், குழந்தைகள், வயோதிகர்களே இருந்தார்கள்.

## சம்பவ தினத்தன்று என்ன நடந்தது?

அன்று இரவு தொழிலாளர் குடியிருப்புக்குள் நீல நிற போலீஸ் வேன் போய் நின்றது. அதிலிருந்து இறங்கியவர்கள் துப்பாக்கியால் சுட்டுக்கொண்டே சென்றார்கள். கோபாலகிருஷ்ண நாயுடுதான் அவர்களை வழிநடத்திச் சென்றார். ராமையாவின் குடிசை அந்த ஊரின் கடைசியில் இருந்தது. அந்தக் குடிசையைத் தாண்டியும் போக முடியாது.

அங்கு பதுங்கிக்கொண்டால் விட்டுவிடுவார்கள் என்றுதான் தொழிலாளர் குடும்பத்தினர் நினைத்திருப்பார்கள். குடிசையையே கொளுத்துவார்கள் என்று எதிர்பார்க்கவில்லை. சம்பவம் நடந்து சில நாட்கள் கழித்து, நான் அங்கு சென்று பார்த்தபோது, அங்கிருந்த தென்னை

மரங்களில் தோட்டாக்கள் பாய்ந்திருந்ததைப் பார்க்க முடிந்தது.

விவசாய சங்கத் தலைவர்கள் யாருமே அப்போது ஊரில் இல்லை. கேரளத்தில் சி.பி.எம். கட்சியின் அகில இந்திய மாநாடு நடந்துகொண்டிருந்ததால், தேசியத் தலைவர்கள், மாநிலத் தலைவர்கள் எல்லோரும் அங்கே இருந்தார்கள். ஏ.ஜி.கே. மீது ஒரு வழக்கு இருந்ததால், அவர் தலைமறைவாக இருந்தார். சம்பவத்தைக் கேள்விப்பட்ட பிறகுதான் அவர்கள் வந்துசேர்ந்தார்கள். பி.ராமமூர்த்தி வந்த பிறகுதான் காவல் துறை முற்றுகையை மீறி ஊருக்குள்ளேயே நுழைய முடிந்தது.

## திமுக ஆட்சி இந்தச் சம்பவத்தை எப்படி எதிர்கொண்டது?

அண்ணாவால் இந்தச் சம்பவத்தை நினைத்திருந்தாலும் தடுத்திருக்க முடியாது. இது அவருக்குத் தெரிந்து நடந்தது என்றோ அவர் போலீஸை அனுப்பினார் என்றோ சொல்ல முடியாது. ஆனால், அவர் ஆட்சிக்கு வந்த பிறகுதான் கிஸான் போலீஸ் ஆரம்பிக்கப்பட்டது. ஒருமுறை சட்ட மன்றத்தில் அண்ணா பேசும்போது, “உங்கள் தோழர்களில் சிலர் பகலில் மார்க்சிஸ்ட்டுகள், இரவில் நக்ஸலைட்டுகள்” என்றே சொல்லியிருக்கிறார். விவசாயத் தொழிலாளர் போராட்டத்தை முன்னின்று நடத்திய ஏ.ஜி.கே., மீனாட்சிசுந்தரம் போன்றவர்களைத்தான் அவர் அப்படிச் சொல்லியிருக்கிறார்.

தொழிலாளர்களின் சார்பாக நின்று அந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது; மக்களிடம் நேரடியாகச் சென்று அந்தப் பிரச்சினையை அணுகுவது, போலீஸ் அடக்குமுறையைத் தவிர்ப்பது என்றெல்லாம் கொள்கை இல்லாமல், அதிகாரவர்க்கம் எடுத்த முடிவுகளுக்கு இடம்கொடுத்து விட்ட போது அண்ணா மீது குற்றச்சாட்டு வரத்தானே செய்யும்! முதலமைச்சர் என்ற முறையில் வெண்மணிக்கு அண்ணாவை அரசியல் பொறுப்பாக்குவதில் தவறில்லை.

பெரியாரைப் பொறுத்தவரை கூலி உயர்வுப் போராட்டங்களின் மீதே அவருக்கு நம்பிக்கையில்லை. தன்னிடமிருந்து விலகிப்போனவர்கள் மீதான கோபமும் திமுக ஆட்சி மீதான பரிவும் சேர்ந்துகொண்டன. பெரியார் நிலைப்பாட்டை ஏற்க முடியாதுதான்!

## அரசு என்ன செய்திருக்க வேண்டும்?

செவ்வாழை சிறுகதையில் நிலப்பிரபுகளின் கொடுநெஞ்சை சித்திரித்த அண்ணாவால் இப்போது காலங்காலமாய் ஆதிக்கம் செலுத்தி வந்த பிரபுத்துவத்தின் கோர முகத்தைக் காண

முடியவில்லை. இந்தப் பிரச்சினையை மக்களுக்கு இடையிலான மோதலாகவோ அல்லது அமைதிக் குலைவாகவோதான் அவரது அரசால் பார்க்க முடிந்தது. ஆக, காங்கிரசு அரசுக்கும் திமுக அரசுக்கும் வேறுபாடு இல்லாமல் போனது. அதே அதிகாரிகள்.. அதே போலீஸ் கொள்கை! கேரளத்தில் இடதுசாரிகள் ஆட்சிக்கு வந்தபோது தொழிலாளர் போராட்டத்தில் போலீஸ் தலையிடாது என்ற கொள்கையை எடுத்தார்கள். ஆனால், போலீஸ் கொள்கையில் திமுக எந்த மாற்றத்தையும் கொண்டுவரவில்லை. வெண்மணியில் படுகொலைக்குக் காரணமானவர்கள், தொழிலாளர்கள் என்று இரு தரப்பினர் மீதும் வழக்கு போடப்பட்டது.

நெருக்கடி நிலை அறிவிக்கப்பட்டு மாநில அரசு கலைக்கப்படாமலிருந்த இடைக்காலத்தில் கட்சி சார்பில் அப்போதைய முதல்வர் கருணாநிதியிடம் சில கோரிக்கைகள் வைக்கப்பட்டன. வெண்மணி சம்பவத்துக்கு முன் நடந்த கொலை தொடர்பாகச் சிறையிலிருந்த தோழர்களுக்கு உச்ச நீதிமன்றத்தில் பிணைவிடுதலை பெற உதவ வேண்டும் என்ற கோரிக்கையை அவர் ஏற்றுக்கொண்டார்.

அவர்கள் விடுதலை பெற்று வெளியே சென்றார்கள். அதைப் போல வெண்மணி சம்பவத்துக்குக் காரணமான கோபாலகிருஷ்ண நாயுடுவுக்குப் பிணையை நீக்கி சிறையிலடைக்க வேண்டும் என்ற கோரிக்கையும் ஏற்கப்பட்டது. அவரும் பாலு நாயுடுவும் சிறையில் அடைக்கப்பட்டார்கள். திமுக ஆட்சி 'டிஸ்மிஸ்' ஆனபிறகுதான், அவர்களைப் பிணையில் வெளியே எடுக்க முடிந்தது.

## வெண்மணி சம்பவத்துக்குப் பிறகு கம்யூனிஸ்ட் கட்சி ஏற்படுத்தியிருக்கும் மாற்றம் என்ன?

இது வெறும் கூலிக்கான போராட்டம் அல்ல. உதாரணமாக, தொழிற்சாலைகளில் முதலாளி உயர்ந்தவர், தொழிலாளர்கள் தாழ்ந்தவர்கள் என்று யாரும் சொல்வதில்லை. ஆனால், விவசாயத் தொழிலாளிகள் அப்படிக் கிடையாது. கூனிக் குறுகி, அடிபணிந்து வாழ்ந்த மக்களுக்கு முதலில் மான உணர்ச்சி ஊட்ட வேண்டியிருந்தது. பண்ணைகளுக்குக் காரியக்காரர்களாக இருந்தவர்கள், விவசாயத் தொழிலாளர்களைக் கடுமையாக ஒடுக்கினார்கள். ஊருக்குள் என்ன பிரச்சினை என்றாலும், அது கணவன் - மனைவி சண்டையாகவே இருந்தாலும்கூட, அவர்களைக் கையைக் கட்டி பண்ணையார்களின் முன்பாக நிறுத்திவிடுவார்கள்.

கம்யூனிஸ்ட் கட்சி இவற்றையெல்லாம் மாற்றியமைத்தது. மாதம் ஒருமுறை அமாவாசை

அன்று வேலைக்குப் போகாமல் கூட்டம் நடத்துவார்கள். அங்கு அத்தனை பேரும் கூடிப் பிரச்சினைகளையெல்லாம் பேசித் தீர்த்துக்கொள்வார்கள். தொழிலாளர்களிடம் தன்னம்பிக்கையும் சுயமரியாதை உணர்ச்சியும் உருவாகின.

## பண்ணையார்களின் நிலைப்பாட்டில் மாற்றம் வந்ததா?

இப்படியான சூழல் உருவானதைத் தொடர்ந்து, கூலி ஒரு பிரச்சினையில்லை, முதலில் சங்கத்தைக் கலையுங்கள் என்று பண்ணையார்கள் பேசத் தொடங்கிவிட்டார்கள். உண்மையில், வெண்மணி பிரச்சினைக்கு அடிப்படைக் காரணமே இதுதான்: 'நெல் உற்பத்தியாளர் சங்க'க் கொடிகளை ஏற்ற வேண்டும் என்ற கட்டளையை 'விவசாயத் தொழிலாளர் சங்க' நிர்வாகிகள் மறுத்தார்கள். மறுப்பவர்களுக்கு அபராதம் போடப்பட்டது. அபராதத்தைக் கொடுக்க மறுத்தவர்கள் கடத்தப்பட்டார்கள். அப்படித்தான் வெண்மணியில் தகராறு முற்றியது.

ஆக, சங்கம் வைக்கிற உரிமை இருக்கிறதா இல்லையா என்பதுதான் பிரச்சினையே. சங்கம் வைத்தால் என்ன கிடைக்கும் என்பதற்கு, கீழத் தஞ்சை விவசாயத் தொழிலாளர்களுக்கு என்று இயற்றப்பட்ட குறைந்தபட்சக் கூலிச் சட்டமே சான்று. விவசாயத் தொழிலாளர்கள் என்ற முறையில், பொதுவுடைமை இயக்கம் தீவிரமாக இருந்தது. குறிப்பாக, சிபிஎம் அந்தப் பகுதியில் வலுவாக இருந்தது. திமுகவைச் சேர்ந்த மன்னை நாராயணசாமி போன்ற சிலரும் விவசாயத் தொழிலாளர்களின் கோரிக்கையை ஆதரித்தார்கள். பேச்சுவார்த்தையில் விவசாயத் தொழிலாளர்களின் சார்பில் அவர்களும் கலந்துகொண்டார்கள்.

## இவற்றில் கிடைத்த பலன்களைப் பற்றிச் சொல்லுங்கள்…

நீ மனிதன், நீ இன்னொருவனுக்கு அடிமை கிடையாது என்ற உணர்வைத் தொழிலாளர்களிடம் ஊட்டி வளர்த்தெடுத்தது பொதுவுடைமை இயக்கம். அதுபோல், விவசாயத் தொழிலாளியின் உழைப்புக்கேற்ற ஊதியத்தைக் கொடுக்க வேண்டும், போதிய ஓய்வு வேண்டும், வயலில் வேலை பார்க்கும் தாய்மார்கள் குழந்தைகளுக்குப் பாலூட்டும் உரிமை வேண்டும் என்ற உரிமைகளையெல்லாம் வென்றெடுத்தது.

கீழத் தஞ்சையில் வென்றெடுத்த முக்கியமான உரிமை 'விழுந்த கூலி'. அதற்கு முன்னர் அற்றக் கூலிதான் கொடுக்கப்பட்டது. அற்றக் கூலியைப் பொறுத்தவரை, ஒரு நாள் உழைப்புக்குக் கூலியாக நெல்லோ பணமோ கொடுக்கப்பட்டது. அற்றக் கூலிக்கு விடிவதற்கு முன்பே வயலுக்குச் செல்ல வேண்டும், மாலை அந்தி சாய்ந்த பிறகுதான் கரையேற முடியும்.

விழுந்த கூலியின்படி, ஒரு கலத்துக்கு இத்தனை படி நெல் கொடுக்க வேண்டும். இரண்டாவதாக, கலத்துக்கு இத்தனை படி, கலத்துக்குள்ளேயே அளப்பதா அல்லது வெளியே அளப்பதா என்ற பிரச்சினை வந்தது. அந்தப் போராட்டமும் வெற்றி பெற்றது. இன்றைக்கு வெண்மணியைச் சுற்றியுள்ள கிராமங்கள் வெவ்வேறு கட்சிகளுக்கு மாறிவிட்டன. வெண்மணி கிராமம் மட்டும் மாறவில்லை. இன்னும் அங்கு செங்கொடிதான் பறந்து கொண்டிருக்கிறது.

## இன்றைய சூழலை எப்படிப் பார்க்கிறீர்கள்?

காவிரித் தண்ணீர் இல்லாமல் போனதால், பழைய வர்க்க உறவுகளே மாறி விட்டன. வேலைக்கு ஆட்கள் கிடைத்தால் போதும் என்ற நிலைக்கு வந்துவிட்டார்கள். இப்போது கூலி முக்கியமான பிரச்சினை இல்லை. கூலி உயர்வுக்காக இவ்வளவு தியாகங்கள் செய்து, போலீஸையும் அடியாட்களையும் எதிர்கொண்டு கொலைகளுக்கும் சாவுகளுக்கும் நடுவில் நின்று வெற்றிபெற்ற ஒரு இயக்கம், ஏன் காவிரி உரிமைகளை இழந்தபோது மௌனமாக இருந்தது? அந்த உரிமைகளை மீட்பதற்கு என்ன செய்தது? நிலம் இருப்பவன், இல்லாதவன் என எல்லோருக்குமான உயிர்நாடி காவிரிதானே.

நிலம் உள்ளவர்கள் மாற்று வழிகளைத் தேடிக்கொள்ளலாம். நிலமற்றவர்கள் அகதிகளாகத் திருப்பூருக்கும் கோவைக்கும் பெங்களூருக்கும் இடம்பெயர்ந்து போக வேண்டியிருக்கிறதே! கல்வி, வேலைவாய்ப்புகளுக்குப் பிறகு விவசாய வேலைகளைச் சார்ந்திருக்க வேண்டிய நிலையும் இல்லை. எனவே, நடுத்தர வயதுள்ளவர்கள் மட்டும்தான் அந்த ஊர்களில் விவசாய வேலைகள் பார்த்துக்கொண்டிருக் கிறார்கள்.

விவசாயத் தொழிலாளர்கள் என்ற உரிமையை வென்று கொடுத்து, சங்கங்களை உருவாக்கிய பொதுவுடைமை இயக்கம் தமிழர்களே என்று அவர்களை ஒருநாளும் அழைக்கவில்லை. தொழிலாளியாகக் கூலி உரிமையை இழக்கும்போது போராடிய இயக்கம், தமிழக உரிமைகள் சார்ந்து அவர்களைப் பயிற்றுவிக்கவே இல்லை. அகில இந்தியப் போராட்டத்தில் இவர்களும் ஒருநாள் அடையாள வேலைநிறுத்தம் நடத்துவார்கள்.

ஆனால், இவர்களின் மாநில உரிமை என்னும் தேசிய இன உரிமை மறுக்கப்படும்போது இவர்களுக்காக யாரும் வர மாட்டார்கள். அந்த இடத்தில் ‘தமிழா இன உணர்வு கொள்’ என்று சொல்லும் திராவிட இயக்கம் வளர்ந்திருக்க வேண்டும். ஆனால், அவர்கள் இன உணர்வு என்பதை தேசிய இன உணர்வாக முழுதாக அடையாளப்படுத்தவே இல்லை. அது அவர்களுக்குத் தேர்தல்களுக்கு இடைப்பட்ட காலத்தில் ஒரு பொழுதுபோக்கு!

பதிவு எண் :R.Dis. No. 1964/2014

# கியூபாவின் புரட்சிப் பெண்கள் (10):

சமந்தா

## அலெய்டா மார்ச் டொர்ரெஸ்:

**புரட்சிக்கு முன்:**




அலெய்டா மார்ச் டொர்ரெஸ் 1936ஆம் ஆண்டு அக்டோபர் 19ஆஅம் நாள் சாண்ட கிளாராவில் வில்லா கிளாராவின் லொஸ் அஸுல்ஸில் ஒரு விவசாயக் குடும்பத்தில் பிறந்தார். காட்டலனை சேர்ந்த அலெய்டாவின் தந்தை ஜுவன் மார்ச் ஒரு சிறு நிலத்தில் விவசாயம் செய்தார். அவரது தாயின் பெயர் இயுடொக்சியா டெ லா டொர்ரெ. அலெய்டாவின் உடன்பிறந்தோர் லிடியா, எஸ்டெலா, ஒக்டாவியா, ஒர்லாண்டொ என நான்கு பேர். அலெய்டாதான் கடைக்குட்டி. சிறு வயதில் அலெய்டா ஒரு கிராமத்துக் குழந்தையாக, சிறு பறவையைப் போல் எந்தத் தடையும் இன்றி சுதந்திரமாகச் சுற்றியதாகவும், நீச்சலடித்ததாகவும் குறிப்பிடுகிறார். அவர் சிறு வயதில் கணிதம், கவிதை, இலக்கியம் ஆகியவற்றில் ஆர்வம் காட்டியதுடன் லத்தீன் அமெரிக்க வரலாற்றையும், மெக்சிகோவில் நடைபெற்ற புரட்சியைப் பற்றியும் அறிந்து கொள்ளும் விருப்பமும் கொண்டிருந்தார். பள்ளி ஆசிரியர்கள் வார இறுதி நாட்களில் ஹொசெ மார்த்தி போன்ற சுதந்திரப் போராட்டத் தியாகிகளுக்கு மரியாதை செலுத்தும் விதமாகப் பொது நிகழ்வுகள் ஏற்பாடு செய்து மாணவர்களைக் கலந்து கொள்ள ஊக்குவித்து அவர்களுக்குத் தேசப் பற்றையும், நீதி நெறியையும் ஊட்டியதாகவும் அலெய்டா நினைவுகூர்கிறார்.

அவரது சகோதரிகள் லிடியாவும், எஸ்டெலாவும் சாண்டாகிளாரா நகரில் தனி வீடுகளில் வசித்ததால் அலெய்டாவின் தாயார் திட்டமிட்டபடி அலெய்டாவும், அவரது சகோதரன் ஒர்லொண்டோவும் நகருக்குச் சென்று படித்தனர். ஆங்கிலம் பயில மிகவும் சிரமப்பட்டதாக

அலெய்டா குறிப்பிடுகிறார். கெடுவாய்ப்பாக அலெய்டாவின் சகோதரி நோய்வாய்ப்பட்டு இறந்து போனதால், அலெய்டாவின் பெற்றோரும் நகருக்குக் குடியேறினர். அலெய்டா பள்ளிப் படிப்பை முடித்ததும், மருத்துவத்தில் ஈடுபாடு கொண்ட போதும் தங்கள் குடும்பத்தில் நிதி நெருக்கடி இருந்ததால், உடனடியாய் வேலை பெறும் விதத்தில் 15 வயதில் ஆசிரியப் பயிற்சிக் கல்வியில் சேர்ந்தார், 1953இல் வெற்றிகரமாக அந்தப் படிப்பை முடித்தார். பிறகு லாஸ் வில்லாஸில் உள்ள மத்தியப் பல்கலைக்கழகத்தில் கல்வித் துறையில் சேர்ந்தார். அரசாங்கம் ஊழல் மலிந்திருந்ததால் லஞ்சம் கொடுக்காமல் ஆசிரியர் பணி வாங்க முடியாது என்றும் அப்படியே பெற்றாலும் தொலைதூரப் பகுதியில் பல வகுப்பு மாணவர்களையும் ஒன்றாய்ச் சேர்த்து எடுக்கும் சிறிய பள்ளியில்தான் வேலை பெற முடியும் என்றும் அலெய்டா அறிந்தார். அலெய்டாவின் உண்மையான அரசியல் கல்வி பல்கலைக்கழகத்தில் சேர்ந்த காலத்திலிருந்து தொடங்கியது.

1952 மார்ச் 10இல் ஆட்சிக் கவிழ்ப்பின் மூலம் பாத்திஸ்டா அதிபரானதே அலெய்டாவின் மீது தாக்கம் ஏற்படுத்திய முதல் அரசியல் நிகழ்வு. அவரது பெற்றோர் அரசியலில் எந்தச் சார்பும் இல்லாதவர்களாக இருந்த போதும் எட்வர்டோ சிபாஸ் தலைமையிலான ஆர்த்தடாக்ஸ் கட்சியை ஆதரித்தனர்.

ஃபிடல் காஸ்ட்ரோவின் தலைமையிலான மன்கடா ஆயுதப்படை தாக்குதல் பற்றிய செய்தி அறிந்து அலெய்டா மிகவும் உத்வேகமடைந்தார். ஃபிடல் காஸ்ட்ரோவின் 'வரலாறு என்னை விடுதலை செய்யும்' உரையை வாசித்த போது அதில் கியூபா ஒரு தேசமாகத் தன் இறையாண்மையை எவ்வாறு அடைய முடியும் எனத் தான் கருதியவையும் வெளிப்பட்டிருப்பதாக உணர்ந்தார். 1956ஆம் ஆண்டைத் தன் அரசியல் வாழ்வில் முக்கியமான ஆண்டாக அலெய்டா குறிப்பிடுகிறார்.

சர்வாதிகாரத்தின் தொடர்ச்சியான அடக்குமுறையை எதிர்த்து மாணவர்களுடன் சேர்ந்து போராடினர். பல்கலைக்கழகத்தின் சூழ்நிலை பதற்றம் நிறைந்ததாக மாறி நிலைமை மோசமடைந்ததால் பல்கலைக்கழகம் மூடப்பட்டது. அலெய்டா நான்கு ஆண்டுப் படிப்பில் மூன்று ஆண்டுகளையே முடித்திருந்தார், ஆனால் பல்கலைக்கழகம் மூடப்பட்ட பிறகு அவரால் படிப்பைத் தொடர முடியவில்லை.

**புரட்சியில்:**

1956 செப்டம்பரில் மெக்சிகோவிலிருந்து திரும்பிய ஃபாஸ்டினோ பெரெஸிடம் ஜூலை 26



இயக்கத்தில் தன்னை சேர்த்துக் கொள்ளுமாறு அலெய்டா கேட்டுள்ளார். அவரும் அதற்கு ஆவலுடன் சம்மதித்தார்.

அலெய்டா காலை வேளையில் பணிபுரியும் பள்ளியின் தலைவரான மார்கோட் மச்சாடோவும், ஜூலை 26 இயக்கத்தின் போராளியாகத் தீவிரமாய்ச் செயல்பட்டார். அவரும் அலெய்டாவும் இயக்கத்தின் பல்வேறு தலைமறைவுப் பணிகளை ஒன்றாகச் செய்துள்ளனர். தான் போராட்ட உலகில்தான் உண்மையாகப் பிறந்ததாகவும், அதுவே தன் வாழ்வின் மகிழ்ச்சியான பகுதிகளில் ஒன்றாகவும் அலெய்டா குறிப்பிடுகிறார்.

அலெய்டா ஆரம்பத்தில் தான் இயக்க வேலைகளில் ஈடுபடுவதைத் தன் பெற்றோரிடம் மறைத்தார். தான் நண்பர்களின் வீட்டிற்கு படிக்கப் போவதாக சாக்குச் சொல்லியவாறு இயக்க வேலைகளில் ஈடுபட்டுள்ளார். நாளடைவில் இது குறித்து அவரது பெற்றோருக்குத் தெரிய வந்த போது அலெய்டாவை அவர்கள் வீட்டை விட்டு வெளியேறாதவாறு தடுத்துள்ளனர். பிறகு காலப் போக்கில் அவரது செயல்பாடுகளை ஏற்றுக் கொண்டனர்.

அலெய்டா நகர்ப்புறத்தில் தலைமறைவு இயக்க வேலைகளில் ஈடுபட்டார். அவர் பகுதியைச் சார்ந்த ஜூலை-26 தலைவர்களால் முக்கிய வேலைகளில் ஈடுபடுத்தப்பட்டார். கியூமடோ டி கெய்ன்ஸில் வெக்டர் போர்டன் மேற்கொண்ட முன்முயற்சியின் அடிப்படையில் ஜூலை-26 இயக்கத்தின் கெரில்லாப் போர்முனைகள் கட்டமைக்கப்பட்டன. இந்தக் கொரில்லா போர்முனைகள் அனைத்தையும் உருவாக்குவதில் அலெய்டா பங்கேற்றார். இந்த முனைகளுக்குத் தேவையான ஆயுதங்கள், உடைகள் மற்றும் இதர தேவைகளைத் திட்டமிடும் பொறுப்பை அலெய்டா ஏற்றுக் கொண்டார்.

ஏப்ரல் 9 வேலைநிறுத்தப் போராட்டத்திற்கான ஆயத்த வேலைகளிலும் அலெய்டா ஈடுபட்டார். அந்தப் போராட்டம் தோல்வியடைந்தது. அலெய்டாவின் உறவினர் லாரானோ



அனோசெட்டோ மார்ச்சும் அவரது மகன் எட்வர்டோ அனோசெட்டோ ரெகாயும் பாத்திஸ்டா படையினரால் சித்திரவதை செய்யப்பட்டுக் கொல்லப்பட்டனர்.

அலெய்டாவின் லாஸ் வில்லாஸ் பிராந்தியமானது பாத்திஸ்டா படைகளால் சூழப்பட்டும் கண்காணிக்கப்பட்டும் இருந்தது. அலெய்டா தூதுவராக வேலை செய்தார், இயக்கத்தின் தலைமை அலெய்டாவை எஸ்காம்ப்ரே மலைகளுக்குச் சென்று கெரில்லாப் போராளிகளுக்கு பணமும், ஆவணங்களும் கொண்டுசேர்க்கும் ஆபத்தான பணியை நிறைவேற்றுமாறு ஆணையிட்டது.

அலெய்டா பணப் பையைத் தன் இடுப்பைச் சுற்றிப் பசை வைத்துக் கட்டியவாறு எஸ்காம்ப்ரோ மலைகளுக்குப் புறப்பட்டார். அங்குதான் சே குவேராவின் 8ஆவது ஆயுதப் படை முகாமிட்டிருந்தது. பணப் பையை அகற்றிய போது அவர் உடலில் காயம் ஏற்பட்டது. மருத்துவ உதவி தேவைப்பட்டதால் அவர் முகாமிலேயே சில நாட்கள் தங்கினார்.

நகரத்தில் அலெய்டா இனி பாதுகாப்பாக இருக்க முடியாது என்ற காரணத்தால்தான் அவர் எஸ்காம்ப்ரோ மலைக்கு அனுப்பப்பட்டார். அலெய்டா அனுபவமிக்க போராளியாகத் தலைமறைவு வேலைகளிலே அதிகம் ஈடுபட்டிருந்தாலும் பிறரது உத்தரவுகளைப் பின்பற்றவே அங்கே எதிர்பார்க்கப்பட்டதால் கொஞ்சம் பாதுகாப்பின்மையை உணர்ந்தார்.

தான் ஆயுதப் போராளியாக வேண்டும் என்ற சவாலே அப்பொழுது அவர் முன்னிருந்தது. தன் திட்டத்தை அலெய்டா சே குவேராவிடம் தெரிவித்தார். சே குவேரா புதிதாக வருபவர்களுக்கு ஒரு குறிப்பிட்ட பணி மட்டுமே வழங்கப்படும் என்றும், முகாமில் ஒரு செவிலியாகப் பணிபுரியுமாறு அலெய்டாவிடம் கூறியுள்ளார். இரண்டு வருடத் தலைமறைவு வேலை செய்ததால் தனக்கு கெரில்லாப் போராளியாக உரிமை உள்ளது என்று அலெய்டா பதில் அளித்துள்ளார். சே குவேரா ஒப்புக்கொள்ளவில்லை. சர்க்கரை உற்பத்தியாளர்களிடமிருந்து வரி வசூல் செய்வது போன்ற வேறு சில முக்கியமான பணிகளை முடிக்க நகரத்திற்குத் திரும்புமாறு அலெய்டாவிடம் சே கூறியுள்ளார்.

அலெய்டா அருகிலுள்ள நகரமான பிளாசெட்டாஸுக்குச் சென்றார், அங்கு

அலெய்டாவைக் கைது செய்யப் **பிடியாணை** பிறப்பிக்கப்பட்டதால் கெரில்லா முகாமுக்குத் திரும்புமாறு இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் கேட்டுக்கொண்டார். அலெய்டா எஸ்காம்ப்ரே மலைகளுக்கு திரும்பி சென்றார். முகாமில் தங்குவதற்கான அலெய்டாவின் முடிவை சே குவேராவைத் தவிர அனைவரும் ஒப்புக்கொண்டனர். சே பின்னர் ஓலோ பான்டோஜாவிடம் அலெய்டாவை எல் பெட்ரெரோவுக்கு அழைத்துச் செல்லுமாறு ஆணையிட்டார். அலெய்டா மிகுந்த கோபமும் கவலையும் அடைந்தார்.

அதன் பிறகு ஒரு நாள் விடியற்காலையில் ஜீப்பில் எல் பெட்ரெரோவைக் கடந்து செல்லும் போது அலெய்டா பயணப் பையுடன் தெருவில் அமர்ந்திருந்ததைக் கண்ட சே குவேரா தங்களுடன் வருமாறு அலெய்டாவை அழைத்துள்ளார். அலெய்டாவும் மறுக்காமல் அவர்களுடன் சென்றார்.

பல ஆண்டுகளுக்குப் பிறகு, சே குவேரா ஒரு கம்யூனிஸ்டாகத் தன்னைக் கண்காணிக்கத்தான் அலெய்டாவை லாஸ் வில்லாஸ் இயக்கத்தின் தலைமை (பெரும்பாலும் வலதுசாரிகளால் ஆனது) அங்கு அனுப்பியதாகச் சந்தேகித்ததாகவும், அலெய்டா நகரத்துக்குத் திரும்ப முடியாது என்பது தமக்கு தெரியாததாலும்தான் அலெய்டாவை கெரில்லாப் பிரிவில் சேர்க்கத் தயங்கியதாக அவரிடம் கூறியுள்ளார்.

ஜூலை-26 இயக்கம் ஒரு தற்காலிக அரசாங்க அமைப்பை அறிவித்த பிறகு சாண்டா கிளாரா போருக்கான ஆயத்தப் பணிகளை சே மேற்கொண்டார். அவர் மணிகராகுவாவில் உள்ள சினெசியோ டோரஸுக்கு அனுப்ப வேண்டிய கடவுச் சொற்கள் நகலெடுக்க அலெய்டாவுக்கு அறிவுறுத்தினார் அப்போதிருந்து, அலெய்டா சேவின் தனிப்பட்ட உதவியாளராக செயல்பட ஆரம்பித்தார்.போர் முடியும் வரை தூக்கமும், பசியுமே அவர்களுக்கு துணையாக இருந்ததாக அலெய்டா குறிப்பிடுகிறார்.

டிசம்பர் 28 அன்று சே குவேரா அலெய்டாவுக்கு எம் கார்பைன்-1 துப்பாக்கியை வழங்கியுள்ளார். யாருக்கு ஆயுதங்களை வழங்க வேண்டும் என்பதற்கான தனது அளவுகோல்களில் சே மிகவும் கண்டிப்பாக இருந்ததால் இது தனக்கு மிகவும் பெருமையும், நிறைவும் ஏற்படுத்தியதாக அலெய்டா குறிப்பிடுகிறார்.

எழுச்சிமிக்க சாண்டகிளாரா போரில் சே குவேராவுடன் பங்கு கொண்டதுடன் அவரின்



தீரமிக்க போர் தந்திர நடவடிக்கைகளை நேரில் கண்ட சாட்சியாகவும் அலெய்டா இருந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

**புரட்சிக்கு பின்:**

ஜனவரி 5இல் கமகுயிக்கு ஃபிடலை சந்திக்கச் சென்ற விமானப் பயணத்தின் போது சே ஒரு புரட்சிகரப் போராளியின் கடமைகள் குறித்துத் தம் கருத்துகளைக் குறிப்பெடுக்குமாறு அலெய்டாவுக்கு ஆணையிட்டுள்ளார். அவ்வாறு தான் அதிகாரப்பூர்வமாக முடிவு செய்யப்படாமல், அவருடன் தனது முதல் வேலையைத் தொடங்கிய அலெய்டா அலுவலகத்திலும், வீட்டிலும் சேயின் தனிச் செயலாளராகவே செயல்பட்டுள்ளார்.

அலெய்டா சேயின் கட்டளைப் படி படைவீரர்களின் தேவைகளை நிறைவு செய்து, பிரச்சினைகளைச் சரி செய்தார். சே குவேரா அலுவலகச் சந்திப்புகளை ஒழுங்கு செய்தார். "பொருளாளராக"த் தங்களிடம் இருந்த பணத்தை நிர்வகிக்கும் பொறுப்பும் அலெய்டாவுக்கு அளிக்கப்பட்டது. அதைச் சிக்கனமான முறையில் நிர்வகித்தார். எழுத்தறிவு இயக்கத்திற்காகவும்

அலெய்டா பணி புரிந்தார்.

அலெய்டா லா கபானாவில் இருந்த போது கல்வி அமைச்சர் அர்மாண்டோ ஹார்ட்டிடம் தனிப் பயிற்சிகள் பெற்றார். லாஸ் வில்லாஸில் மத்தியப் பல்கலைக்கழகத்தில் அலெய்டா கல்வியல் துறைப் படிப்பை முடித்ததாலும், சமுதாயத்தில் பெண்களின் பங்கு பற்றிய “நடைமுறை ஆய்வறிக்கையை” எழுதி முடித்ததாலும் கல்வியியல் துறையில் முனைவர் பட்டம் அளித்து கௌரவிக்க ஹார்ட் முடிவு செய்தார். அது அலெய்டாவுக்குப் பெரிதும் மகிழ்ச்சியளித்தது.

சே குவேராவுக்கும் அலெய்டாவுக்கும் காதல் அரும்பி மலர்ந்ததால் 1959 ஜூன் 12இல் திருமணம் செய்து கொண்டனர். திருமணம் முடிந்து 10 நாட்களில் சே சர்வதேச நாடுகளுடனான கியூபாவின் உறவை வலுப்படுத்தவும், அணிசேரா இயக்கத்திற்கான பாண்டுங் மாநாட்டில் கலந்து கொள்ளவும் செல்ல வேண்டியிருந்தது, இது நீண்ட நாள் பயணம் ஆதலால் சேயின் தனிச் செயலாளராகத் தானும் அவருடன் வருவதாக அலெய்டா கேட்டுள்ளார். ஃபிடலும் அலெய்டாவை அழைத்து செல்லுமாறு சேயிடம் கூறியுள்ளார். அலெய்டா தனிச் செயலாளர் மட்டுமல்லாமல் தன் மனைவியாகவும் இருப்பதால் அழைத்துச் செல்ல இயலாது, மற்றவர்கள் தனியாக வரும் போது தான் மட்டும் மனைவியுடன் சென்றால் அது சிறப்புச் சலுகையாகக் கருதப்பட்டுத் தவறான முன்னுதாரணமாகி விடும் என்று மறுத்துள்ளார். அந்நிகழ்விலிருந்து தான் நிறைய கற்றுக் கொண்டுள்ளதாக அலெய்டா பின்னர் குறிப்பிட்டுள்ளார்.

சே எப்போதும் தன் கருத்துகளை மதித்ததாக அலெய்டா குறிப்பிடுகிறார். புரெபெஸ்டிரிய கிறித்தவ மரபில் நம்பிக்கை கொண்டிருந்த அலெய்டா, காலப் போக்கில், தன்னைச் சுற்றி ஏற்பட்ட சமூக மாற்றத்தாலும், சேயின் தாக்கத்தாலும் மதம் குறித்தத் தன் பார்வையை மாற்றிக் கொள்ள முடிந்ததாகக் கூறியுள்ளார்.

தேசிய விவசாயச் சீர்திருத்தத் தொழில் துறை அமைப்பின் தலைவராக சே பொறுப்பேற்ற போது அலெய்டா அவருக்குத் தனிச் செயலாளராகப் பணிபுரிந்தார். நவம்பர் 1959இல், எல்லா கியூப சமூகத் துறைகளை சேர்ந்த 80க்கும் மேற்பட்ட பெண்களின் குழுவுடன் சிலியில் நிகழ்ந்த

முதல் லத்தீன் அமெரிக்க பெண்கள் பேரவையில் அலெய்டா பங்கேற்றார்.
1962இல் நடந்த கியூபப் பெண்கள் கூட்டமைப்பின் முதல் பேரவையில் அலெய்டா பொதுச்செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1961இல் கியூபப் பெண்கள் கூட்டமைப்பு சார்பில் அலெய்டா சீனாவிற்கு சென்றார்.

சே காங்கோவுக்குப் புறப்பட்ட போது, அலெய்டா தானும் குழந்தைகளை பாதிக்காதவாறு காங்கோ சென்று சேயுடன் இணைந்து விடுதலை போராட்டத்தில் பங்கேற்க விரும்புவதாகக் கூறியுள்ளார். குழந்தைகளுடன் அங்கேயே தங்க வேண்டும் என்றும் அலெய்டாவால் மட்டுமே அவர்களை அன்புடன் பராமரித்து வழிகாட்ட முடியும் என்றும் கூறி சே அதை மறுத்துள்ளார்.

1966 அக்டோபரில் பொலிவிய விடுதலைப் பயணத்தை சே மேற்கொண்ட போது, ஐந்து வருட நீண்ட போராட்டத்திற்குப் பிறகு வெற்றியுடன் சே திரும்பிய பின் மீண்டும் ஒன்றிணைய முடியும் என்றே அலெய்டா உறுதியாக நம்பியிருந்தார்.

”ஃபிடல் எங்களைப் பற்றிக் கவலைப்பட்டவாறே எப்போதாவது வந்து பார்ப்பார், எங்கள் தேவைகளைக் கவனத்தில் கொள்வார். சே சம்பந்தப்பட்ட எல்லாவற்றிலும் ஃபிடல் அப்படித்தான் இருந்தார்” என்றும், ”பொலிவியாவில் கெரில்லா இயக்கத்தின் முன்னேற்றம் குறித்த செய்திகளை ஃபிடல் ஒருபோதும் சொல்லத் தவறியதில்லை” என்றும் அலெய்டா குறிப்பிட்டுள்ளார்.

சே பொலிவியாவுக்குச் செல்வதற்கு முன், பல்கலைக்கழகத்தில் சேர்ந்து வரலாற்றுத் துறையில் படிக்க தன்னை அறிவுறுத்தியதால் வரலாற்றுத் துறையில் சேர்ந்து படித்ததாகவும் அது மிகவும் பயனளித்ததாகவும் அலெய்டா குறிப்பிடுகிறார்.

அக்டோபர் மாதத்தில் சேயின் மறைவு குறித்த அந்த பயங்கரமான செய்தியைக் கேட்ட போது அலெய்டா எஸ்காம்பிரே மலைகளில் வரலாற்று மாணவராக முக்கியமான ஆராய்ச்சிப் பணிகளில் ஈடுபட்டிருந்தார். 1968இல் அலெய்டா லாஸ் வில்லாஸில் உள்ள டிரினிடாட்டில் ஆய்வுப் பணியில் ஈடுபட்டிருந்த போது தன்னை நேரில் வந்து பார்க்குமாறு ஃபிடலிடம் இருந்து செய்தி வந்ததால் அலெய்டா ஆச்சரியத்தில் ஆழ்ந்தார். பொலிவியாவில் சே எழுதிய நாட்குறிப்பு குறுகிய காலத்தில் தன் கைக்குக் கிடைக்கும் என்று அவர் கற்பனையில் கூட நினைத்துப்



பார்க்கவில்லை. சேயின் நாட்குறிப்பு கியூபாவுக்கு அனுப்பப்பட்டது. சேயின் கையெழுத்தைத் தெளிவுபடுத்த அலெய்டாவின் உதவியை ஃபிடல் கேட்டுள்ளார். சேயின் கையெழுத்தைத் தன் உதவியின்றியே புரிந்து கொள்ள முடியும் எனும் போதும் சே குறித்த விசயத்தில் முதன்மையான ஒருவராக அலெய்டாவை ஈடுபடுத்த வேண்டும் என்ற நுட்பமான உணர்வினாலே ஃபிடல் அவ்வாறு செய்ததாகவும் அது தன்னை நெகிழச் செய்ததாகவும் அலெய்டா குறிப்பிட்டுள்ளார்.

சேயின் பொலிவிய நாட்குறிப்பு குறித்து அலெய்டாவிடம் கேட்ட போது அவர் இவ்வாறு கூறியுள்ளார் "பொலிவிய நாட்குறிப்பு குறித்த எனது உணர்வுகளை, இப்போது பல ஆண்டுகளுக்குப் பிறகு, விளக்குவது மிகவும் கடினம். அதைப் படியெடுக்கும் பணியில் நான் ஈடுபட்ட போதும் பொலிவிய நாட்குறிப்பை என்னால் மீண்டும் படிக்க முடியவில்லை, அதன் பகுதிகளையும், தேதி மற்ற விவரங்களையும் சரிபார்க்க முடிந்த போதும் என்னால் அதை உட்கார்ந்து முழுமையாகப் படிக்க இயலவில்லை. சேயின் அந்தத் தனிமையான இறுதித் தருணங்களின் வேதனையைப் பெரிதும் உணர்கிறேன். அவரை ஆற்றுப்படுத்த அவருடன் நானில்லை, அந்தத் துணிவான மனிதனை, நான் எப்போதும் அறிந்த கெரில்லாப் போராளியைத் மட்டும் நினைவில் கொள்ளவில்லை. பல்வேறுபட்ட பரிமாணங்களைக் கொண்ட அந்தச் சிறப்பு மிக்க மனிதனின் மற்ற அம்சங்களைப் பற்றியும் நான் நினைக்கிறேன். மனித குலத்தின் மீதான தன் அன்பிற்காகத் தன்னை முழுமையாகக் கொடுத்த மனிதனை எந்த அளவுக்கு மிருகத்தனமான முறையில் இப்படிச் செய்கிறோம் என்பதைக் கருதாத கொலையாளிகளால் அவர் படுகொலை செய்யப்பட்டார்."

அலெய்டா வரலாற்றுத் துறையில் பட்டம் பெற்ற பின்னர், கல்வித்துறை அமைச்சகத்தில் லத்தீன் அமெரிக்க வரலாறு குறித்த பள்ளி நூல்களைத் தயாரிப்பதில் பிற ஆய்வாளர்களின் குழுவுடன் பணியாற்றினார். கியூப மகளிர் கூட்டமைப்பிலும் தன் பணிகளைத் தொடர்ந்தார். அலெய்டா அமெரிக்க ஆய்வு மையத்தில் பணியாற்றினார். அதில் குறிப்பாக அர்ஜென்டினாவின்

தொழிலாளர் இயக்கம் குறித்து கவனம் செலுத்தியதாகவும் சேயின் தாயகத்துடன் ஒரு வலுவான பிணைப்பை உணர்ந்ததாகவும் குறிப்பிடுகிறார்.

1975இல் மக்கள் அதிகார தேசிய அவையின் பிரதிநிதியாக அலெய்டா தேர்ந்தெடுக்கப்பட்டார். சர்வதேச உறவுகளுக்கான ஆணையத்தின் முதல் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அலெய்டாவுக்கும், சே குவேராவுக்கும் மொத்தம் நான்கு குழந்தைகள். மூத்த மகள் அலெய்டா குழந்தை மருத்துவராக பணியாற்றுகிறார், இளைய மகள் சிலியா டால்பின்கள், சீல்களுக்கான சிறப்புக் கால்நடை மருத்துவராகப் பணியாற்றுகிறார். மகன்கள் காமிலோ மற்றும் எர்னஸ்டா இருவருமே வழக்கறிஞர்கள். அவர்களைத் தலைவரின் குழந்தைகள் என்ற பிம்பத்திற்குள் சிக்க வைக்காமல் சாதாரணமான ஆண் பெண்களாகவே அலெய்டா வளர்த்துள்ளார். ஒரு துயருறும் விதவையாகச் சிலை போல் கல்லாகிப் போவதைத் தடுக்க பல ஆண்டுகளாக முயன்று இறுதியில் மறுமணம் செய்து கொண்டதாக அலெய்டா குறிப்பிட்டுள்ளார். சே குவேராவுடனான தன் வாழ்வை அலெய்டா “என் நினைவில் சே (சே குவேராவுடன் என் வாழ்க்கை)” என்று நூலாக்கியுள்ளார். தமிழில் அந்நூலை தோழர் அ.மங்கை மொழிபெயர்த்துள்ளார்.

சே விட்டுச் சென்ற உண்மையான பாரம்பரியத்தை உயிருடன் வைத்திருக்க வேண்டியதன் அவசியத்தை உணர்ந்தவராய் அது குறித்து ஃபிடலுடன் கலந்துரையாடினார் அலெய்டா. சே-அலெய்டாவின் வீட்டை அருங்காட்சியகமாக மாற்றலாமா என ஃபிடல் கேட்டுள்ளார். வீட்டை சே பற்றிய ஆய்வு மையமாக மாற்றும் திட்டத்தை அலெய்டா பரிந்துரைத்த போது ஃபிடல் அத்திட்டத்தை ஏற்றுக் கொண்டார். தற்போது சே குவேரா ஆய்வு மையத்தின் தலைவராக அலெய்டா மார்ச் பணிபுரிகிறார். சேயின் பணிகளை, வெளியிடப்படாத ஆவணங்கள், புகைப்படங்கள், அவரைப் பற்றிய ஆய்வுகளை ஒழுங்கமைத்து, அவரது வாழ்வையும் பணியையும் புத்தாக்கத் திறனையும் அறியத் தருவதே சேயின் குடும்பமாக கியூபருக்கு வழங்கக் கூடிய மிகச்சிறந்த ஒன்று என்ற உறுதியான நம்பிக்கையுடன் தன் பணியைத் தொடர்கிறார் அலெய்டா. இன்னும் பல்லாண்டுகள் அவரது புரட்சிகரப் பெரும்பணி ஓங்கிட வாழ்த்துவோம்.

(தொடரும்)

# அரசியல் வகுப்பு: பாடக் குறிப்புகள்

## தியாகு

## “தமிழ்நாடு இனி” (5)

அண்ணல் அம்பேத்கர் சாதியமைப்பைப் பற்றிச் சுடர்மிகு ஆய்வுகள் செய்தவர். சாதிகள் நிலவும் வரை இந்தியா தேசமாக முடியாது என்று பறைசாற்றியவர். ஆனால் அவர் கணக்கில் கொண்ட குமுகப் பொருளியல் ஏற்றத்தாழ்வுகளில் பொருளியல், குமுக. பாலியல் நிகரின்மைகள் இடம்பெற்றது போல் மொழிகளின் நிகர்மையின்மை இடம் பெறவில்லை. மொழிகளுக்கிடையே நிகர்மையின்மை அல்லது ஏற்றத்தாழ்வு என்பதன் பொருள் மொழி பேசும் மக்களினங்களிடையே, அதாவது தேசிய இனங்களிடையே ஏற்றத்தாழ்வு ஆகும். மொழி ஒடுக்குமுறை கோலோச்சும் நாடு ஒருபோதும் தேசமாக முடியாது. ஆனால் அம்பேத்கர் இந்தியும் ஆங்கிலமும் வடமொழியும் திணிக்கப்படுவதைத் திணிப்பாகவே கருதியதாகத் தெரியவில்லை. அரசமைப்பின் 17ஆவது பகுதியில் அவருக்கு எவ்வித முரண்பாடும் எழ வில்லை. வடமொழி சமற்கிருதத்தை இந்தியாவின் தேசிய மொழியாக்கலாம் என்று அவர் பரிந்துரைத்தது அதிர்ச்சியளிப்பதாக உள்ளது. இந்திய அரசில் மட்டுமல்லாமல் மாநிலங்களிலும் இந்தியே ஆட்சிமொழியாக இருக்க வேண்டும் என்பதும் அவர் கருத்தாக இருந்தது. அம்பேத்கரின் மொழிக் கொள்கை தவறானது என்றே நாம் முடிவுக்கு வர வேண்டியுள்ளது. மொழிக் கொள்கையை விலக்கி விட்டு அவரது சமூகநீதிக் கொள்கையைத் தமிழ்த்தேசியம் தனதாக்கிக் கொள்ள வேண்டும்.

இதே போல் தந்தை பெரியாரின் சாதி ஒழிப்புக் கொள்கையும் இந்திய வல்லாண்மைக்கு எதிரான நிலைப்பாடும் சரியானவை என்றாலும் அவரது மொழிக் கொள்கை தவறானது என்ற முடிவுக்குத்தான் வர வேண்டியுள்ளது. தவறான மொழிக் கொள்கை மட்டுமன்று, 1965 இந்தித் திணிப்புக்கு எதிரான போராட்டத்தில் பெரியார் எடுத்த அரசு-ஆதரவு நிலைப்பாடும் மோசமான தவறு ஆகும். இத்தனையையும் மீறித் தமிழ்த் தேசியத்தோடு அவரை உறவுபடுத்தும் காரணிகள் சாதியொழிப்பிலும் பெண்ணுரிமையிலும் அவர் கொண்டிருந்த மெய்யான ஈடுபாடும், இறுதி வரை இந்திய மேலாதிக்கத்தை ஏற்க மறுத்த அவரின் உறுதிப்பாடுமே ஆகும்.

தமிழ்நாட்டில் மொழித் திணிப்பு என்றாலே இந்தித் திணிப்பு என்று மட்டும்தான் புரிந்து கொள்ளப்படுகிறது. நம் மீது எந்த அயல்மொழி திணிக்கப்பட்டாலும் அது மொழித் திணிப்புதான்

என்ற பார்வை நமக்குத் தேவை. நமக்கு மட்டுமன்று, ஒவ்வொரு மக்களினத்துக்கும் ஒரு சரியான மொழிக் கொள்கை தேவை. இந்தி, ஆங்கிலம், வடமொழி ஆகிய மும்மொழித் திணிப்புக்கு இந்திய அரசமைப்பின் 17ஆம் பகுதி சான்றாக உள்ளது. மொழித் திணிப்பை அறிந்தேற்கும் நண்பர்கள் சிலர் தேசிய ஒடுக்குமுறை நிலவுவதாக ஒப்புக் கொள்வதில்லை எனக் காண்கிறோம். மொழி என்பது தேசிய இனத்தின் ஒரு கூறு ஆகையால் மொழி ஒடுக்குமுறை என்பது தேசிய ஒடுக்குமுறையின் ஒரு கூறுதான். ஒரு மொழி ஒடுக்கப்படுகிறது என்றால் அம்மொழி பேசும் மக்கள் ஒடுக்கப்படுகிறார்கள் என்று பொருள். இந்திக்கும் தமிழுக்கும் நிகர்மை இல்லை என்றால் இந்திக்காரர்களுக்கும் தமிழர்களுக்கும் நிகர்மை இல்லை என்று பொருள். தமிழுக்கு எதிரான பாகுபாடு என்றால் தமிழர்களுக்கு எதிரான பாகுபாடு என்று பொருள். இந்தி பேசும் மக்களை இந்தித் தேசிய இனமாகக் கருதினால் அதனை ஒடுக்கும் தேசிய இனமாகக் கருதுவதில் பிழையில்லை. இது அம்மக்கள் மீதும் இருக்கிற பிற ஒடுக்குமுறைகளை மறுப்பதாகாது.

ஒவ்வொரு மக்களினம் அல்லது தேசிய இனத்தின் மொழியும் அம்மக்களின் எல்லா நோக்கங்களுக்கும் பயன்படுத்தப்பட வேண்டும். ஆட்சி மொழியாக மட்டுமல்ல கல்வி மொழியாகவும் நீதி மொழியாகவும் வணிக மொழியாகவும் எல்லா வகையிலும் அம்மக்களின் தேசிய மொழி இடம்பெற வேண்டும், சான்றாக, இந்தி படித்தால் என்ன? என்று ஆட்சியாளர்கள் கேட்கிறார்களே தவிர, வங்க மொழி படித்தால் என்ன, அசாமிய மொழி படித்தால் என்ன என்றெல்லாம் கேட்பதில்லை. இந்தி ஆட்சிமொழியாக இருப்பதால்தான் இந்தக் கேள்வி கேட்கப்படுகிறது. தமிழ் வாழ வேண்டுமானால் தமிழ் ஆள வேண்டும். தமிழ் தமிழரை ஆள வேண்டும், வேறு யாரையும் அல்ல. எங்கும் தமிழ் எதிலும் தமிழ் என்பதன் பொருள் இதுவே. இன்னொரு மொழியைக் கற்பதற்கு நம் இந்த மொழிக் கொள்கை தடை போடுவதில்லை. இன்னும் ஒரு மொழி என்ன, தேவைப்பட்டால் பல மொழிகள் கற்கலாம். ஆனால் தமிழே பயிற்றுமொழியாகவும் முதல் பயில்மொழியாகவும், அதாவது கல்வி மொழியாக இருக்க வேண்டும்.

மொழி ஒடுக்குமுறை என்பது ஒரு பிறழ்வாக இல்லாமல் இந்த அமைப்பின் அடிப்படைக் கூறாகவே இருக்கிறது. பிறழ்வு என்றால் இந்த அமைப்புக்குள்ளேயே சரிசெய்து விடலாம்.

அமைப்பையே மாற்றினால்தான் முடியும் என்பதால்தான் விடுதலை தீர்வாகிறது. இந்தித் திணிப்பு என்பது பிறழ்வன்று. அதனால்தான் அதனைத் திருத்த முடியவில்லை. இந்தித் திணிப்பு இல்லாத இந்தியா இருக்க முடியாது. இந்தித் திணிப்பு ஒழிய இந்தியக் கட்டமைப்பு ஒழிய வேண்டும். அமைப்பின் எழுத்து வடிவமாக உள்ள அரசமைப்புச் சட்டத்தில் பல நல்ல நோக்கங்கள் பொறிக்கப்பட்டிருந்தாலும் அவற்றைப் பெரிதும் செயலாக்க முடியாது. அவை சில வரலாற்றுப் பதிவுகள், அவ்வளவுதான்! வேறு சில பிரிவுகள் கட்டாயமானவை, அவற்றைச் சான்றாகக் கொண்டுதான் இந்த அரசமைப்பின் ஒடுக்குமுறைத் தன்மையை மெய்ப்பிக்கிறோம். இது தேசிய இனங்களின் அடிமைமுறி என்று வரையறுக்கிறோம். ஒடுக்குமுறையை நீக்கும் படியான திருத்தங்கள் செய்வதற்கோ இந்த அரசமைப்பை வேறு அரசமைப்பால் மாற்றீடு செய்வதற்கோ வாய்ப்பே இல்லை என்ற உண்மையைக் கருத்தில் கொண்டுதான் விடுதலை ஒன்றே வழி என்கிறோம்.

தேசிய ஒடுக்குமுறையில் மொழி ஒடுக்குமுறை முகன்மையான ஒரு கூறு, ஆனால் வேறு கூறுகளும் உள்ளன. மொழி போலவே, ஆட்சிப் புலம், பண்பாடு, பொருளியல் வாழ்வு… இந்தக் கூறுகளை ஒவ்வொன்றாக எடுத்துக் கொண்டால் தேசிய ஒடுக்குமுறையை இனங்காணலாம். இந்த எல்லா ஒடுக்குமுறைகளுக்கும் அரணாக இருப்பது அரசியல் ஒடுக்குமுறை. அரசியல் ஒடுக்குமுறைக்கு ஒரே தீர்வு அரசியல் விடுதலைதான்.

இந்தியாவில் தமிழ்த் தேசத்துக்கோ பிற தேசங்களுக்கோ ஆட்சிப்புலக் கட்டுக்கோப்பும் எல்லைகளின் மீறவொண்ணாமையும் கிடையாது. இது புலம்சார் ஒடுக்குமுறை. எல்லா மாநிலங்களும் சேர்ந்து முயன்றாலும் இந்திய ஒன்றியத்தைக் கலைக்க முடியாது. ஆனால் நாடாளுமன்றத்தில் வந்துள்ள உறுப்பினர்களின் எளிய பெரும்பான்மையுடன் தீர்மானம் இயற்றினாலே மாநிலத்தைக் கலைக்க முடியும். கலைக்கவும், எல்லைகளை மாற்றவும் பெயரை மாற்றவும் எல்லா அதிகாரமும் தில்லிக்குத்தான். சிக்கிமை இந்தியாவுடன் இணைத்துக் கொண்டார்கள். கச்சத்தீவை இலங்கைக்கு எடுத்துக் கொடுத்தார்கள், சம்மு காசுமீரத்தைக் கலைத்து விட்டார்கள். இவையும் புலம்சார் ஒடுக்குமுறைக்குச் சான்றுகள்.

பார்ப்பனியப் பண்பாட்டுத் திணிப்பின் அடையாளமாகத்தான் சமற்கிருதத் திணிப்பு முயற்சிகள்

நடக்கின்றன. இந்தியத் தேசியக் கல்விக் கொள்கை என்பது மொழி ஒடுக்குமுறை மட்டுமன்று, அது பண்பாட்டு ஒடுக்குமுறையும் ஆகும்.

பொருளியல் ஒடுக்குமுறை என்பதன் ஒரு கூறு இயற்கைச் செல்வங்கள் மீதான இறையாண்மை மறுக்கப்படுவதாகும். பொருளியல் ஆக்கத்துக்கும் பகிர்வுக்குமான கொள்கை வகுக்கும் உரிமை இல்லையென்றால் அதுவும் ஒடுக்குமுறைதான். காவிரி, முல்லைப் பெரியாறு உள்ளிட்ட ஆற்றுநீர் உரிமை மறுக்கப்படுவதும் பொருளியல் ஒடுக்குமுறையின் ஒரு கூறுதான்.

.மொழி ஒடுக்குமுறைக்குப் பின்னால் வகுப்பு (வர்க்க) ஒடுக்குமுறையும் சமூக ஒடுக்குமுறையும் ஒளிந்திருப்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். அதே போல் தேசிய விடுதலை என்பதிலும் வகுப்பு நலனும் ஒடுக்குண்ட சமூக வகுப்பு நலனும் அடங்கியிருப்பதைத் தெரிந்து கொண்டு முன்செல்வோம்.

.மொழிச் சிக்கலில் இந்தி பேசாத மக்கள் விரும்பும் வரை ஆங்கிலம் துணை ஆட்சிமொழியாக நீடிக்கும் என்ற பண்டித சவகர்லால் நேருவின் உறுதிமொழி ஒரு மோசடி என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். அது இந்தியை மற்றவர்கள் ஏற்கச் செய்வதற்கான தூண்டில் புழுவாக ஆங்கிலத்தைப் பயன்படுத்திக் கொள்கிறது. தமிழ் முதலான பிற மொழிகளுக்கு என்றுமே இடம் இல்லாமற்செய்து விடுகிறது. இந்தியை எதிர்த்துப் போராடிய திமுக நேரு உறுதிமொழியை ஏற்றுக் கொண்டது பெரும்பிழையாகும்.

இந்தித் திணிப்பு என்பது ஏதோ ஓர் அரசாங்கத்தின் அல்லது அமைச்சரின் முடிவு அல்ல. அது இந்திய அரசமைப்புவழிப்பட்ட திணிப்பு ஆகும், இந்தத் திணிப்பை மொழித் தளத்திலோ பண்பாட்டுத் தளத்திலோ மட்டும் தடுத்து விட முடியாது. அரசியல் தளத்தில் ஒடுக்குமுறையை எதிர்த்து விடுதலைக்காகப் போராடுவதுதான் நம்முன்னுள்ள வழி.

<u>படிக்க வேண்டிய நூல்கள்:</u>

தியாகு: முடியவில்லை மொழிப்போர்!

தமிழ்த் தேசிய விடுதலை இயக்கம்: கொள்கை அறிக்கை.

இந்திய அரசமைப்புச் சட்டம், பகுதி 17.

# நக்வெய்ன் மார்க்சியப் பள்ளியில் (14):

**ஆசிரியர்**: சுராஜித் மஸூம்தார்

## தலைப்பு:முதலாளித்துவ அரசு



சமூக அமைப்பில் மாற்றம் ஏற்பட்டு முதலாளித்துவ உற்பத்திமுறை தோன்றும் போது சமூகம் இரு வர்க்கங்களாகப் பிரிகிறது. ஒரு வர்க்கம் உற்பத்திச் சாதனங்களைத் தன் முற்றுரிமையாக்கிக் கொண்டது. இன்னொரு வர்க்கம் தன் உழைப்புச் சக்தியை விற்கும் நிலைக்குத் தள்ளப்பட்டது. இந்த இரு வர்க்கங்களும் ஒன்றுக்கொன்று இடையுறவு கொண்டுள்ளன. முதலாளி ஒருவர் உற்பத்திச் சாதனங்கள் மீதான அதிகாரமும், தனியார் சொத்துரிமையும் கொண்டிருப்பது மட்டுமே இதற்குப் போதுமானது அல்ல. ஒவ்வொரு முதலாளியும் முதலாளி வர்க்கத்தைச் சேர்ந்த மற்ற முதலாளிகளால்தான் முதலாளியாக உள்ளார். அவருடைய வெற்றி மற்ற முதலாளிகளுடன் பிணைந்துள்ளது. முதலாளிகள் ஒருவரை ஒருவர் சார்ந்துள்ளனர். முதலாளிகள் ஒன்றுசேர்ந்தவாறு வர்க்கமாகவே முற்றுரிமையை பெற்றுள்ளனர். நிலக்கிழாரிய அமைப்பில் பண்ணையார்கள் ஒருவரை ஒருவர் சார்ந்திருப்பதில்லை. முதலாளித்துவ உற்பத்தி முறையில் ஒவ்வொரு வெற்றிகரமான மறுவுற்பத்தியும் அவர்கள் ஒருவரை ஒருவர் சார்ந்திருப்பதைப் பொறுத்துத்தான் அமைந்துள்ளது. அவர்கள் ஒருவருக்கொருவர் போட்டியிடுகின்றனர். போட்டி என்ற வலுவந்தமான விசையே முதலாளி முதலாளியாக செயல்படுவதை உறுதி செய்கிறது. அவர் பெருந்தன்மையுடையவராக இருந்தாலும் போட்டி அவரை முதலாளியாகச் செயல்பட நிர்ப்பந்திக்கிறது. அதுவே முதலாளிக்கும், தொழிலாளிகளுக்கும் இடையிலான உற்பத்தி உறவுகளையும் நிர்ணயிக்கிறது.

தொழிலாளரின் வர்க்க நலன்கள் முதலாளியின் வர்க்க நலன்களிலிருந்து முற்றிலும் வேறுபட்டவை. முதலாளியின் வர்க்க நலன் தொழிலாளியிடம் எவ்வளவு அதிகமாக உபரிமதிப்பைச் சுரண்டுவது என்பதாக உள்ளது. உபரிமதிப்பு உருவாக்கத்தைத் தொடரச் செய்யும் சுரண்டலின் பொறிமுறையானது, அரசியல் அதிகாரத்தையும் வன்முறையையும் கொண்டுள்ளது.

பதிவு எண் :R.Dis. No. 1964/2014

பொருளாதார அடிப்படையில் நிர்ப்பந்திப்பதால் மட்டுமே முற்றுரிமை என்பதைப் பாதுகாத்திட முடியாது. முதலாளி வர்க்கத்தின் தனியார் சொத்துடைமையைப் பாதுகாப்பதற்குப் பொருளாதாரச் சக்திகளுக்கும் கூடுதலாக வலுவந்தப்படுத்தும் அதிகாரம் தேவைப்படுகிறது. அதற்கான அதிகார மையமாகவே அரசு உள்ளது. அரசு எந்திரம் இல்லாமலே அதைப் பாதுகாக்க முடியும் என்ற புதுச் செவ்வியல் (neoclassical) கருத்தாக்கம் தவறானது. பொதுவாக அரசு தனியார் சொத்துடைமையைப் பாதுகாக்கிறது. முதலாளி வர்க்கத்தின் அனைத்து தனிச் சொத்துடைமையையும் பாதுகாக்கிறது அம்பானியுடையதை மட்டும் அல்ல. முதலாளிகளின் சொத்துடைமை, சொத்துரிமையைப் பாதுகாப்பதாக மட்டும் இருப்பதில்லை, முதலாளிகளிடையே அச்சுறுத்தல்களையும் சொத்துச் சண்டைகளையும் ஏற்படுத்துகிறது. ஒவ்வொரு முதலாளியும் மற்ற முதலாளிகளால் அச்சுறுத்தப்படுகிறார். முதலாளித்துவத்தில் அரசு தனியாகப் பிரிந்து நிற்கிறது. தோற்றத்தில் பொருளாதார அமைப்பும், அரசியல் அமைப்பும் தனித்தனியாக பிரிந்து காணப்படுகின்றன. முதலாளித்துவ அரசமைப்பு அதற்கு முன்னிருந்த அரசமைப்புகளிலிருந்து வேறுபடுகிறது. முதலாளித்துவ அரசு யாருடைய நலன்களுக்காக செயல்படுகிறதோ அவர்களிடமிருந்து தனித்துப் பிரிந்திருப்பது போல் காணப்படுகிறது. அரசே முதலாளி வர்க்கத்தின் அதிகாரத்தையும், இறையாண்மையையும் பாதுகாக்கிறது. அரசு தன் ஆதிக்க சக்தியை எவ்வாறு பயன்படுத்தப் போகிறது என்பது தூலமான நிலைகளை பொருத்தே அமைகிறது.

முதலாளிக்கும் தொழிலாளிக்கும் இடையில் சமத்துவமான பரிவர்த்தனை நடப்பது போல் வெளியே தோன்றினாலும், அதன் பின்னே உபரிமதிப்பாக்கம் ஒளிந்துள்ளது. முதலாளி வேலை நாளை நீட்டித்துக் கொண்டும் கூலியைக் குறைத்துக் கொண்டும் இருப்பாரானல் தொழிலாளரால் உயிரோடு நீடிக்க முடியாது. போராட்டத்தில் ஈடுபடுவார், இவ்வாறு தொடருமானால் முதலாளித்துவ உற்பத்தி முறை தானாகவே அழிந்து விடும். ஆகையால் உழைப்புச் சுரண்டலைத் தொடர ஒரு பொறிமுறை தேவைப்படுகிறது. வேலையில்லா சேமப் பட்டாளத்தை நீடிக்கச் செய்வதே இதற்கான பொறிமுறையாகிறது. குறைந்தபட்ச ஊதியம், வேலை நாளை நீட்டித்தல், வேலையின்மைப் படி, இவை அனைத்துமே தொழிலாளர்களை ஒழுங்குநிலைப்படுத்துவதற்கான கருவிகளே. இயந்திரமாக்கம் உழைப்பாளி மீது அதிக ஒழுங்குமுறையைப் பிரயோகிக்கிறது.

வரையறுக்கப்பட்ட சிறப்பு எல்லைகளுடன் மேற்கு ஐரோப்பா முதலாளித்துவத்தின் தொட்டிலாக

இருந்தது. முதலாளித்துவம் உருவாகி விட்டால் எந்தப் பகுதியும் அதன் தாக்கத்துக்கு உட்படாமல் இருக்க முடியாது.. முதலாளித்துவம் பல முரண்பாடுகளைக் கொண்டுள்ளது. தேச அரசுகளுக்கிடையேயான பல முரண்பாடுகள் உள்ளன. தேசங்களுக்குள் பல முரண்பாடுகளும் வேறுபட்ட படிநிலைகளும் காணப்படுகின்றன. இந்த முரண்பாடுகளுடனும், படிநிலைகளுடனுமே போராட்டங்களைத் தொடர வேண்டும்.

முதலாளித்துவத்தில் வளர்ச்சி சமச்சீராக இல்லை. முதலாளித்துவத்தின் ஏகாதிபத்தியத்தை ஆய்வுக்குட்படுத்த வேண்டும். பல்வேறு வழிகளில் முதலாளித்துவம் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றியுள்ளது. இந்தியாவில் ஆதிக்க மிகுந்த முதலாளித்துவ சக்திக்கும், முதலாளித்துவத்திற்கு முந்தைய சமூக அமைப்பிற்குமான இடைச்செயலின் விளைவாக முதலாளித்துவம் தோன்றியது. முதலாளித்துவத்துடனேயே முதலாளித்துவத்திற்கு முந்தைய சமூக அமைப்பு அதன் மாறுபட்ட வடிவத்தில் நீடிக்க முடிந்தது. இந்திய முதலாளித்துவம் மெர்கண்டலிசப் பண்புகளுடன் படு பிற்போக்கானதாகக் காணப்படுகிறது.

முதலாளித்துவ உற்பத்திமுறையில் உற்பத்தியானது சமூகமயமாக்கப்பட்டுள்ளது. ஆனால் உற்பத்தியின் மீதான ஒழுங்குமுறை சமூகமயமாக்கப்பட வில்லை. சண்டைகளுக்குத் தீர்வுகாணும் முறைகளும் சமூகமயமாக்கப்பட வேண்டும். முதலாளித்துவம் என்ற வர்க்கச் சமூகத்திலிருந்துதான் வர்க்கமற்ற சமூகத்தை உருவாக்க முடியும்.

தனியார் சொத்துடைமையை அழிப்பதன் மூலம் சமூகச் சொத்துடைமையை ஏற்படுத்த வேண்டும். முதலாளித்துவத்திலேயே சொத்து மீதான கூட்டுடைமை ஏற்பட்டுள்ளது. அவை சமூகமயமாக்கப்பட வேண்டும்.

மார்க்சியக் கோட்பாடானது அரசியலமைப்பு குறித்தும், முதலாளித்துவ ஆதிக்கத்தின் உலகக் கண்ணோட்டம் குறித்தும் மாறுபட்ட புரிதலைக் கொண்டுள்ளது. புதிய செவ்வியல் பொருளாதாரத்தில், மதிப்பு என்பது வேண்டல் வழங்கலை மட்டுமே அடிப்படையாகக் கொண்டுள்ளதாகவும், சந்தையில் சமநிலையும், ஒத்திசைவும் ஏற்படுவது போலவும் ஒரு பிம்பத்தை ஏற்படுத்துகிறது. செவ்வியல் அரசியல் பொருளாதாரம் கொச்சை அரசியல் பொருளாதாரத்தைப் போல் மேல்மட்டத்துடன் நின்று விடுவது இல்லை. முதலாளித்துவத்தை மாற்றுவதற்கான நடைமுறைச் செயல்முறையானது முதலாளித்துவ உற்பத்தி முறையை முழுமையாகப் புரிந்து கொள்வதிலிருந்து தொடங்குகிறது.

(தொடரும்)

# டாலருக்கு வந்த வாழ்வு (9):

**சமந்தா**

## சமமற்ற பரிவர்த்தனை:

சின்ன மீனைப் போட்டு பெரிய மீனைப் பிடிப்பதை சரிசமமான பரிவர்த்தனை என்று சொல்ல முடியுமா? அதை மீன்வேட்டை என்றுதானே சொல்ல முடியும்? வளர்ந்த நாடுகளுக்கும் வளரும் / ஏழை நாடுகளுக்கும் இடையிலான சர்வதேசப் பரிவர்த்தனைகளும் இப்படித்தான் உள்ளன. சர்வதேசப் பண நிதியமும், உலக வர்த்தக அமைப்புகளும் சர்வதேச அளவிலான பரிவர்த்தனைகளால் அனைத்து நாடுகளும் பயனடையும் என்றும் உலகெங்கும் ஒருங்கிணைந்த வளர்ச்சி ஏற்பட வழிவகுக்கும் எனவும் பரிந்துரைக்கின்றன. வளரும் / ஏழை நாடுகள் சர்வதேச வர்த்தகத்திற்குத் தங்கள் சந்தையை முற்றிலும் திறப்பதன் மூலம் காலப்போக்கில் தொழில்நுட்ப வளர்ச்சி மேம்படும், பொருளாதாரச் சமத்துவமின்மை குறையும் என்றும் பரிந்துரைக்கின்றன. ஆனால் சர்வதேசப் பரிவர்த்தனைகள் வளர்ந்த நாடுகளுக்கே சாதகமானவையாக உள்ளன, வளரும் நாடுகள் அதனால் கடுமையாகப் பாதிக்கப்படுகின்றன. தடையற்ற சர்வதேசப் பரிவர்த்தனைகளே வளரும் / ஏழை நாடுகளின் உள்நாட்டுத் தொழில்களின் வளர்ச்சியைத் தடுப்பதுடன் அவை சிதைவடையவும் காரணமாக உள்ளன என்பதே நடைமுறை உண்மையாக உள்ளது. முதலாளித்துவப் பொருளாதார அமைப்பானது முரண்பாடுகளையே வளர்ப்பதால், இந்த அமைப்பின் மூலம் உலகெங்கும் தொழில்நுட்ப வளர்ச்சியில் சமத்துவத்தையோ பொருளாதாரச் சமத்துவத்தையோ ஏற்படுத்த முடியும் என்பது அறிவியல் அடிப்படையற்ற வாதமே. சர்வதேசப் பரிவர்த்தனைகள் சமமற்றவை என்பதைப் பல அறிஞர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். இதில் பெரும்பாலானவர்கள் மூன்றாம் உலக நாடுகளைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. அதற்கு அவர்களது அனுபவ அறிவின் அடிப்படையில் பெறப்பட்ட உண்மைகளே காரணமாக இருக்கலாம். பெரும்பாலான மேற்கத்திய பொருளாதாரவியலாளர்கள் இதை ஏற்க மறுக்கிறார்கள். காலனியாதிக்கத்தால் நேரடியாகப் பாதிக்கப்பட்டவர்களுக்குத்தானே அதன் உண்மையான தாக்கத்தைப் புரிந்து கொள்ள தெரியும்? முதலாளித்துவத்தின் ஏகாதிபத்திய வடிவமே காலனியாதிக்கம். முதலாளித்துவம் சர்வதேச அளவில் ஏகாதிபத்திய / பேரரசிய வடிவத்தின் மூலமே உலகெல்லாம் அழிவை ஏற்படுத்துவதன் மூலம் தன்னை அழிவிலிருந்து பாதுகாத்துக் கொள்கிறது. காலனியாதிக்கம் என்பது நேற்றைய வரலாறு மட்டுமல்ல, இன்றைய நிஜமாகவும் உள்ளது. நவீன தாராளமயம், புதிய காலனியாதிக்கதின் மூலம் தேச அரசுகளின்

இறையாண்மையைப் பறித்து அவற்றை அதிகாரமற்ற கைப்பாவைகளாக்கியுள்ளது. உலக வங்கி-சர்வதேச நாணய நிதியம் தலைமையிலான அமைப்பு மாற்ற திட்டங்களால் (SAP) வளரும் நாடுகளில் சிக்கன நடவடிக்கைகளின் மூலம் அரசின் சமூக நலத் திட்டங்களுக்கான செலவினம் முற்றிலும் குறைக்கப்பட்டுக் கட்டற்ற தனியார்மயமும், தாராளமயமும் ஊக்குவிக்கப்படுகின்றன. வளரும் நாடுகள் தங்களது உள்நாட்டுத் தேவைகளைக் கருதாமல் உலகச் சந்தைக்காகவே உற்பத்தி செய்யும் ஏற்றுமதி சார்ந்த பொருளாதாரக் கொள்கைகளைக் கடைபிடிக்க வேண்டிய சூழலுக்குத் தள்ளப்பட்டுள்ளன. வளர்ந்த நாடுகளைச் சார்ந்து அவற்றைச் சுற்றிவரும் துணைக் கோள்களாக வளரும் நாடுகள் மாற்றப்பட்டுள்ளன. முன்னர் காலனி நாடுகளாக இருந்த தற்போதைய வளரும் / ஏழை நாடுகள், அரைக் காலனிகளாக்கப்பட்டுள்ளன. தடையற்ற வர்த்தகத்தால் அந்நாடுகளின் விவசாயமும் உள்நாட்டுத் தொழில்களும் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

வளர்ந்த நாடுகளுக்கும் வளரும் நாடுகளுக்கும் இடையிலான ‘தடையற்ற’ சர்வதேசப் பரிவர்த்தனைகள் சமமற்ற பரிவர்த்தனைகளாகவும், இதனால் அதிகம் பாதிக்கப்படுவது மூன்றாம் உலக நாடுகளே, வளரும் / ஏழை நாடுகளே என்பதும், ஏதோ உணர்ச்சி வயப்பட்டு எடுக்கப்பட்ட முடிவு என்றோ அறிவியலுக்கு புறம்பானது என்றோ புறந்தள்ளி விட முடியாது. சர்வதேச அளவிலான பரிவர்த்தனைகள் ஏன் சமமற்றவையாக இருக்கின்றன? இதற்கான அடிப்படைக் காரணங்கள் என்ன? என்று பரிசீலிக்கும் போது ஐந்து முக்கியக் காரணிகளை அடையாளம் காண

தோழர் தியாகுவின் அறிவுக்குரல் கேட்க
கீழுள்ள இணைப்பை சொடுக்கவும்

https:www.youtube.com/user/ajanthavalga?fbclid=IwAR0APppP9wjVctyVG1DShVLvQWRKtHOTuuR4g7zwwBeqLE-6zcuyiKZjxoQ

முடியும். இக்காரணிகள் ஒன்றிற்கொன்று இடைத் தொடர்பும், தாக்கமும் கொண்டுள்ளன என்பதையும் கருத்தில் கொள்ள வேண்டும். சமமற்ற பரிவர்த்தனைக்கான ஐந்து முக்கியக் காரணிகள் பின்வருமாறு:

முதன்மைப் பொருட்களின் விலை குறைப்பு,

அதிகார உறவுகளில் ஏற்றத்தாழ்வு,

கூலி ஏற்றத்தாழ்வுகள்,

மூலதனத்தின் அங்கக மதிப்பிலான ஏற்றத்தாழ்வுகள்,

நாணய மதிப்பிலான ஏற்றத்தாழ்வுகள்.

முதன்மை பொருட்களின் விலை குறைப்பு:

வேளாண்மை சார்ந்த தொழில்களின் மூலமும், சுரங்கத் தொழிலின் மூலமும் பெறப்படும் பொருட்களே முதன்மைப் பொருட்கள் எனப்படுகின்றன. எடுத்துக்காட்டாக பருத்தி, சணல், உலோகத் தாதுக்கள், தானியங்கள், காய்கறிகள், பழங்கள் ஆகியவை முதன்மைப் பொருட்கள் ஆகும். பருத்தி, சணல், உலோகங்கள் ஆகியவை பல தொழிற்சாலைகளுக்கு மூலப்பொருட்களாகவும் உள்ளன. வளரும் நாடுகளின் ஏற்றுமதியில் முதன்மைப் பொருட்களே பெரும் பங்கு வகிக்கின்றன. ஆனால் இவற்றின் விலையானது தொடர்ந்து குறைந்து காணப்படுகிறது. இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு 1950இல் ரவுல் பிரபிஷ் மற்றும் ஹன்ஸ் சிங்கர் இருவரும் தனித்தனியே மேற்கொண்ட ஆய்வுகளின் மூலம் சர்வதேசப் பரிவர்த்தனையின் பலன்கள் மூலப்பொருட்களை ஏற்றுமதி செய்யும் நாடுகளுக்கும், உற்பத்திப் பொருட்களை ஏற்றுமதி செய்யும் நாடுகளுக்குமிடையே சமமற்ற முறையில் பகிரப்படுகின்றன என்றும், சர்வதேச வர்த்தகம் உற்பத்திப் பொருட்களை ஏற்றுமதி செய்யும் நாடுகளுக்கே சாதகமாக உள்ளது என்றும், மூலப்பொருட்களை ஏற்றுமதி செய்யும் நாடுகளுக்குப் பாதகமாக அமைகிறது என்றும் முடிவிற்கு வந்தனர். இது பிரீபிஷ்-சிங்கர் கோட்பாடு எனப்படுகிறது. 1980களின் முற்பகுதியில் இருந்தும் முதன்மைப் பொருட்களின் விலைகள் தொடர்ந்து குறைந்து வருகின்றன. ஏற்றுமதி சார்ந்த தொழில்மய வளர்ச்சிப் பாதையே நவீன தாராளமயத்தால் முன்னிறுத்தப்படுகிறது. இறக்குமதி மாற்றுத் தொழில்மயமாக்க (ISI) வளர்ச்சிப் பாதையை மேற்கொள்ள மூன்றாம் உலக நாடுகள் அனுமதிக்கப்படுவதில்லை. இதனால் இறக்குமதியைக் கட்டுப்படுத்தி உள்நாட்டுத் தொழில்களைப் பாதுகாத்து வளர்த்தெடுப்பது தடைபடுகிறது.

உள்நாட்டுத் உற்பத்தி வளர்ச்சி தடைபடுவதே அந்நாடுகளின் ஏற்றுமதியில் முதன்மைப் பொருட்கள் பெரும்பங்கு வகிப்பதற்கான முக்கியமான காரணமாக உள்ளது. அந்நிய முதலீடுகள் பெரும்பாலும் தொழில்நுட்பத்தையும், உற்பத்தித் திறனையும் மேம்படுத்தும் விதமாக உற்பத்தித் துறையில் முதலீடு செய்யப்படாமல் சொத்துக் குமிழிகளை உருவாக்கும் ஊக முதலீடுகளாக நிதித் துறை, ரியல் எஸ்டேட் துறையிலும் மற்றும் சேவைத் துறைகளிலுமே செய்யப்படுகிறது. வளரும் நாடுகளின் ஏற்றுமதியில் உற்பத்திப் பொருள்களின் அளவு வளர்ச்சியடையாமல் இருப்பதற்கு இதுவும் முக்கியக் காரணமாக உள்ளது. விலைக் குறைப்பு என்பது மூன்றாம் உலக நாடுகளின் முதன்மைப் பொருட்களுடன் நின்று விடவில்லை. பெரும்பாலான மூன்றாம் உலக நாடுகளின் பொருட்களும் சேவைகளும் குறைந்த விலையில் கிடைப்பதற்கு அங்கு நிலவும் குறைந்த கூலியே காரணமாகிறது. மூன்றாம் உலக நாடுகளின் பொருட்கள் எதனால் குறைந்த விலைக்குப் பரிவர்த்தனை செய்யப்படுகின்றன என்ற கேள்விக்கான விடையாக அடுத்த நான்கு காரணிகளும் அமைகின்றன.

அதிகார ஏற்றத்தாழ்வுகள்:

இயற்கையில் எந்தப் பொருளும் விலைக் குறியீட்டுடன் தோன்றுவதில்லை. பொருட்களின் விலையானது சந்தையால் நிர்ணயிக்கப்படுகிறது. ஒரு பொருளுக்கான வேண்டலும் வழங்கலும் சமமாக இருக்கும் போது சந்தை சமநிலை அடைவதால் பொருள் அதன் உற்பத்தி விலைக்கே விற்கப்படுகிறது. ஆனால் பொருளின் வேண்டல் வழங்கலை நிர்ணயிப்பது சந்தை ஆற்றல்களே தவிர இயற்கைச் சக்திகள் மட்டும் அல்ல. ஒரு முற்றுரிமை பெற்ற விற்பனையாளர் போட்டியாளர்களை விலக்கிப் பொருளின் விற்கும் விலையை அதன் உற்பத்தி மதிப்பைக் காட்டிலும் பல மடங்கு கூட்டி விற்க முடியும். அதே போல் முற்றுரிமை பெற்ற வாங்குபவர் பொருளை அதன் உற்பத்தி விலையைக் காட்டிலும் குறைத்து வாங்க முடியும். பொருட்கள் / சேவைகளின் வாங்கும் விலையை நிர்ணயிக்கும் அதிகாரம் முற்றுரிமை பெற்ற பன்னாட்டு அமைப்புகளாலும், கூட்டமைப்புகளாலும் (monopolies, oligopolies) கட்டுப்படுத்தப்படுகிறது. பெரும் வர்த்தக அமைப்புகள் வாங்குவதற்கான முற்றுரிமையைப் பெற்றிருப்பதால் உற்பத்தியாளர்கள் விற்கும் விலையையும் அவையே தீர்மானிக்கின்றன முற்றுரிமைக் கொள்முதலாண்மைகள் (monopsonies). காட்டாக வால்மார்ட், அமேசான்). உழைப்புச் சக்தியும் ஒரு சரக்கு என்பதால் அதன் வாங்கும் விலையும் இவர்களால் குறைக்கப்படுகிறது. இவ்வாறு பொருட்கள் / சேவைகளின் வழங்கலையும் வேண்டலையும் தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டிருப்பதால் பெரும்பாலான

மக்களின் நுகர்வும் இவற்றின் கையில் உள்ளது. பெரும்பாலான மக்களின் நுகர்வுப் பற்றாக்குறைக்கு நவீன தாராளமய அமைப்புகளே காரணமாகவுள்ளது. அவற்றின் அதிகார முற்றுரிமை கூடுதல் லாபம் பெறுவதற்கும், அதன் மூலம் அதிகார முற்றுரிமையை நிலைநாட்டுவதற்கும் காரணமாகிறது. உலக வர்த்தக அமைப்பு போன்ற சர்வதேச அமைப்புகளிலும் பன்னாட்டுத் தீர்ப்பாயங்களிலும் வளர்ந்த நாடுகளே அதிக அதிகாரம் கொண்டிருப்பதால் அவற்றில் வளரும் நாடுகள் பிரதிநிதித்துவம் பெறுவதில்லை என்பதுடன் அவற்றின் வளர்ச்சிக்குத் தடையாகவே அமைந்துள்ளன. தடையற்ற வர்த்தகம் என்பது பெயரளவிற்கு மட்டுமே உள்ளது. வளரும் நாடுகள் ஏற்றுமதி செய்வதற்குப் பல்வேறு தடைகள் நிலவுகின்றன. வளர்ந்த நாடுகள் தங்கள் சந்தைகளை வளரும் நாடுகளுக்கு முற்றிலுமாகத் திறப்பதில்லை. காப்பு வரிகள் மற்றும் வரியல்லாத தடைகளின் மூலம் மூன்றாம் உலக நாடுகளிலிருந்து செய்யப்படும் ஏற்றுமதிகளைத் தடுக்கின்றன,

கூலி / ஊதியங்களில் ஏற்றத்தாழ்வுகள்:

லாபத்தை நோக்கிய மூலதனம் தடைகளின்றி எல்லையில்லாமல் உலகெங்கும் பயணிக்கிறது. ஆனால் உழைப்பாளி உயர்ந்த ஊதியம் பெற தேச எல்லைகளைத் தாண்டுவதற்கு தேசியம் / மொழி / கல்வி / தொழில்நுட்ப அறிவு / பொருளாதாரம் எனப் பல்வேறு தடைகள் உள்ளன. உழைப்பாளரின் வெளியானது ஒரு தேசத்திற்குள் குறுக்கப்பட்டுள்ளது. அறிவியல் தொழில் நுட்பத் துறைகளில் சிறந்து விளங்கும் மூன்றாம் உலக நாடுகளைச் சேர்ந்த ஊழியர்களையும், நிபுணர்களையும் வளர்ந்த நாடுகள் இறக்குமதி செய்கிற போதிலும் இவர்கள் தேசங்களின் மொத்த மக்கள்தொகையில் ஒப்பளவில் சிறுபான்மையினரே. ஆனால் இதனாலும் மூன்றாம் உலக நாடுகளின் அறிவுவளமானது அந்நாடுகளுக்குப் பயன்படாத வகையில் கடத்தப்படுவதால் (brain drain) அந்நாடுகளின் தொழில்நுட்ப வளர்ச்சியைக் கடுமையாக பாதிக்கிறது என்பதையும் குறிப்பிட வேண்டும். தொழிற்சாலைகளின் உற்பத்தித் திறன் அதிகரிக்கும் போது உபரிமதிப்பாக்கம் அதிகமாவதால் லாபத்தின் அளவைப் பாதிக்காமலே அதிகரித்த உற்பத்தித் திறனுக்கு நிகராக கூலியையும் அதிகப்படுத்த முடியும். ஆனால் லாபத்தையும், மூலதன திரட்டலையும் அதிகரிக்கும் பொருட்டு, கூலி குறைக்கப்படுகிறது. ஒரே உற்பத்தித் திறனைக் கொண்ட நிறுவனங்களில் வேலை செய்யும் தொழிலாளர்களின் ஊதியம் வளர்ந்த நாடுகளில் அளிக்கப்படுவதை விட வளரும் நாடுகளில் மிகக் குறைவாகவே உள்ளது. சர்வதேச வர்த்தகத்தில் மூன்றாம் உலக நாடுகளைச் சேர்ந்த நிறுவனங்கள் ஏற்றுமதியை

அதிகப்படுத்துவதற்கான போட்டியில் தங்கள் லாபம் குறையாமல் பாதுகாக்கக் கூலியை மேலும் குறைக்கவும் காரணமாகிறது. ஊதியம் / கூலி வேறுபாடுகளிலிருந்து ஏகாதிபத்திய நாடுகள் கூடுதல் லாபங்களைப் பெறுகின்றன. வளரும் நாடுகளில் கூலி குறைவாக இருப்பதால் இங்கிருந்து குறைந்த விலையில் ஏற்றுமதி செய்யும் சலுகையை வளர்ந்த நாடுகள் பெற்றுள்ளன. உலகளவில் நிதி மூலதனம் உலகமயமாக்கப்பட்டுள்ளது, கூலியானது உலகமயமாக்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை. அவ்வாறு உலகளவில் கூலி சமமாக்கப்படுமானால் மூன்றாம் உலக நாடுகளிலிருந்து மலிவாகப் பொருட்களையும், மூலப்பொருட்களையும், சேவைகளையும், வளர்ந்த நாடுகள் பெற முடியாது. மூன்றாம் உலக நாடுகளில் உழைக்கும் மக்கள் கூலிக் குறைவினாலும், விலை உயர்வாலும் பணவீக்கத்தாலும் கூடுதலாகப் பாதிக்கப்படுகிறார்கள்.

மூலதனத்தின் சராசரி அங்கக மதிப்பிலான ஏற்றத்தாழ்வுகள்: வளர்ந்த பொருளாதாரங்களின் மூலதனங்களில் தொழில்நுட்ப மேம்பாடு காரணமாக, சராசரி அங்கக மதிப்பு, வளரும் பொருளாதாரங்களின் சராசரி அங்கக மதிப்பை விட அதிகம், ஆகவே தொழில்நுட்ப வளர்ச்சியில் ஏற்றத் தாழ்வுகளுடைய நாடுகளிடையே நடக்கும் வர்த்தகப் போட்டியில், சர்வதேச லாப சராசரியாக்கத்தால் --- தொழில்நுட்ப வசதி வளர்ந்த நாடுகளுக்குச் சாதகமாவதால் --- வளர்ச்சி குன்றிய நாடுகளிடமிருந்து பெறப்படும் உபரி கூடுதல் லாபமாக -ஏகாதிபத்திய லாபமாக (super profit / imperialist profit) வளர்ந்த நாடுகளை அடைகிறது. சர்வதேச வர்த்தகத்தில் வளரும் நாடுகள் தங்கள் பொருட்கள் / சேவைகளை உற்பத்தி விலையை விடக் குறைவான விலைக்கு விற்பதற்கும், வளர்ந்த நாடுகள் தங்கள் பொருட்கள் / சேவைகளை உற்பத்தி விலையை விட அதிக விலைக்கு விற்பதற்கும் இது காராணமாகிறது. இவ்வாறு சர்வதேச வர்த்தகப் போட்டியில் நீடிக்கக் கூலியைக் குறைக்கும் போக்கை ஊக்குவிப்பதன் மூலம் கூலி வேறுபாடுகள் அதிகரிப்பதற்கு காரணமாகிறது.

நாணயங்களின் மதிப்பில் ஏற்றத்தாழ்வுகள்: நாணயங்களின் மதிப்பில் காணப்படும் ஏற்றத்தாழ்வுகளால் வளர்ந்த ஏகாதிபத்திய நாடுகள் கணிசமான லாபம் பெறுகின்றன. ஆனால் இது குறித்து அதிகம் ஆய்வுகள் மேற்கொள்ளப்படாமலே உள்ளதால் இதன் முக்கியத்துவம் வெளியே தெரியாமல் இருப்பதுடன் இந்தச் சுரண்டல் கேள்விக்குட்படுத்தப்படாமல் நீடிப்பதற்கும் காரணமாகிறது என்பதை அடிக்கோடிட்டுக் காட்ட வேண்டியுள்ளது. இன்று மூன்றாம் உலக நாடுகளின் நாணயங்கள் மதிப்பிழந்ததற்கான முக்கியக் காரணமாக உலக வங்கி-சர்வதேசப் பண

நிதியம் ஆகியவற்றின் தலைமையில் தொடர்ந்து செயல்படுத்தப்படும் தாராளமய அமைப்பு மாற்றத் திட்டங்களே (SAP-structural adjustment programmes) உள்ளன.

கடன் நெருக்கடியில் உள்ள நாடுகள் நிதியுதவிக்காக சர்வதேசப் பண நிதியத்தை அணுகும் போது பல நிபந்தனைகளைச் செயல்படுத்தினால் மட்டுமே அது கடன் கொடுக்கிறது. அந்த நிபந்தனைகளில் ஒன்றுதான் நாணய மதிப்புக் குறைப்பு. இதைப் பரிந்துரை செய்வதற்கு கூறப்படும் காரணம் என்னவென்றால், ஒரு நாட்டின் நாணயத்தின் மதிப்பைக் குறைக்கச் செய்தால் ஏற்றுமதி மலிவாக்கப்படுவதால் உலக சந்தையில் அதன் போட்டியிடும் திறன் அதிகரிக்கும், அந்நாட்டின் இறக்குமதிகளுக்கான விலையும் இதனால் அதிகரிப்பதால் இறக்குமதி கட்டுப்படுத்தப்படும், இவ்வாறு வர்த்தகப் பற்றாக்குறையைக் குறைப்பதன் மூலம் நிதிச் சமநிலையை அடைய முடியும் என்பதே. இது கோட்பாட்டளவில் மட்டுமே உண்மையாகும். நடைமுறையில் நாணய மதிப்பு குறைப்பு அத்தியாவசியப் பொருள்களின் இறக்குமதிச் செலவுகளை அதிகரிப்பதாலும், ஏற்றுமதி வருவாயைக் குறைப்பதாலும் நிதிப் பற்றாக்குறை அதிகரிக்கவே காரணமாகிறது. அதிக ஆற்றல் தேவை உள்ள இந்தியா போன்ற நாடுகள் கச்சா எண்ணெய் இறக்குமதி செய்வதன் மூலமே ஆற்றல் தேவையை நிவர்த்தி செய்ய முடியும். ஆனால் நாணய மதிப்பு குறைப்பால் அதற்கான இறக்குமதிச் செலவானது அதிகரிக்கிறது, வளரும் நாடுகள் உள்நாட்டு உற்பத்தித் துறையின் தொழில்நுட்ப மேம்பாட்டிற்குத் தேவையான இயந்திர பாகங்களை இறக்குமதி செய்வதற்கான செலவும் இதனால் அதிகரிக்கிறது. இறக்குமதியைக் கட்டுப்படுத்துவதற்கான வாய்ப்புகளும் திறந்த வர்த்தகத்தில் தடுக்கப்படுகின்றன. திறந்த வர்த்தகத்தின் மூலம் வளர்ந்த நாடுகளின் ஏற்றுமதிச் சந்தையாக வளரும் நாடுகள் மாற்றப்பட்டுள்ளன. தடையற்ற வர்த்தக ஒப்பந்தங்களின் மூலம் தேவையில்லாத வெளிநாட்டுப் பொருட்கள் வளரும் நாடுகளின் தலையில் கட்டப்படுகின்றன. இதுவும் இந்நாடுகளின் இறக்குமதிச் செலவுகளை அதிகரிக்கிறது. வர்த்தகப் பற்றாக்குறை அதிகமாவதாலும் பணவீக்கம் ஏற்படும். அதாவது பணம் மதிப்பிழக்கும். அது உண்மையான கூலியின் மதிப்பை, கூலியின் வாங்கும் திறனைக் குறைக்கும். வெளிநாட்டுக் கடன் பெற்ற நாடுகள் அவற்றை அடைப்பதற்கும் இதனால் கூடுதல் செலவு ஏற்படுகிறது. இவ்வாறு சர்வதேசப் பண நிதியம் பரிந்துரைக்கும் நவீன தாராளமயத் தீர்வே பிரச்சனைகளை அதிகப்படுத்துகிறது.

வளரும் நாடுகள் இறக்குமதியைக் கட்டுப்படுத்த வேண்டுமானால் அதற்கான காப்பு வரிகள் விதிக்க அனுமதிக்க வேண்டும். அதை விட்டு விட்டு முற்றிலும் இறக்குமதியைத் திறந்து

விட்டுச் சமநிலையை ஏற்படுத்துவதற்காக நாணயங்களின் மதிப்பைக் குறைக்கச் செய்தால், தன்னிச்சையாகத் தானாகவே ஏற்றுமதி அதிகரித்து விடுமா?

சென்ற இதழில் பேங்கர் திட்டம் குறைபாடுடையது எனக் குறிப்பிட்டோம். பேங்கர் திட்டம் நிதிச் சமநிலை ஏற்படுத்துவதற்கு நவீன தாராளமயக் கொள்கையையே பரிந்துரைக்கிறது. சர்வதேசப் பரிவர்த்தனையின் போது வர்த்தகப் பற்றாக்குறை கொண்ட நாடுகளின் நாணயம் மதிப்பைக் குறைப்பதால், ஏற்றுமதிக்கான போட்டித் திறன் அதிகரித்து அந்நாடுகளின் ஏற்றுமதி ஊக்குவிக்கப்படும், இதனால் வர்த்தகச் சமநிலை ஏற்படுத்தப்படும் என்று குறிப்பிடுகிறது. வளர்ச்சி குறைந்த நாடுகளில் ஏற்றுமதியை அதிகரிக்க வேண்டுமானால் அந்நாடுகளில் தொழில்நுட்ப வளர்ச்சியையும், உற்பத்தித் திறனையும் மேம்படுத்தும் விதமாக முதலீடுகளை அதிகரிக்க வேண்டும். கடன் சுமையற்ற முதலீடுகளின் மூலம் உற்பத்தித் துறையை மேம்படுத்தி, ஏற்றுமதியை அதிகரிக்க செய்ய முடியும். இதையெல்லாம் செயல்படுத்தாமல் நாணய மதிப்புக் குறைப்பு தானாகவே ஏற்றுமதியை அதிகரித்து விடாது. வளர்ச்சி குறைந்த நாடுகளில் ஏற்றுமதியை ஊக்குவிக்கும் விதமாக தொழில்நுட்ப வளர்ச்சியை ஏற்படுத்தும் எந்தத் திட்டமும் பேங்கர் திட்டத்தால் முன்வைக்கப்படவில்லை என்பதே அதன் முக்கியமான குறைபாடு.

சம வளர்ச்சியற்ற நாடுகளிடையேயான வர்த்தகத்தில், நாணய மதிப்பைக் குறைப்பதன் மூலம் ஏற்றுமதியை அதிகரித்து வருவாயை அதிகரிக்கலாம் என்பது முதலாளித்துவ உழைப்புச் சுரண்டலை அதிகப்படுத்தாமல் சாத்தியமில்லை. ஒரு நாட்டின் நாணயம் மதிப்பிழக்கிறது என்று வைத்துக் கொள்வோம். அந்நாட்டில் ஏற்றுமதி செய்யும் முதலாளி நாணயம் மதிப்பிழந்ததால்


## விழிப்பே துணை!

**சாத்தான்குளம் காவல்நிலைய இரட்டைப் படுகொலைக் குற்றவாளிகளைத் தப்ப அரசு தரப்பு சூழ்ச்சிகளை முறியடிப்போம்!**

**காவல் சித்திரவதைக்கு எதிரான கூட்டியக்கம்**
**JAACT - TN**

**தோழர் தியாகு, 8939154752.**

**செயலாளர்:**
**தோழர் மீ.த. பாண்டியன்,**
**9080427640.**

சரக்குகளை அதன் உற்பத்தி விலைக்குக் கீழேதான் விற்க முடியும். அவ்வாறு விற்றால் முதலாளிக்கு லாபக் குறைவுதானே ஏற்பட வேண்டும்? ஆனால் உற்பத்தி விலைக்குக் கீழே விற்கப்பட்ட போதிலும் அதிக வருவாய் பெற முடிகிறது என்றால் அதன் பின்னே என்ன நடக்கிறது? முதலாளி தொழிலாளரிடம் ஊதியம் தராமல் இலவசமாகப் பெறும் கூடுதல் உபரி உழைப்பை மேலும் அதிகப்படுத்துவதன் மூலமே இது சாத்தியமாகும். உழைப்புச் சுரண்டலை அதிகப்படுத்துவதன் மூலமே இது சாத்தியமாகிறது என்றால் அங்கே இழப்பவர் யார், தொழிலாளியே. வெளியில் ஏற்றுமதிக்கான போட்டியாக மட்டுமே தெரிவது உள்ளே உழைப்புச் சுரண்டலை அதிகப்படுத்துவதிலான போட்டியாக இருக்கிறது, உழைப்புச் சுரண்டலுக்கான போட்டியில் முதலாளிகளின் பொருளாதாரத்தை மேம்படுத்தலாம், ஆனால் நாடுகளுக்கிடையிலான பொருளாதார ஏற்றத்தாழ்வுகளையும், சர்வதேச அளவில் தொழிலாளர்களுக்கிடையிலான பொருளாதார ஏற்றத்தாழ்வுகளையும் குறைக்கவோ சமநிலைபடுத்தவோ முடியாது. மாறாக, பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் மேலும் அதிகரிக்கவே செய்யும்.

(பி.கு.: அடக்கவிலை என்பது பொருட்களை உற்பத்தி செய்யத் தேவையான மூலப்பொருட்கள், உழைப்புச்சக்தி ஆகியவற்றின் கூடுதல். பொருட்கள் அவற்றின் அடக்கவிலையில் (cost price) விற்கப்படுவதில்லை. அவ்வாறு விற்கப்படுமானால் முதலாளிக்கு லாபம் கிடைக்காது. அடக்கவிலையுடன் சராசரி லாபமும் சேர்ந்த உற்பத்தி விலையில் (production price) பொருட்கள் விற்கப்படுகின்றன. ஆனால் ஒரு நிபந்தனை: பொருட்களின் வழங்கலும் வேண்டலும் சமமாக இருக்கும் போதே பொருட்கள் அவற்றின் உற்பத்தி விலையில் விற்கப்படும், அதாவது சந்தை விலை உற்பத்தி விலைக்குச் சமமாக இருக்கும். அதற்குத் தேவை அதிகரிக்கும் போது பொருட்களின் விலை அதிகமாக்கப்படும். அவற்றின் தேவை குறையும் போது பொருட்களின் விலை குறையும்.)

வளர்ந்த பொருளாதாரங்களின் மூலதனங்களில், தொழில்நுட்ப மேம்பாடு காரணமாக, சராசரி அங்கக மதிப்பானது வளரும் பொருளாதாரங்களின் சராசரி அங்கக மதிப்பை விட அதிகமாக இருக்கிறது, ஆகவே தொழில்நுட்ப வளர்ச்சியில் ஏற்றத் தாழ்வுகளுடைய நாடுகளிடையே நடக்கும் வர்த்தகப் போட்டியில், சர்வதேச லாப சராசரியாக்கத்தால் --- தொழில்நுட்ப வசதி வளர்ந்த நாடுகளுக்கு சாதகமாவதால் --- வளர்ச்சி குன்றிய நாடுகளிடமிருந்து பெறப்படும் உபரி கூடுதல் லாபமாக / ஏகாதிபத்திய லாபமாக (super profit / impe-

rialist profit) வளர்ந்த நாடுகளை அடைகிறது. சர்வதேச வர்த்தகத்தில் வளரும் நாடுகள் தங்கள் பொருட்கள் / சேவைகளை உற்பத்தி விலையை விடக் குறைவான விலைக்கு விற்பதற்கும், வளர்ந்த நாடுகள் தங்கள் பொருட்கள் / சேவைகளை உற்பத்தி விலையை விட அதிக விலைக்கு விற்பதற்கும் இது காராணமாகிறது. வளரும் நாடுகளில் உள்ள முதலாளிகள் உழைப்புச் சுரண்டலை மேலும் அதிகப்படுத்தாமல் சர்வதேசச் சந்தையில் போட்டி போடவோ நீடிக்கவோ முடியாது. இவ்வாறு சர்வதேச வர்த்தகப் போட்டியில் நீடிக்கக் கூலியை குறைக்கும் போக்கை ஊக்குவிப்பதன் மூலம் கூலி வேறுபாடுகள் அதிகரிப்பதற்கும் சர்வதேசப் பரிவர்த்தனைகள் காரணமாகின்றன.

1991இல் வர்த்தகப் பற்றாக்குறை அதிகமானதால் இந்தியா சர்வதேசப் பண நிதியத்தின் உதவியை நாடியது. சர்வதேசப் பண நிதியம் இந்தியாவிற்கு அமைப்பு மாற்றத் திட்டங்களான நான்கு நிபந்தனைகளை செயல்படுத்துமாறு கட்டளையிட்டது. அவையாவன:

1. ரூபாயை 20 சதவீதம் மதிப்பிழக்க செய்ய வேண்டும். 2. இறக்குமதிக்கான காப்பு வரிகளை 30 சதவீதமாகக் குறைக்க வேண்டும் 3. அரசின் எல்லா செலவுகளையும் ஒவ்வொரு ஆண்டும் 10 சதவீதம் குறைக்க வேண்டும். 4. உற்பத்தி வரிகளை 20 சதவீதம் அதிகரிக்க வேண்டும். இந்திய அரசு இந்த நிபந்தனைகளை நடைமுறைப்படுத்தியதுடன் பொருளாதாரச் சீர்திருத்தம் என்ற பெயரில் துரிதகதியில் தனியார்மயத்தையும், தாராளமயத்தையும் செயல்படுத்தப் புதிய பொருளாதாரக் கொள்கைகளை நடைமுறைபடுத்தியது. இன்றும் புதிய பொருளாதாரக் கொள்கைகளே நடைமுறையில் உள்ளன. இவற்றின் விளைவாக 1970இல் 7.5 ரூபாயாக இருந்த டாலரின் மதிப்பு இப்போது 75 ரூபாயாக உயர்ந்துள்ளது. நவீன தாராளமயத்தின் அமைப்பு மாற்ற திட்டங்களே மூன்றாம் உலக நாடுகளின் நாணயங்கள் மதிப்பேற்றம் பெறாமல் வீழ்ச்சியடையவும், வளர்ந்த நாடுகளின் வலுவான நாணயங்களின் மேலாதிக்கம் நிலைநாட்டப்படவும் முக்கியக் காரணமாக உள்ளன.

1 டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு 10ரூ என வைத்துக் கொள்வோம். ரூபாயை சர்வதேசப் பண நிதியம் 20% மதிப்பிழக்கச் செய்ய பரிந்துரைக்கிறது. அந்நாட்டின் நாணயம் 20% மதிப்பிழந்தால் விளைவுகள் என்னவாகும்? டாலருடனான அதன் பரிமாற்ற மதிப்பு 12 ரூபாயாக வீழும். இதனால் ஏற்றுமதியின் போது 20 சதவீதம் வருவாய் இழப்பும், இறக்குமதியின் போது 20% கூடுதல் செலவும் ஏற்படும். 1000 ரூபாய் வர்த்தகத்தில் 200 ரூபாய் இழப்பு ஏற்படும். 100 டாலரின் ரூபாய் மதிப்பு மதிப்புக் குறைப்பின் முன் 1000 ரூபாயாக இருந்தது மதிப்புக்

குறைப்புக்குப் பின் 1200 ரூபாயாக வீழும். மதிப்புக் குறைப்புக்கு முன் 1000 ரூபாயாக இருந்த 100 டாலர் மதிப்புள்ள இறக்குமதி சரக்கின் விலை 1200 ரூபாயாக அதிகரிக்கும். அதே போல் 100 டாலர் மதிப்புக்குச் சரக்கை ஏற்றுமதி செய்யும் போது 200 ரூபாய் வருவாய் இழப்பு ஏற்படும். 200 டாலர் ஏற்றுமதி-இறக்குமதி வர்த்தகத்தில் 400 ரூபாய் இழப்பு ஏற்படும். சர்வதேசப் பண நிதியத்தின் கோட்பாட்டின் படி நாணய மதிப்புக் குறைப்பினால் ஏற்றுமதி அதிகரிக்கிறது என்றே வைத்துக் கொண்டாலும், 100 டாலரிலிருந்து 105 டாலருக்கு ஏற்றுமதி 5% அதிகரிக்குமானால் அதன் மூலம் 60 ரூபாய் (5 டாலர் X 12 = 60 ரூ) மட்டுமே ஏற்றுமதி வருவாய் அதிகரிக்கும் என்பதால் 140 ரூபாய் இழப்பு ஏற்படும். இது மட்டுமல்லாமல் டாலரில் பெற்ற கடன் மதிப்பும் 20% அதிகரிக்கும் என்பதால் கடனை தீர்க்க 20% கூடுதலாகச் செலவாகும்.

மற்ற நாடுகளுக்குப் பரிந்துரைக்கப்படுவது போல் உலகளவில் நிதிப் பற்றாக்குறை அதிகமாகக் காணப்படும் அமெரிக்காவிற்கு இத்தகைய நாணய மதிப்புக் குறைப்புக் கொள்கையை சர்வதேசப் பண நிதியம் பரிந்துரை செய்திருக்குமானால் டாலர் முன்னிலை உலகப் பணமாக நீடித்திருக்க முடியாது.

வளர்ந்த நாடுகள் தங்கள் பொருட்களை மூன்றாம் உலக நாடுகளுக்கு அதிக விலைக்கு விற்பதற்கும், மூன்றாம் உலக நாடுகளிலிருந்து அவற்றின் பொருட்களை மலிவான விலைக்கு வாங்குவதற்கும் நாணய ஏற்றத்தாழ்வுகளும் ஒரு முக்கியக் காரணியாக உள்ளது. ஒரு நாணயத்தின் மதிப்பீட்டிற்கு இரண்டு அளவுகோல்கள் உள்ளன. ஒன்று அந்த நாணயத்தின் சந்தைப் பரிவர்த்தனை மதிப்பு (MER), ஒரு அமெரிக்க டாலருக்கு சமமான ரூபாயின் பரிவர்த்தனை-மதிப்பு 2019ல் 73.00 ரூபாய். இன்னொன்று நாணயத்தின் உள்நாட்டு வாங்கும் திறன் மதிப்பு (purchasing power parity-ppp). அதாவது ஒரு அமெரிக்க டாலருக்கு நிகரான ரூபாயின் வாங்கும் திறனின் மதிப்பு. அமெரிக்காவில் ஒரு டாலரில் வாங்கப்படும் பொருட்களை இந்தியாவில் எத்தனை ரூபாயில் வாங்க முடியும் என்பதன் மதிப்பைக் குறிக்கிறது.

2019இல் ஒரு டாலருக்கு இணையான ரூபாயின் வாங்கும் திறனின் மதிப்பு 21.1. அமெரிக்காவில் ஒரு டாலரில் வாங்கக் கூடிய பொருட்களை இந்தியாவில் 21.1 ரூபாயில் வாங்க முடியும் என்பதைக் குறிக்கிறது. ஆனால் ஒரு டாலருக்கு இணையான ரூபாயின் பரிவர்த்தனை மதிப்பு 70.4 ரூபாய். ரூபாயின் பரிவர்த்தனை மதிப்பிற்கும் வாங்கும் திறனுக்கும் இடையிலான விகிதம் 3.3. அதாவது ரூபாயின் பரிவர்த்தனை மதிப்பு, அதன் வாங்கும் திறனை விட 3.3 மடங்கு குறைவாகவுள்ளது. ரூபாயின் பரிவர்த்தனை மதிப்பும், அதன் வாங்கும் திறனும் சமமாக

இல்லை.

பொதுவாக அதிக வருவாய் பெறும் வளர்ந்த நாடுகளின் நாணயங்களின் பரிவர்த்தனை மதிப்பும், வாங்கும் திறனும் ஏறத்தாழ சமமாகக் காணப்படுகின்றன. ஆனால் வளரும் நாடுகள் மற்றும் ஏழை நாடுகளின் நாணயங்களின் பரிவர்த்தனை மதிப்புக்கும், வாங்கும் திறனுக்கும், இடையே அதிக வேறுபாடு காணப்படுகிறது. வளரும் நாடுகள், ஏழை நாடுகள் / குறைந்த வருவாயுடைய நாடுகளில் உழைப்பிற்குக் குறைந்த கூலியே வழங்கப்படும் நிலை உள்ளதால் அங்கே பல பொருட்களையும், சேவைகளையும் மலிவாகப் பெற முடிவதே இதற்கு முக்கியக் காரணமாக அமைகிறது. சர்வதேச அமைப்புகள் நாடுகளுக்கு இடையில் மொத்த உள்நாட்டு உற்பத்தியை ஒப்பிடுவதற்கு அவற்றின் தேசிய நாணயங்களின் வாங்கும் திறனைப் பயன்படுத்துகின்றன.

சர்வதேச ஒப்பீட்டு அமைப்பு மூலமாக 3,000 முக்கியமான நுகர்வுப் பொருட்கள், சேவைகள், 30 தொழில்கள், 200 வகையான உபகரணப் பொருட்கள், 15 கட்டுமானத் திட்டங்கள் ஆகியவற்றைக் கொண்டு நாணயங்களின் வாங்கும் திறன் மதிப்பு கணக்கிடப்படுகிறது. (விலைக் குறியீட்டின் தலைகீழியே வாங்கும் திறன் ஆகும்). நுகர்வோர் குறியீடு அடிப்படையிலான பணவீக்கமும் இதையொத்த முறையிலேயே கணக்கிடப்படுகிறது.

கெர்னாட் கொஹ்லெர் என்ற பொருளாதார அறிஞர் உலகளாவிய அளவில் பண மதிப்பு குறித்து ஓர் ஆய்வை வெளியிட்டுள்ளார். பணத்தின் மதிப்பு உலகெங்கும் ஒரே மாதிரியாக இல்லை (அதன் பரிமாற்ற விகிதங்கள் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்ட பின்னரும் கூட); (2) குறைந்த வருமானமுடைய நாடுகளின் நாணயங்கள் குறைவாக மதிப்பிடப்படுகின்றனவே ஒழிய பல பொருளாதாரவியலாளர்கள் கூறுவது போல் அதிகமாக மதிப்பிடப்படவில்லை; (3) அதிக வருவாயுடைய நாடுகள், குறைந்த வருவாயுடைய நாடுகளிடமிருந்து மதிப்பைக் கறப்பதற்கான வழிமுறைகளில் ஒன்றே பரிமாற்ற விகித முறை என்றும், இதுவே மைய நாடுகளுக்கும் விளிம்புநிலை நாடுகளுக்கும் இடையிலான சமமற்ற பரிவர்த்தனைக்குக் கணிசமாகப் பங்களிக்கிறது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

உட்ஸ் பீட்டர் ரெய்ச் என்ற பொருளாதார அறிஞர் 2000ஆம் ஆண்டுக்கான சர்வதேச வர்த்தகத் தரவுகளை ஆய்வு செய்து சமமற்ற பரிவர்த்தனை குறித்து வெளியிட்ட ஆய்வுக் கட்டுரையில் அமெரிக்கா அதன் மொத்த தேசிய வருவாயில் ஏற்றுமதி செய்வதைக் காட்டிலும் 15% கூடுதலாக இறக்குமதிகளைப் பெறுவதாகவும், அமெரிக்கா, ஜெர்மனி, ஜப்பான் ஆகிய மூன்று

நாடுகளும் சர்வதேச வர்த்தகத்தின் மூலம் அவை ஏற்றுமதி செய்வதைக் காட்டிலும் கூடுதலாக 5,116 பில்லியன் டாலர் பெறுவதாகவும் கணக்கிட்டுள்ளார்.

இந்தியா 10,000 ரூபாய் மதிப்புள்ள பொருட்களை அமெரிக்காவிற்கு ஏற்றுமதி செய்கிறது என வைத்துக் கொள்வோம் இந்தியாவின் வருவாய் 10,000 / 70.4= 142.04 டாலர்கள். இந்தியாவின் ஏற்றுமதி ரூபாயின் வாங்கும் திறன் அடிப்படையில் மதிப்பிடப்பட்டால் இந்தியா பெறும் வருவாய் 10000 / 21.1 = 473.93 டாலர்கள் (2019இல் ஒரு டாலருக்கு இணையான ரூபாயின் வாங்கும் திறனின் மதிப்பு 21.1). இந்த ஏற்றுமதியால் இந்தியாவிற்கு ஏற்பட்ட வருவாய் இழப்பு 331.89 டாலர். அதே போல் இந்தியா 1,000 டாலர் மதிப்பிற்கு இறக்குமதி செய்யுமானால் 70,400 ரூபாய் செலவு ஏற்படும். இறக்குமதி வாங்கும் திறனின் அடிப்படையில் செய்யப்படுமானால் 21,100 ரூபாய் செலுத்தினால் போதும். இதனால் இந்தியாவுக்கு ஏற்படும் இழப்பு 49,300 ரூபாய். நாணயப் பரிமாற்ற ஏற்றத்தாழ்வுகளால் வளரும் நாடுகள் வளர்ந்த நாடுகளை விட இறக்குமதிக்கு அதிகக் கட்டணம் செலுத்த வேண்டியுள்ளது என்பதையும், ஏற்றுமதியிலிருந்து குறைந்த வருவாயே பெறுகின்றன என்பதையும் இந்த உதாரணத்தின் மூலம் அறிய முடியும்.

வளரும் நாடுகள் / ஏழை நாடுகள் தொழில்மய உற்பத்தித் திறனை அதிகமாக்க வேண்டுமானால், அவற்றின் ஆற்றல் தேவைகளும் அதிகரிக்கும் ஆனால் சமமற்ற பரிவர்த்தனையால் இறக்குமதிச் செலவுகள் அதிகமாவதால் அவற்றைப் பூர்த்தி செய்ய இயலாமல் போகிறது. இதனால் அந்நாடுகளின் வளர்ச்சியும் தடுக்கப்படுகிறது. சர்வதேச நிதி நிறுவனங்கள் / அமைப்புகள் கடன்களைப் பெரும்பாலும் டாலரிலேயே அளிக்கின்றன. இந்த நாணயப் பரிமாற்ற ஏற்றத்தாழ்வுகளால் நாடுகள் கடனிலிருந்து மீள முடியாத நிலை உள்ளது. வளரும் நாடுகளுக்கு நிதிப் பற்றாக்குறை / வர்த்தகப் பற்றாக்குறை ஏற்பட்டால் தரமதிப்பீட்டு நிறுவனங்கள் அவற்றுக்கான தர மதிப்பீட்டைக் குறைக்கின்றன்றன. இதனால் அந்நாடுகளுக்கு மலிவுக் கடன் மறுக்கப்படுவதால், கூடுதல் வட்டியின் மூலமே கடன் பெற முடியும். இந்தக் கூடுதல் வட்டிச் சுமை அந்நாடுகளின் கடன் சுமையை மேலும் அதிகமாக்கும். அந்நிய முதலீட்டாளர்கள் வளர்ந்த நாடுகளின் வலுவான நாணயங்களையே விரும்புவதால் அவை மேலும் மதிப்பு ஏற்றம் பெறவும், வளரும் நாடுகளின் நாணயங்கள் மேலும் மதிப்பிழக்கவும் காராணமாக உள்ளது. அந்நிய நிதி முதலீடுகளைக் கவர்வதற்காக வளரும் நாடுகள் அதிக சலுகைகளை அளிக்குமாறு நிர்ப்பந்திக்கப்படுகின்றன. இதுவும் அந்நாடுகளின் நிதிநிலையைப் பாதிக்கிறது. மூன்றாம் உலக நாடுகளின் வலுவிழந்த நாணயங்கள் அந்நிய முதலீடுகளைச்

சார்ந்து ஊசலாடுகின்றன. அந்நாடுகளின் தலைமை வங்கிகள் நாணயம் மதிப்பு ஏற்றம் பெறுவதைத் தடுக்க வெளிச் சந்தை நடவடிக்கைகளின் மூலம் டாலரைப் பெறுமாறும் அதற்கென கூடுதல் அந்நியச் செலவாணி இருப்புகளைப் பராமரிக்குமாறும் நிர்பந்திக்கப்படுவதும் ஒரு தேவையில்லாத நிதிச் சுமையே.

இவை அல்லாமல் மூன்றாம் உலக நாடுகளில் உற்பத்தி அலகுகள், சேவைத் துறை நிறுவனங்கள் மற்றும் நிதி நிறுவனங்களைச் செயல்படுத்துவதன் மூலம் பன்னாட்டு நிறுவனங்கள் ஏற்றுமதி செய்யும் லாபங்களையும், அவற்றுக்கு அளிக்கப்படும் வரி வாடகைச் சலுகைகள், அந்நிய நிதி முதலீடுகள் மூலம் ஏற்றுமதி செய்யப்படும் லாபங்களையும், நிதியுதவி என்ற பேரில் சுரண்டப்படும் வளங்களையும் கணக்கில் கொண்டால் மூன்றாம் உலக நாடுகளிலிருந்து சுரண்டப்படும் ஏகாதிபத்திய லாபங்களின் பரிமாணம் இன்னும் பன்மடங்காகும்.

ஏகாதிபத்திய ஒடுக்குமுறை வடிவங்களில் முக்கியமானதாக இந்த நாணய ஒடுக்குமுறை உள்ளது. வலுவான நாணயங்களைக் கொண்ட வளர்ந்த நாடுகள் மூன்றாம் உலக நாடுகளிலிருந்து சமமற்ற பரிவர்த்தனையின் மூலம் கணிசமான அளவில் பொருள்களையும், செல்வங்களையும் சுரண்டுவதற்கான ஆயுதமாக அது செயல்படுகிறது. இதற்குத் துணை புரியவே சர்வதேசப் பண நிதியம், உலக வர்த்தக அமைப்பு ஆகிய நவீன தாராளமய அமைப்புகள் செயல்படுகின்றன. சர்வதேசப் பண நிதியமும், உலக வர்த்தக அமைப்பும் உலகெங்கும் உள்ள வளரும் / ஏழை நாடுகளில் பொருளாதாரச் சீர்திருத்தம் என்ற பெயரில் நவீன தாராளமயக் கொள்கைகளைச் செயல்படுத்தி நாணயங்களை மதிப்பிழக்கச் செய்து, காப்பு வரிகளைத் தடுத்துத் தடையற்ற வர்த்தகத்தை ஊக்குவித்து வளர்ந்த நாடுகளுக்கு மட்டுமே சாதகமான சமமற்ற பரிவர்த்தனைகளுக்கே பாதை அமைத்துள்ளன. ஆகவே சமமற்ற பரிவர்த்தனைகளைத் தவிர்க்கும் விதமாக இந்தியா போன்ற மூன்றாம் உலக நாடுகள் / வளரும் நாடுகள் / ஏழை நாடுகள் (ஆசிய ஆப்பிரிக்க லத்தீன் அமெரிக்க நாடுகள்) டாலரிலான ஏற்றுமதி இறக்குமதிகளை குறைத்து தங்களுக்குள்ளே ஏற்றுமதி இறக்குமதிகளைச் செய்ய வேண்டும். அது இந்நாடுகளின் பொருளாதாரங்களையும் நாணயங்களையும் வலிமைப்படுத்தி ஒருங்கிணைப்பதுடன் ஏகாதிபத்தியத்தை வலிமையிழக்கச் செய்யவும் நவீன காலனியாக்கத்திலிருந்து விடுதலை பெறவும் வழிகோலும். ஆனால் இந்திய அரசோ வெட்கக்கேடான முறையில் அமெரிக்காவிடம் அடிபணிந்து கிடக்கிறது.

**(தொடரும்)**

## சூழலியல் வகுப்பு - 2

# காலநிலை மாற்றம்

சமந்தா

## புவியின் காலநிலை வரலாறு:

நம் சமூகமும், உயிர்க்கோளமும் இன்று சந்திக்கும் மிகப்பெரும் சூழலியல் பிரச்சினையாக காலநிலை மாற்றம் உள்ளது. இதைச் சூழலியல் விஞ்ஞானிகளும், மற்றத் துறைகளைச் சார்ந்த நிபுணர்களும் சுட்டிக்காட்டியுள்ள போதிலும், காலநிலை மாற்றம் என்பது உண்மையல்ல என்றும், அது வெறும் கட்டுக்கதை என்றும் ஒரு சாரார் பரப்புரை செய்கிறார்கள். இதில் எது உண்மை? காலநிலை மாற்றம் அறிவியல் பூர்வமான உண்மையா, இல்லையா என்பதை ஆய்வு செய்து அறிய வேண்டியுள்ளது. நிகழ்கால சிக்கல்களைத் தீர்ப்பதற்கும், வருங்காலத்தில் பிரச்சனைகள் வராமல் தடுப்பதற்கும் நாம் வரலாற்று ஒளியைப் பாய்ச்சி ஆராயாமல் அப்பிரச்சனைகளுக்கான சரியான தீர்வைப் பெற முடியாது. வரலாறு என்பது புனையப்பட்ட கதைகளோ புராணங்களோ அல்ல, வரலாற்று ஆய்வு அறிவியல் அடிப்படையில் செய்யப்பட வேண்டும் என்பதை 21ஆம் நூற்றாண்டிலும் அடிக்கோடிட்டுக் காட்ட வேண்டிய சூழலில் நாம் இருக்கிறோம். வேதங்களே அறிவியல் என்று ஓதப்படும் இன்று அறிவியல் என்ன என்பதையும் அறிவுறுத்த வேண்டியுள்ளது. அறிவியல் என்பது ஆய்வுகளின் அடிப்படையிலும், தரவுகளின் அடிப்படையிலும் பெறப்பட்ட உண்மைகளால் ஆனது. இவ்வுலகிலுள்ள எல்லா நிகழ்வுகளுக்கும், மனிதர்களுக்கும், பொருட்களுக்கும் வரலாறு உள்ளது. அதன் அடிப்படையில்தான் நாம் ஒவ்வொன்றையும் புரிந்து கொள்கிறோம், உலகிலுள்ள ஒவ்வொன்றிற்கும் ஒரு வரலாறு உண்டு என்றால் காலநிலைக்கும் ஒரு வரலாறு உண்டுதானே? நம் உலகம் இதுவரை கடந்து வந்த காலநிலைகளைப் பின்சென்று பார்க்கலாமா?

வானிலை என்பது வளிமண்டலத்தின் வெப்பநிலை, ஈரப்பதம் மழைப்பொழிவு ஆகிய கூறுகளை ஒரு நாள், ஒரு வாரம், ஒரு மாதம் எனக் குறுகிய காலகட்டத்தில் பதிவு செய்வதைக் குறிக்கிறது. நீண்ட கால அளவில் அவை பதிவுசெய்யப்படும் போது அதுவே காலநிலை எனப்படுகிறது, இதுதான் காலநிலைக்கும் வானிலைக்கும் உள்ள முக்கியமான வேறுபாடு. புவியின் வயது 4.6 பில்லியன் ஆண்டுகள் ஆகும் கிட்டத்தட்ட 5 பில்லியன் ஆண்டுகளுக்கு முன் புவி உருவாகத் தொடங்கியது. புவியின் வாழ்வுக் காலம் நான்கு பேரூழிக் காலங்களாக (Eons)

பிரிக்கப்பட்டுள்ளது, ஒரு பேரூழிக் காலம் என்பது 50 கோடியிலிருந்து 100 கோடி ஆண்டுகளைக் குறிக்கும். இவை முறையே 1. ஹாடியன், 2. ஆர்கியன் 3. புரோட்டிரோசோயிக் 4. பெனெரோசோயிக் என அழைக்கப்படுகின்றன.

அதற்கு அடுத்த மட்டத்தில் பேரூழிக்காலங்கள் ஊழிக்காலங்களாகவும் ('Era'-பல மில்லியன் ஆண்டுகள், ஊழிக்காலங்கள் பகுதிகளாகவும் ('periods' ஒரு மில்லியன் ஆண்டுகள்) பிரிக்கப்பட்டுள்ளன.

நம் புவியானது அதன் ஆதிக் காலத்திலிருந்து அடுத்தடுத்து பல வெப்பக் காலங்களையும் பனி ஊழிக் காலங்களையும் கண்டுள்ளது. புவியானது மூன்று வடிவங்களில் காணப்பட்டிருந்தது. ஒரு வெப்பமான பசுங்குடிலாகவோ (green house) அல்லது குளிரான பனிக் குடிலாகவோ (ice house), முற்றிலும் உறைந்த பனிப் பந்தாகவோ (ice ball) காணப்பட்டது. பனிக் காலமானது தொடர்ந்து பல ஆயிரம் ஆண்டுகளாக நீடிக்கும் போது அது பனியூழிக் காலம் என அழைக்கப்படுகிறது. இரண்டு பனியூழிக் காலங்களுக்கு இடைப்பட்ட காலம் பனியூழி இடைக்காலம் (Interglacial period) எனப்படுகிறது. அடுத்தடுத்து பனியூழிக் காலத்தின் கால அளவானது 40,000 ஆண்டுகளிலிருந்து 1 லட்சம் ஆண்டுகள் வரை வேறுபடுகிறது. அதன் இடையில் வரும் பனியூழி இடைக்காலம் 10,000 ஆண்டுகள் வரை நீடிக்கிறது. பனியூழி இடைக்காலங்கள் வெப்பக் காலங்களாக உள்ளன.

புவியின் வெப்ப நிலையை நிர்ணயிப்பதில் முக்கியப் பங்கு வகிப்பவை கார்பன்-டை-ஆக்சைடு, மீத்தேன், நைட்ரஜன்- டை-ஆக்சைடு போன்ற முதன்மையான பசுங்குடில் வாயுக்கள் (Green house gases) ஆகும். பசுங்குடில் விளைவு என்பது செயற்கையான நிகழ்வு அல்ல. அது ஒரு இயற்கை நிகழ்வு தான். இது புவியில் மட்டுமல்ல, வளி மண்டலத்தைக் கொண்டுள்ள பிற கோள்களிலும் பசுங்குடில் விளைவு நிகழ்கிறது. வளி மண்டலத்தில் பசுங்குடில் வாயுக்கள் இருப்பதால்தான் புவியில் உயிர்கள் வாழத்தக்க ஒரு சூழ்நிலை நிலவுகிறது. பசுங்குடில் வாயுக்கள் இல்லையென்றால் புவியின் வெப்பநிலை -18 அல்லது -19 பாகையாகக் குறைந்திருக்கும். பசுங்குடில் விளைவினால்தான் நாம் வாழ்வதற்கான சூழல் புவியில் ஏற்பட்டுள்ளது என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும். இந்தப் பசுங்குடில் வாயுக்களின் அளவு வெவ்வேறு காலகட்டத்தில் பல்வேறு நிகழ்வுகளால் மாறுபட்டுள்ளது. அதுவே புவியின் வெப்பநிலையையும், புவியின் நீர்ப்பரப்புகளின் அளவையும் (கடல் மட்டத்தின் அளவு), அதன் நிலையையும் (பனிப் பாறைகளின் அளவு) தீர்மானிக்கிறது.

**புவி கடந்துவந்த பேரூழிக்காலங்கள்:**

**ஹாடியன் பேரூழிக்காலம்:**

புவியின் முதல் பேரூழிக் காலம் ஹாடியன் எனப்படுகிறது .ஹாடியன் என்பது கீழுலகின் கடவுள் பெயரைக் குறிக்கும் கிரேக்கச் சொல். நரகம் மாதிரியான ஒரு சூழ்நிலையையே, உயிர்கள் வாழத் தகுதியற்ற ஒரு சூழலையே ஹாடியன் குறிக்கிறது. ஏனெனில், பெருவெடிப்புக் கொள்கையை நீங்கள் அறிந்திருப்பீர்கள், புவி தோன்றிய போது எரிமலைகளுடன், நெருப்புப் பிழம்பாக இருந்தது. அது ஒரு முழுமையான திட வடிவம் பெறாமல் ஒரு நெருப்புக் கோளமாகத்தான் இருந்து வந்தது, அந்தக் காலகட்டமே ஹாடியன் எனப்படுகிறது.

**ஆர்க்கியான் பேரூழிக்காலம்:**

ஹாடியனைத் தொடர்ந்து வந்த இரண்டாவது பேரூழிக் காலம் ஆர்க்கியான் எனப்படுகிறது. 'ஆர்க்' என்பது ஆதி என்ற பொருளுடையது. ஆர்க்கியான் காலகட்டத்தில்தான் உயிர்கள் தோன்றுவதற்கான அடிப்படைச் சூழல் ஏற்பட்டது ஆர்க்கியான் காலகட்டத்தில்தான் புவியின் வெப்ப நிலை குறைந்து கண்டங்கள் உருப்பெற்றன. அடிப்படையான ஒரு செல் உயிரினங்கள் தோன்றின. ஆனாலும் ஆக்சிஜன் குறைந்த அளவிலேயே காணப்பட்டது. அதற்கடுத்த புரோட்டிரோசோயிக் காலகட்டத்திலும் ஆக்சிஜன் குறைவாகவே காணப்பட்டது. ஏனென்றால் இரும்பு மற்றும் பிற தாதுக்கள் அதிக வினைப்படும் திறனுடன் காணப்பட்டதால் அவற்றின் ஆக்சிஜனேற்றத்திற்கே பெருமளவு ஆக்சிஜன் எடுத்துக் கொள்ளப்பட்டது. ஆக்சிஜன் பற்றாக்குறையால், குறைந்த அளவிலே உயிரினங்கள் காணப்பட்டன.

**புரோட்டிரோசோயிக் பேரூழிக்காலம்:**

ஆர்க்கியானைத் தொடர்ந்து வந்த மூன்றாவது பேரூழிக் காலம் புரோட்டிரோசோயிக் எனப்படுகிறது. புரோட்டிரோசோயிக்கில் உள்ள புரோட்டோ என்றால் முந்தைய என்று பொருள். சோயிக் என்றால் விலங்கு என்று பொருள். அதாவது முந்தைய விலங்கினங்கள் தோன்றிய காலம் புரோட்டிரோசோயிக் காலம் எனப்படுகிறது. இந்த மூன்றாவது பேரூழிக் காலத்தில் இரண்டு பனியூழிக் காலங்கள் ஏற்பட்டுள்ளன. அதில் பாக்டீரியா போன்ற ஆரம்பநிலை உயிரினங்களான புரோக்கேரியட்டுகள் தோன்றியுள்ளன. இந்தக் காலகட்டத்திலும் பல்லுயிர்ப் பெருக்கம் ஏற்படும் அளவிற்கு ஆக்சிஜனின் அளவு அதிகரிக்கவில்லை. அப்பொழுது ஓசோன் மண்டலமும் ஏற்படாததால் புற ஊதாக் கதிர்களின் தாக்கம் இருந்தது. நிலப்பகுதிகளில் உயிர்கள் வளர்வதற்கான சூழல் உருவாகவில்லை. ஆரம்ப காலத்தில் நீர்நிலைகளில்தான் உயிரினங்கள்

முதலில் தோன்றியுள்ளன. உயிர் தோன்றுவதற்கான உயிர் மூலக்கூறுகள் முதன்முதலில் நீரில்தான் உருவாகின. ஓசோன் படலம் ஏற்பட்ட பிறகுதான் உயிரினங்கள் நிலத்திற்கு இடம் பெயரும் சூழல் ஏற்பட்டது. இந்த புரோட்டிரோசோயிக் காலத்தில் ஒரு முக்கியமான பனியூழிக் காலம் ஏற்பட்டது. 2,500 மில்லியன் ஆண்டுகளுக்கு முன் ஏற்பட்ட இந்த முதல் பனியூழிக் காலம் ஹுரானியன் பனியூழிக் காலம் எனப்படுகிறது. புரோட்டிரோசோயிக் காலகட்டம் முடியும் போதும் கிரையோஜனியன் என்ற காலப் பகுதியில் ஸ்டுர்டியன்,மரினோன் என இரு பனியூழிக்காலங்கள் ஏற்பட்டன. ‘கிரையோ’ என்றால் பனி என்று பொருள். 200 மில்லியன் ஆண்டுகளுக்கு முன் ஏற்பட்ட இந்தப் பனியூழிக்காலத்தில் புவியின் அனைத்து பகுதியும் பனியாய் உறைந்து ஒரு பனிப்பந்தாக புவி காணப்பட்டது.

**<u>பெனரோசோயிக் பேரூழிக்காலம்:</u>**

புரோட்டிரோசோயிக்கைத் தொடர்ந்து வந்த நான்காவது பேரூழிக்காலம் பெனரோசோயிக் எனப்படுகிறது. பெனரோசோயிக்கில் வரும் பெனரோ என்றால் கண்ணுக்கு வெளிப்படையாகத் தெரிகிற என்று பொருள். கண்ணுக்கு வெளிப்படையாகத் தெரிகின்ற உயிரினங்கள் தோன்றிய காலகட்டத்தைக் குறிக்கிறது. பெனெரோசோயிக் பேரூழிக்காலமானது 1.பேலியோசோயிக், 2.மீசோசோயிக், 3.செனோசோயிக் என மேலும் மூன்று ஊழிக்காலங்களாக(eras) பிரிக்கப்பட்டுள்ளன. பேலியோ என்பது பழைய என்னும் பொருளையும், மீசோ என்பது மத்திய எனும் பொருளையும், செனோ என்பது புதிய எனும் பொருளையும் குறிக்கிறது. பெனரோசோயிக் பகுதியில் காலநிலை மாற்றத்தால் ஐந்து பேரழிவுகள் ஏற்பட்டுள்ளன. அதில் முதல் மூன்று பேரழிவுகள் பேலியோசோயிக் ஊழிக் காலத்திலும், அடுத்த இரண்டு பேரழிவுகள் மீசோசோயிக் ஊழிக் காலத்திலும் ஏற்பட்டுள்ளன. ஒரு விதமான உயிரினங்கள் அழிவதும், புதுவிதமான உயிரினங்கள் தோன்றுவதும் அது காலத்திற்கேற்பத் தன்னைத் தகவமைத்துக் கொள்வதும் என உயிர்க் கோளத்தின் பரிணாம மாற்றம் ஒரு தொடர் நிகழ்வாக உள்ளது

**<u>பேலியோசோயிக் ஊழிக்காலம்:</u>**

பேலியோசோயிக் முதல் காலகட்டமான கேம்பிரியன் காலப் பகுதியில்தான் கேம்பிரியன் வெடிப்பு ஏற்பட்டு பல்லுயிர்ப் பெருக்கம் ஏற்பட்டது. ஏனென்றால் அப்போது ஆக்சிஜன் அளவு அதிகரித்ததால் பல்லுயிர்களாகப் பெருகும் சூழல் ஏற்பட்டுள்ளது. இதை அடிப்படையாக வைத்து உலகின் காலத்தை கேம்பிரியனுக்கு முன், கேம்பிரியனுக்குப் பின் என இரண்டாகப் பிரிக்கலாம். ஹாடியன், ஆர்க்கியன். புரோட்டிரோசோயிக் பேரூழிக் காலங்கள் பிரி-கேம்பிரியன்

காலகட்டங்களாக அழைக்கப்படுகின்றன.

**முதல் பேரழிவு:**

கேம்பிரியன் பெருவெடிப்புக்குப் பிறகு ஏற்பட்ட ஆர்டோடாவிசியன் காலப்பகுதியில் 444 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு பனியூழிக்காலம் (ஆண்டிஸ்-சகாரா) ஏற்பட்டு கடல் மட்டம் குறைந்ததால் முதல் பேரழிவு ஏற்பட்டது. கடலில் வாழ்ந்த உயிரினங்கள் பேரழிவை சந்தித்தன. கொனோடொன்ட், கடற்பஞ்சுகள் ஆகிய சில உயிரினங்களே தப்பிப் பிழைத்தன. இதைத் தொடர்ந்து சில்லுரியன் காலப்பகுதி ஏற்பட்டது.

**இரண்டாம் பேரழிவு:**

சில்லுரியன் காலப்பகுதியைத் தொடர்ந்து வந்த நியோடாவியன் காலப்பகுதி மீன்களின் காலம் என்றழைக்கப்பட்டது. இக்காலத்தில் கவச மீன்கள் அதிகம் காணப்பட்டுள்ளன நீரில் ஆக்சிஜன் அளவு குறைந்ததால் 350 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு இரண்டாம் பேரழிவு ஏற்பட்டது. இதைத் தொடர்ந்தே கார்பனி∴பெரஸ் காலப்பகுதி வந்தது. இந்தக் காலப்பகுதியில் இருந்த காடுகள், உயிரினங்கள் புதைந்து படிம எரிப்பொருட்கள் பெருமளவில் பெறப்பட்டுள்ளதாலே கார்பனி∴பெரஸ் காலப்பகுதி என அழைக்கப்படுகிறது.

**மூன்றாம் பேரழிவு:**

பெர்மியன் காலப்பகுதியில் 250 மில்லியன் ஆண்டுகளுக்கு முன் சைபீரியாவில் எரிமலைச் செயல்பாட்டால் மூன்றாவது முறையாக உயிரிகளின் பெரும் பேரழிவு ஏற்பட்டது, பூச்சியினங்கள் அழிந்தன. காடுகள் அழிந்தன. அந்தக் காலகட்டத்தில்தான் கண்டங்கள் அனைத்தும் ஒருங்கிணைந்து பேஞ்சியா என்ற பெருங்கண்டம் தோன்றியது. பெர்மியன் காலப்பகுதியில் 95% உயிரிகள் அழிந்ததால் அது பேரிறப்புக் காலம் எனப்படுகிறது. பெர்மியன் காலப்பகுதியில் ஒரு பனியூழிக் காலமும் ஏற்பட்டது. பெர்மியன் காலப்பகுதியே பேலியோசோயிக் ஊழிக்காலத்தின் கடைசி காலப்பகுதியாகும்.

**2. மீசோசோயிக் ஊழிக்காலம்:**

**நான்காவது பேரழிவு:**

பேலியோசோயிக் காலத்தைத் தொடர்ந்து வெப்பமான மீசோசோயிக் ஊழிக்காலம் ஏற்பட்டது. மீசோசோயிக் ஊழிக்காலத்தில் பனியூழிக்காலம் ஏற்படவில்லை. இக்காலப்பகுதியில் பெரும் முதலைகள் காணப்பட்டன, ஊர்ந்து செல்லும் விலங்குகள் அதிகம் காணப்பட்டதால் அது ஊர்ந்து செல்லும் விலங்குகளின் காலமாக அறியப்படுகிறது. மீசோசோயிக் ஊழிக்காலம்

டிரையாசிக், ஜூராசிக், கிரெட்டேசியஸ் ஆகிய மூன்று காலப்பகுதிகளைக் கொண்டுள்ளது. டிரையாசிக் காலப்பகுதியில் மைய அட்லாண்டிக் பகுதியில் ஒரு பெரும் எரிமலை வெடிப்பு நிகழ்ந்ததால் நான்காவது பேரழிவு ஏற்பட்டது. ஊர்ந்து செல்லும் விலங்கினங்கள் அழிந்தன இவை அழிந்த பிறகுதான் டைனோசர்கள் பல்கிப் பெருகுவதற்கான சூழல் உருவானது.

**<u>ஐந்தாவது பேரழிவு:</u>**

ஜூராசிக் காலப்பகுதியில் டைனோசர்கள் பல்கிப் பெருகின. அதைத் தொடர்ந்து வந்த கிரெட்டெசியஸ் காலப் பகுதியில், 50 மில்லியன் ஆண்டுகளுக்கு முன் மெக்சிகோவில் விண்கல் மோதியதாலும், தக்காணப் பகுதியில் எரிமலைச் செயல்பாடுகளாலும் ஐந்தாவது பேரழிவு ஏற்பட்டு டைனோசர்கள் அழிந்தன. அவற்றின் அழிவுக்குப் பிறகே பாலூட்டிகள் உருவாவதற்கான ஒரு சூழல்ஏற்பட்டது. அந்தக் காலப்பகுதியில் கண்ட நகர்வும் ஏற்பட்டது.

**<u>செனோசோயிக் ஊழிக்காலம்:</u>**

மீசோசோயிக் ஊழிக்காலத்தைத் தொடர்ந்து வந்த செனோசோயிக் ஊழிக்காலம் புதிய காலம் என்றும், பாலூட்டிகளின் காலம் என்றும் அழைக்கப்படுகிறது. இதன் கடைசி காலப்பகுதி குவாட்டர்னரி என அழைக்கப்படுகிறது. இந்த குவாட்டர்னரி காலப்பகுதியில் 2.5 மில்லியன் ஆண்டுகளுக்கு முன் பிலெய்ஸ்டோசீன் பகுதியில் பனியூழிக் காலம் ஏற்பட்டது. அதையடுத்து 11,700 ஆண்டுகளாக தொடர்கின்ற ஹொலோசீன் என்ற வெப்பக் காலத்தில்தான் நாம் வாழ்ந்து வருகிறோம். அதாவது நாம் ஒரு பனியூழி இடைக்காலத்தில் வாழ்ந்து வருகிறோம். அப்படியென்றால் நம் புவியானது அடுத்து ஒரு பனியூழிக் காலத்தை சந்திக்கவுள்ளதா?.புவி அதன் இயல்பான செயல்பாடுகளோடு தொடர்ந்திருக்குமானால் கி.பி. 3500இல் ஒரு பனியூழிக்காலம் ஏற்படும் எனக் கணக்கிடப்பட்டிருந்தது. ஆனால் அது மனிதச் செயல்பாடுகளால் தூண்டப்பட்ட பசுங்குடில் விளைவால் தடுக்கப்பட்டுள்ளது. மனிதச் செயல்பாடுகளால் 1850க்கு பிறகு பெருகிய தொழில்மயமாக்கம், நகரமயமாக்கம், போக்குவரத்தால் பசுங்குடில் வாயுக்களின் அளவு பெரிதும் அதிகரித்துள்ளது. தொழிற்புரட்சிக்கு முன் ஒரு பில்லியனில் 280 பகுதியாக இருந்த கரியமில வாயுவின் அளவு இப்பொழுது ஒரு பில்லியனில் 411 பகுதிக்கும் மேல் அதிகரித்துள்ளது. இதனால் அடுத்து வரும் பனியூழிக் காலமானது தடுக்கப்பட்டது.

புவியில் பனியூழிக் காலங்கள், வெப்பக் காலங்கள் என மாறி மாறிக் காலநிலை மாற்றங்கள் ஏற்படுவதற்கு முதன்மையான காரணங்கள் பின்வருமாறு:

முதலாவதாக வளிமண்டலத்தில் பசுங்குடில் வாயுக்களின் அளவில் ஏற்படும் மாற்றத்தால்

புவியின் வெப்பநிலை மாறுகிறது.

புவியின் சுற்றுப் பாதையில் ஏற்படும் மாற்றம்: புவி சூரியனைச் சுற்றி வரும் போது ஒரு குறிப்பிட்ட அச்சில் சுற்றி வருகிறது. அந்த அச்சின் சாய்வு 21.8 பாகையிலிருந்து 24.4 பாகை வரை மாறுபடுகிறது. இந்த மாற்றம் ஒரு சுழற்சியாக ஒவ்வொரு 40,000 ஆண்டுகளுக்கு ஒரு முறை ஏற்படுகிறது.

புவியின் சுற்றுப் பாதையானது ஒரு நீள்வட்டப் பாதை என்று நாம் படித்திருப்போம். ஆனால் அது எல்லா நேரங்களிலும் நீள்வட்டப் பாதையாக இருப்பதில்லை. ஒரு லட்சம் ஆண்டுகளுக்கு ஒரு முறை நீள்வட்டப் பாதையானது வட்டப் பாதையாக மாறுகிறது. வட்டப் பாதையில் சுற்றி வரும் போது புவிக்கும் சூரியனுக்கும் இடையிலான தூரத்தில் மாற்றம் ஏற்படாது. ஆனால் நீள்வட்டப் பாதையாக இருக்கும் போது ஓரிடத்தில் புவிக்கும் சூரியனுக்கும் இடைப்பட்ட தொலைவு அதிகமாக பெருமத் தொலைவாகவும், மற்றோர் இடத்தில் புவிக்கும் சூரியனுக்கும் இடைப்பட்ட தொலைவு குறைவாக சிறுமத் தொலைவாகவும் இருக்கும். இதனால் சூரியனிலிருந்து புவியை வந்தடையும் ஒளி ஆற்றலின் அளவிலும் வெப்பத்தின் அளவிலும் மாற்றம் ஏற்படுகிறது.

புவியானது தன்னைத் தானே சுற்றும் போது அதன் அச்சில் விலகல் ஏற்பட்டு, கற்பனையான கூம்பச்சைச் சுற்றி ஒரு வட்டப் பாதையையும் மேற்கொள்கிறது. புவி வட்ட வடிவில் மேற்கொள்ளும் இந்த தள்ளாட்டச் சுற்று 26,000 ஆண்டுகளுக்கு ஒரு முறை நிகழ்கிறது. இந்த மூன்று சுற்றுகளும் ஒருங்கிணைந்து செயல்படும் போது சூரியனிடமிருந்து புவியை வந்துசேரும் வெப்பத்தின் அளவு குறைகிறது. இந்த மூன்று சுற்றுகளையும் ஒன்றிணைத்து மிலன்கோவிச் சுழற்சிகள் என்றழைக்கப்பர். மிலன்கோவிச் என்ற செர்பிய விஞ்ஞானியே இதைக் கண்டுபிடித்தார், மிலன்கோவிச் சுழற்சிகளால் புவி குளிரூட்டப்படுகிறது. கடந்த ஐந்து லட்சம் ஆண்டுகளில் ஐந்து முறை ஏற்பட்ட பனியூழிக் காலங்களுக்கான விளக்கமாக மிலன்கோவிச் கோட்பாடு அறியப்படுகிறது.

எரிமலைகளின் தாக்கம்: எரிமலைகளின் அதிகச் செயல்பாடுகளாலும், பல முறை ஏற்பட்ட எரிமலை வெடிப்புகளாலும், எரிமலைக் குழம்பு பல்லாயிரக் கணக்கான மைல் தூரம் பரவி அதன் மூலம் அதிக வெப்பம் வெளியேறுகிறது. எரிமலை வெடிப்பின் மூலம் வெளியான சாம்பல், கந்தக சல்பைடு, வளிமக் கரைசல் (aerosol) ஆகியவை ஒரு புகை மண்டலமாகி சூரியனிலிருந்து புவிக்கு வரும் வெப்பத்தைத் தடுக்கிறது. அதனால் புவியின் வெப்பம் குறைந்து

குளிரூட்டப்படுகிறது. எரிமலைக் குழம்புகளிலிருந்து மீத்தேன், கார்பன்-டை-ஆக்சைடும் அதிகளவில் வெளியிடப்படுகிறது. இந்த இரு பசுங்குடில் வாயுக்களின் அளவும் பெரிதும் அதிகரித்து புவியின் வெப்பநிலை அதிகரிக்கவும் காரணமாகிறது.

மலைகள் உருவாக்கம்: கண்டத் தட்டுக்கள் ஒன்றுடன் ஒன்று மோதுதலால் மலைகள் தோன்றுகின்றன. மலை உருவாக்கச் செயல்பாடானது வளிமண்டலத்தில் இருந்து அதிகளவு கார்பன்-டை-ஆக்சைடை எடுத்துக் கொள்கிறது. அதனால் வளிமண்டலத்தில் கார்பன்-டை-ஆக்சைடு குறைவதால் புவி குளிர்ச்சியடைகிறது. கடைசி பனியூழிக் காலமான பிலைய்ஸ்டோசீனில் புவி அதிகளவு குளிர்ச்சியடைந்ததற்குக் காரணம் இமயமலையின் தோற்றமும், வளர்ச்சியுமே. அண்டார்டிகா எப்பொழுதும் பனி உறைந்து காணப்படவில்லை. 14 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்புதான் அண்டார்டிகா முழுவதும் பனியாக உறைந்தது. வட-தென் அமெரிக்கப் பகுதியின் மலை உருவாக்கமே இதற்கு முக்கியக் காரணமாக அமைந்துள்ளது. அதே போல் ஆர்க்டிக் பனியும் 3 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்புதான் உருவாகியது. சமீபத்தில் 14ஆம் நூற்றாண்டுக்கும் 19ஆம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட பகுதியில் புவி குளிர்ச்சியடைந்துள்ளது. இது சிறுமப் பனிக்காலம் என அழைக்கப்படுகிறது. சூரியப் புள்ளிச் சுற்றின் (Sun spot cycle) விளைவாக சூரியனிலிருந்து வரும் கதிர்வீச்சின் அளவு குறைந்ததே இதற்குக் காரணம் என மாண்டர் என்ற விஞ்ஞானி விளக்கியுள்ளார். சூரியனில் கருமையான பகுதிகள் அதிகரித்தால் சூரியனின் செயல்பாடும், வெப்ப நிலையும் அதிகரிக்கும். கரும்புள்ளிகள் குறைந்து விட்டால் சூரியனின் வெப்ப நிலையும் குறைந்து விடும். 1800களில் சூரியனில் காணப்படும் கரும்புள்ளிகளின் அளவு குறைந்திருந்ததாக அவர் கண்டுபிடித்தார். அதனால்தான் அந்தக் காலகட்டத்தில் புவியின் வெப்பநிலை குறைந்துள்ளது. இது மாண்டர் சிறுமம் எனப்படுகிறது. குறிப்பாக 1618ஆம் ஆண்டு கோடைக்காலம் இல்லாததாக இருந்தது. இந்தச் சிறுமப் பனிக்காலத்தைத் தொடர்ந்து ஒரு வெப்பமான காலகட்டத்தில்தான் நாம் வாழ்ந்து வருகிறோம்.

**பசுங்குடில் விளைவு:**

ஒரு கண்ணாடிப் பெட்டி அதிகமாக வெப்பத்தை உள்வாங்கிக் கொள்ளும், ஆனால் அதே அளவிற்கு வெப்பத்தை வெளியிடாது எனவே குளிர்ப் பகுதிகளில் தாவரங்களை வளர்க்க இவை பசுங்குடில்களாக பயன்படுத்தப்படுகின்றன. இது போன்றே புவியின் வளிமண்டலத்தில் உள்ள கார்பன்-டை-ஆக்சைடு போன்ற வாயுக்கள் பசுங்குடில் போல் வெப்பத்தை வெளியிடாமல்

தக்கவைப்பதால்தான் இது பசுங்குடில் விளைவு என அழைக்கப்படுகிறது. பசுங்குடில் விளைவை முதன்முதலில் ஜோசப் ஃபுரியர் என்ற விஞ்ஞானி கண்டுபிடித்தார். பசுங்குடில் விளைவுக்கு கார்பன் டை ஆக்சைடுதான் முக்கியக் காரணம் என்பதை ஸ்வந்தே அர்ரேனியஸ் என்ற ஸ்வீடன் நாட்டு விஞ்ஞானி கண்டறிந்தார். அதன் பிறகு 1955இல் படிம எரிபொருள்களை அதிகம் பயன்படுத்துவதுதான் பசுங்குடில் வாயுக்களின் அளவு அதிகரிப்பதற்கு முக்கியமான காரணம் என்பதை கீலிங்க் என்ற விஞ்ஞானி கண்டறிந்தார். அதற்கு பிறகு 1980களில் மனிதனால் தூண்டப்பட்ட பசுங்குடில் விளைவால் ஏற்படும் காலநிலை மாற்றம் குறித்த விழிப்புணர்வு ஏற்பட்டது. ஐ.நா.வின் சூழல் அமைப்பும், உலகக் காலநிலை அமைப்பும் இணைந்து சர்வதேச அரசுகளிக்கிடையிலான காலநிலை மாற்றம் குறித்த அமைப்பு (IPCC) 1988இல் ஏற்படுத்தப்பட்டது. இவ்வமைப்பு தனித்த ஆய்வுகளை மேற்கொள்வதில்லை என்ற போதும் உலகெங்கும் காலநிலை குறித்துச் செய்யப்படும் ஆய்வுகளைத் தொகுத்து அதன் அடிப்படையில் மதிப்பீடுகளை வெளியிடுகிறார்கள். காலநிலை மாற்றத்தால் சமுதாயத்தில் என்ன பாதிப்பு ஏற்படுகிறது? பொருளாதார பாதிப்புகள் ஏற்படுகின்றனவா? அவற்றை எவ்வாறு தடுக்கலாம் என்ற நோக்கத்தின் அடிப்படையில் இவ்வமைப்பில் மூன்று வேலைக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டன. முதல் குழு இயற்பியல் அடிப்படையில் காலநிலை மாற்றம் குறித்த ஆய்வுகளைத் தொகுத்து அதன் அடிப்படையில் மதிப்பீடுகள் அளித்தது. இரண்டாம் குழு காலநிலை மாற்றம் சூழலியல் அடிப்படையில் உயிரினங்களில் ஏற்படுத்தும் தாக்கம் குறித்த ஆய்வுகளின் மதிப்பீடுகளை அளித்தது. மூன்றாம் குழு காலநிலை மாற்றத்தால் ஏற்படும் தாக்கத்தை எவ்வாறு குறைக்கலாம் என்பது குறித்த ஆய்வுகளின் மதிப்பீடுகளை அளித்தது. 2014இல் இவை அனைத்தும் சமர்ப்பிக்கப்பட்டன. இதன் அடிப்படையில்தான் விழிப்புணர்வு ஏற்படுத்தியதற்காக 2007இல் ஐபிசிசிக்கும், முன்னாள் அமெரிக்கத் துணை அதிபர் அல்கோருக்கும் நோபல் பரிசு அளிக்கப்பட்டது. மனிதனால் தூண்டப்பட்ட காலநிலை மாற்றம் அறிவியல் அடிப்படையில் உண்மை என்பதை இவற்றிலிருந்து அறிய முடியும்.

மனிதர்கள் தோன்றுவதற்கு முன் ஏற்பட்ட காலநிலை மாற்றத்தினால் உலகத்தில் இது வரை 5 மிகப் பெரும் பேரழிவுகள் ஏற்பட்டுள்ளன. இவை பல மில்லியன் ஆண்டுகளில் ஏற்பட்டவை. 5 பில்லியன் ஆண்டுகளில் 5 மிகப்பெரும் பேரழிவுகள் ஏற்பட்டுள்ளன. நாம் வாழும் செனோசோயிக் ஊழிக் காலத்தில் ஒரு குறுகிய காலத்தில் வெறும் 150 ஆண்டுகளிலேயே ஒரு பேரழிவு உண்டாவதற்கான சூழல் மனிதர்களால் உருவாக்கப்பட்டுள்ளது, பெருமளவு காடுகள்

அழிக்கப்பட்டதால் உயிரிகளின் பன்மைத்துவம் குறைந்து வருகிறது. இதே நிலை தொடர்ந்தால் ஒரு ஆறாவது பேரழிவு உலகம் முழுவதும் ஏற்படும். தொடர்ந்து இயக்கத்தில் உள்ள புவிக்கு இது இழப்பில்லை. மனிதனே அழிந்து விட்டாலும் மிகவும் நுண்ணிய சிறு உயிர்களால் நீடித்திருக்க முடியும். இல்லையென்றாலும் வேறு உயிரினங்கள் புதிதாக உருவாகலாம். ஆனால் இத்தனை ஆண்டுக் காலம் மனித இனம் அரும்பாடுபட்டு உருவாக்கிய அரிய பல கண்டுபிடிப்புகளும், பண்பாடும், மனித வரலாறும் சுவடில்லாமல் அழிய நாமே காரணமாக இருக்கக் கூடாது. ஆறறிவுடைய மனிதன் ஆறாவது பேரழிவு ஏற்படக் காரணமாக இருக்கலாமா?. இந்த ஆறாவது பேரழிவு ஏற்படாமல் பாதுகாக்க வேண்டிய பொறுப்பும் கடமையும் மனித சமூகத்திடம் உள்ளது. எனவே இதைத் தடுப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்வோம். காலநிலை மாற்றத்தைக் கட்டுக்குள் வைப்பதற்கான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்வோம்.

காலநிலை மாற்றத்திற்கு முக்கியமான காரணங்கள் என்னவென்று இது வரை பார்த்தோம். இதனுடன் மிகவும் ஆர்வம் ஏற்படுத்தும் ஒரு துறையான தொன்மக் காலநிலையியல் குறித்தும் அறிந்து கொள்வோம்.

தொன்மக் காலநிலையியலை ஆய்வு செய்வோர் தொன்மக் காலநிலையாளர் என அழைக்கப்படுகின்றனர். புவியில் காணப்படும் உயிர்ப் படிமங்களைப் பற்றி நாம் அறிந்திருப்போம். நாம் பழங்காலத்திற்கு மீண்டும் செல்ல இயலாது. ஆனால் பழங்காலம் விட்டுச் சென்றுள்ள தடயங்களின், பதிவுகளை ஆய்வு செய்து தகவல்கள் பெற முடியும் என்ற அடிப்படையில் தொன்மக் காலநிலை ஆய்வுகள் செய்யப்படுகின்றன. இவற்றிலிருந்து நிறைய புதிய தகவல்கள் கண்டறியப்பட்டுள்ளன. அதற்கு அவர்கள் பல மாதிரிகளை பயன்படுத்துகிறார்கள். குறிப்பாக ஒரு செல் உயிரிகளான ஃபொராம்ஸ் என்ற உயிரினம் ஓடுடைய சிறு உயிரிகளையும், டையாடம்ஸ் ஓடுடன் கூடிய பாசியையும் அதிகம் பயன்படுத்துகிறார்கள். தண்ணீரை $H_2O$ எனக் குறிப்பிடுகிறோம், அதில் ஆக்சிஜன் உள்ளது. இந்த உயிரிகள் விட்டுச் சென்ற ஓட்டிலுள்ள ஆக்சிஜன் ஐசோடோப்புகளின் தன்மையையும், அளவுகளையும் வைத்து அவற்றின் காலகட்டம் என்ன என்பதைக் கண்டறிந்துள்ளார்கள். அப்பொழுது என்ன வெப்ப நிலை நிலவியது என்பது, அதில் உள்ள ஆக்சிஜனின் கனமான ஐசோடோப்புகளுக்கும், இலேசான ஐசோடோப்புகளுக்கும் இடையிலான விகிதத்திலிருந்து கண்டறியப்படுகிறது. கனமான ஐசோடோப்புகளின் நிலைத் தன்மை அதிகம், வெப்பநிலை அதிகமாகும் போது இலேசான ஐசோடோப்புகள் குறைந்து விடும்,

இதன் அடிப்படையில் வெப்பநிலையைக் கணக்கிடுகிறார்கள்.

மரங்களில் உள்ள ஆண்டு வளையங்களை ஆய்வு செய்வதன் மூலம் பல புதிய தகவல்கள் பெறுகின்றனர். ஆண்டு வளையங்களுக்கிடையே உள்ள பருமன். அந்தக் குறிப்பிட்ட ஆண்டில் எவ்வளவு மழை பொழிந்தது, என்ன வெப்பநிலை நிலவியது என்பதையும், தீயால் ஏற்படும் வடுக்கள் உள்ளனவா என்பதிலிருந்து அந்த ஆண்டில் தீ ஏற்பட்டதா என்பதையும் அறிந்து கொள்கிறார்கள்.

மகரந்தம், ,பறவையின் எச்சம், எனப் பல்வேறு படிம மாதிரிகளைப் பயன்படுத்தி ஆய்வுகள் செய்கிறார்கள். ஈல் மீனைப் போன்று தொன்மையில் இருந்த கொனொடொன்ட் என்ற மீனின் பற்கள் மிக முக்கியமான மாதிரிகளாக இந்த ஆய்வுகளுக்குப் பயன்படுத்தப்படுகிறது.

ஆர்ட்டிக் கிரீன்லாந்து, அண்டார்டிக் பகுதிகளில் நிரந்தரமாக உறைந்து காணப்படும் பனி மலைகளின் ஆழத்திலிருந்து 'ஐஸ் கோர்' எனப்படும் நீண்ட பனிக்கம்பிகளை மாதிரிகளாக வெட்டி எடுத்து அவற்றை ஆய்வு செய்கின்றனர். ஒவ்வொரு ஆண்டும் பனிப் பொழிவு ஏற்படும் போது, ஒரு வருடத்தில் பொழியும் பனியெல்லாம் ஒன்று சேர்ந்து ஒரு அடுக்காகிறது. அது போல் அடுத்தடுத்து அடுக்குகள் அமைந்துள்ளன. ஒவ்வொரு அடுக்கிலும் அந்தக் காலக்கட்டத்திற்கான அரிய தகவல்கள் சேமிக்கப்பட்டுள்ளன. அதை ஆய்வு செய்வதன் மூலம் அப்பொழுது என்ன வெப்பநிலை நிலவியது. வேறு உயிரினங்கள் இருந்தனவா எனப் பல்வேறு தகவல்கள் பெறப்படுகின்றன. 'ஐஸ் கோர்'களில் காணப்படும் உறைந்த வாயுக் குமிழிகளின் மூலம் காற்றில் இருந்த மாசுக்கள் குறித்தும் தரவுகள் பெற முடிகிறது.

இந்த உலகமே ஒரு திறந்த புத்தகமாக உள்ளது. இந்தப் புத்தகத்தில் படிக்கப்படாத பல பக்கங்கள் உள்ளன. ஒரு சின்ன மணல் துகளிலிருந்து, நீர்த்துளி, பனிப்பாறை என அனைத்திலும் இந்தப் புவியின் கதைகள் ஒளிந்துள்ளன. இன்னும் நமக்குத் தெரியாத, சொல்லப்படாத பல கதைகள் உள்ளன. தொன்மக் காலநிலையியல் கூறும் கதைகள் வெறும் கட்டுக்கதைகள் அல்ல. அறிவியல் அடிப்படையிலான உண்மைகள்.

(தொடரும்)

ஆபேல் இதழைப் படிக்க
கீழுள்ள இணைப்பை சொடுக்கவும்

https://drive.google.com/file/d/1JqdBNpzmtSAC52hq9I_qGhrM7nFOrZT6/view?usp=sharing

## தமிழ்த் தேசிய விடுதலை இயக்கம்

பொதுச்செயலாளர்: தோழர் ***தியாகு***

அன்பிற்குரியீர்! வணக்கம்.

தமிழ்த் தேசிய விடுதலை இயக்கத்தின் அரசியல்-கருத்தியல் நிலைப்பாடுகளையும் நடைமுறைச் செயல்பாடுகளையும் தொடர்ந்து கவனித்து வருவீர்கள் என நம்புகிறேன். தமிழ்த் தேசிய விடுதலைக்கும் சமூக நீதிக்குமான கொள்கைவழியைத் தொடர்ந்து பற்றி நிற்கிறோம். பதவி அரசியலைப் புறந்தள்ளிப் போராட்ட அரசியலை உறுதியாகக் கடைப்பிடிக்கிறோம். மக்கள் நலன் கருதி ஒன்றுபட்ட இயக்கங்களில் தொடர்ந்து எங்களால் இயன்ற பங்களிப்பைச் செய்து வருகிறோம். உணர்வு அரசியலில் மயங்காமல் அறிவார்ந்த அரசியல் களத்தில் ஊன்றி நிற்கிறோம். தமிழீழம் உள்ளிட்ட தமிழ் மக்களின் உரிமைப் போராட்ட அரசியலில் எமது இடம் சிறிதென்றாலும் இன்றியமையாத ஒன்றென்னும் அறிந்தேற்புப் பெற்றுள்ளோம்.

எம் கொள்கை நிலைப்பாடுகளையும் கருத்துகளையும் திங்கள்தோறும் வெளிவரும் ***உரிமைத் தமிழ்த்தேசம்*** மின்னிதழில் உங்கள் பார்வைக்குப் படைத்து வருகிறோம். ***அறிவுக்குரல்*** வாயிலாகவும் புரட்சியச் சிந்தனைகளை விரிய விதைத்து வருகிறோம். எம் விடாமுயற்சியின் பயனாக இயக்கம் சீராகவும் உறுதியாகவும் வளர்ந்து வருகிறது. அறிவியல் நோக்கும் ஈகவுணர்வும் உழைப்பார்வமும் கொண்ட புதிய ஆற்றல்களை இயக்கத்தின் பால் ஈர்த்துள்ளோம்.

ஆனால், இன்றைய அரசியல் சூழலின் தேவைகளை நிறைவு செய்ய எமது வலிமையும் வளர்ச்சியும் போத மாட்டா என்பதை உணர்ந்துள்ளோம். இயக்கத்தின் பரவலான வளர்ச்சிக்கும் மக்கள்-பணிக்கும் மேலும் முழுநேர, பகுதிநேர ஊழியர்களைக் களமிறக்க வேண்டும். சமூக ஊடகங்களை இன்னும் விரிவாகப் பயன்படுத்தவும், மெய்ந்நிகர் அரசியல் செயல்நிரலைக் கடைப்பிடிக்கவும் தொடர்ச்சியான பொருள்வளம் தேவைப்படுகிறது. இதற்கென எம் தலைமைக் குழுவில் பேசி முடிவெடுத்து இந்தத் திங்கள் பங்களிப்புத் திட்டத்தை அறிவிக்கிறோம்:

எம் இயக்கப் பணிகளில் உங்களுக்கு நம்பிக்கையும் அக்கறையும் இருக்குமானால் தொடர்ந்து ரூ.100/- முதல் 2000/-க்குள் திங்கள் பங்களிப்பாகத் தாருங்கள். இது ஓராண்டுக்கான திட்டமாகும். இதற்கான படிவம் நிரப்பித் தந்து இத்திட்டத்தில் இணைந்து கொள்ள வேண்டுகிறேன். சிறுதுளி பெருவெள்ளம்!

தமிழர் விடுதலைப் போர்முழக்கம்! சமூகநீதித் தமிழ்த்தேசம்!

நன்றி!

தோழமையுடன்

தியாகு / சென்னை /04/05/2020

**தமிழ்த் தேசிய விடுதலை இயக்கம்**

பொதுச்செயலாளர்: ***தியாகு***

**திங்கள் பங்களிப்புப் படிவம்**

| | |
|---|---|
| **பெயர்:** | |
| **ஊர் / முகவரி:** | |
| **தொலைபேசி / புலனம் எண்:** | |
| **மின்னஞ்சல் முகவரி:** | |
| **திங்கள் பங்களிப்பு:** | **ரூ.** |
| **திங்கள்தோறும் பங்களிப்பு நாள்:** | |
| **பங்களிப்பு வழி (நேரில்/ வைப்பகக் கணக்கு/ ஏனைய வழி)** | |
| **இயக்கத்திடம் உங்கள் எதிர்பார்ப்பு:** | |

பதிவு **எண்** :R.Dis. No. 1964/2014